இயல் இரண்டு

# கதையியல்

B6M84Z




தமிழ் இலக்கியங்கள் தொடக்ககாலத்தில் கவிதை வடிவங்களாகவே வெளிப்பட்டன. அக்காலகட்டத்தில் குறிப்பிட்ட செயல் அல்லது நிகழ்வைக் கதையாக்கிப் பேசும் வழக்கம் இருந்தது. பேச்சு வழக்கில் இருந்த கதைகள் எழுத்தாகப் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்பட்டபோதும் அவை செய்யுள் வடிவிலேயே இருந்தன. பேச்சு மொழியிலும் உரைநடையிலும் இலக்கியங்களைப் படைக்கலாம் என்னும் நிலை ஐரோப்பியர்களின் வருகைக்குப்பின் தோன்றியது. அவர்களின் நடையை உள்வாங்கித் தமிழில் புனைகதைகள் படைக்கப்பட்டன.

இப்பாடப்பகுதியில் தமிழ்ப்புதினங்களின் தோற்றம், வளர்ச்சி குறித்து விளக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே புதினம் எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதன் அமைப்புமுறை, வடிவம், உத்திகள் போன்ற கூறுகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இப்பகுதியில் மாணவருக்கு மிகச்சிறந்த வாசிப்பனுபவத்தை ஏற்படுத்தும் புதினம், குறும்புதினம், சிறந்த புதினங்கள் சிலவற்றின் பகுதிகள், இந்தியமொழிப் புதினம், உலகமொழிப் புதினம் ஆகியன தரப்பட்டுள்ளன.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழ்ப் புதினத்தின் தோற்றம், வரலாறு, இன்றைய வளர்ச்சிப்போக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.
- புதினத்தின் வடிவம், கதைப்பின்னல் மற்றும் எழுதும்முறை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல்.
- பல்வேறு பொருண்மைகளில் அமைந்த புதினங்களை வாசித்தல்.
- புதினங்களை எழுதுதல், திறனாய்வு செய்தல் ஆகிய திறன்களைப் பெறுதல்.

## பாடப் பகுதி

- புனைகதை இலக்கியம் ஓர் அறிமுகம்
- புதினம் எழுதும் கலை
- கல்மரம் – ஜி. திலகவதி
- மாறுதல் – அசோகமித்திரன்
- புத்தம் வீடு – ஹெப்சிபா ஜேசுதாசன்
- சாயாவனம் – சா. கந்தசாமி
- செம்மீன் – தகழி சிவசங்கரன்
- தாய் – மார்க்ஸிம் கார்க்கி



12th ADVNCEI Tamil - Chap 1&2.indd 47 04-04-2020 15:03:55

இயல் இரண்டு

# புனைகதை இலக்கியம் – ஓர் அறிமுகம்

தமிழ் உரைநடை இலக்கியம் சார்ந்த கோட்பாடுகள் தொல்காப்பியர் காலம் முதலாகவே இருந்து வந்துள்ளன. பாட்டிடை வைத்த குறிப்பு, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரை வகை என உரைநடை சார்ந்த எண்ணங்களைத் தமிழிலக்கிய வரலாற்றின் காலந்தோறும் கண்டுகொள்ள முடிகிறது. எனினும், மேலை இலக்கியங்களின் தொடர்புக்குப் பின்தான் தமிழில் முழுமையான உரைநடை இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

மேலை நாட்டினர் உருவாக்கிய உரைநடை வகையிலான புதினங்களின் தாக்குறவு தமிழிலும் காணப்பட்டது. ஐரோப்பியர்கள் தங்களின் தொடக்கக் காலப் புதினங்களுக்கு சரித்திரம் என்னும் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியது போலவே தமிழ்ப் படைப்பாளிகளும், வரலாறு என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளனர். புனைகதை வகையில் புதினமும் ஒன்று. இம்மேனாட்டுத் தாக்கம் நமது தொடக்ககாலப் புதினங்களையும் ஆட்கொண்டது. இவ்வாறு தமிழில் தோன்றிய தொடக்கக் கால முயற்சிகள் தனிநபர் சார்ந்த வரலாற்று இலக்கியமாக அல்லது அத்தனிநபர் சமூகத்தோடு கொண்ட உறவுகளைப் பேசும் இலக்கியமாகப் புதினங்கள் அமைந்தன.

### அறிவோம் தெளிவோம்

தமிழ்ப் புதின வகைக்கான பாரதியாரின் பங்களிப்பாக அவரின் சந்திரிகையின் கதை (1920) அமைகிறது. முற்றுப்பெறாமலேயே முதல்பாகத்துடன் முடிந்துவிடுகிற இப்புதினம் பாரதியின் இறுதிக்கால நூலாக அறியப்படுகிறது.

## தமிழ்ப் புதினங்களின் தோற்றம்

தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தை (1879) மாயூரம் வேதநாயகர் எழுதினார். இப்புதினம் ஒரு பொதுவான கதைசொல்லும் பாங்கில் சுவையான நிகழ்வுகளைக் கோத்து எழுதப்பட்டது. அதன்பின் ராஜமய்யரால் எழுதப்பட்ட கமலாம்பாள் சரித்திரமும் (1896) அ.மாதவையாவால் எழுதப்பட்ட பத்மாவதி சரித்திரமும் (1898) தமிழின் தொடக்ககாலப் புதினங்களாக அறியப்படுகின்றன.

அ. மாதவையா எழுதிய முத்து மீனாட்சி என்னும் புதினம் சமூக சீர்திருத்தப் புதினங்களுக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்தது எனலாம். வடுவூர்துரைசாமி, ஆரணி குப்புசாமி, ஜே.ஆர்.ரங்கராஜு முதலியோரின் புதினங்கள் அக்கால வாசகர்களால் விரும்பிப் படிக்கப்பட்டன. வை.மு.கோதைநாயகி அம்மாள் பெண்களுக்கான புதினங்களை எழுதினார்.

தமிழ்ப் புதின இலக்கிய வளர்ச்சியில் பெரியதொரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர் கல்கி. அன்று நிகழ்ந்து வந்த இந்திய தேசிய எழுச்சி, தமிழ்க் கலாச்சார மறுமலர்ச்சி, சமூக சீர்திருத்த நோக்கு ஆகியவற்றைத் தம் படைப்புகளில் இணைத்துக் கொண்டார். நாட்டு விடுதலை உணர்வை மையமாகக் கொண்ட தியாகபூமி, அலை ஓசை, கள்வனின் காதலி, மகுடபதி, பொய்மான் கரடு ஆகியன கல்கியின் சமூகப் புதினங்களில் குறிப்பிடத்தக்கவை.

## வரலாற்றுப் புதினங்கள்

வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்படும் புதினங்கள் வரலாற்றுப் புதினங்கள் ஆகும். வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும் முக்கிய வரலாற்று நாயகர்களையும் மையப்படுத்திக் கற்பனைப்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 48 04-04-2020 15:03:55

பாத்திரங்களோடு புனையப்படுபவை இப்புதினங்கள். கல்கியின் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகிய புனைவுகள் இவ்வகையில் அமைந்தவை.

சாண்டில்யனின் ராஜதிலகம், கலைஞர் கருணாநிதியின் ரோமாபுரிப் பாண்டியன், கண்ணதாசனின் சேரமான் காதலி போன்றவை சிறந்த வரலாற்றுப் புனைவுகளாக அறியப்படுகின்றன.

## இலட்சியவாதப் புதினங்கள்

சமூக சீர்திருத்தக் கருத்துகளையும் இலட்சியவாதத்தையும் முதன்மையாகக் கொண்டு இலட்சியவாதப் புதினங்கள் எழுதப்பட்டன. காந்திய இலட்சியங்களை முன்னிலைப்படுத்தி தமிழில் புதினங்கள் எழுதிய முன்னோடி காசி. வேங்கடரமணி. அவருடைய தேச பக்தன் கந்தன், முருகன் ஓர் உழவன் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வகைப் புதினங்களை எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவராக மு.வரதராசனாரும் அறியப்படுகிறார். இவரது அகல் விளக்கு, கள்ளோ? காவியமோ?, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள் போன்றவை இலட்சியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றவை. சித்திரப்பாவை புதினத்திற்காக ஞானபீட விருது (1975) பெற்ற அகிலன் புதினங்கள் இலட்சியவாதத்தைப் பேசின. இலட்சியவாதிகளான நாயக, நாயகிகளின் சித்திரிப்புகளை நா.பார்த்தசாரதியின் படைப்புகளில் காணலாம்.

## நவீனப் புதினங்கள்

புதினத்திற்கான மரபார்ந்த கட்டமைப்புகளைத் தகர்த்து, இயல்புவாதம் பேசுவன நவீனப் புதினங்கள். நடைமுறை வாழ்வில் மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் அக மற்றும் புற வாழ்வுச் சிக்கல்களை இயல்பான மொழியில் இப்புதினங்கள் பேசுகின்றன. இவ்வகைப் புதினங்கள் மக்களின் வாழிடங்களைப் பின்னணியாகக் கொண்டு எதார்த்தத் தன்மையோடு படைக்கப்பட்டவை. இயல்பான சித்திரிப்புகளின் மூலம் கிராமத்து வாழ்க்கையைக் கூறும் புதினங்களைத் தந்தவர் ஆர்.ஷண்முகசுந்தரம். இவரது நாகம்மாள், பூவும் பிஞ்சும், அழியாக்கோலங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன. உளவியல் அடிப்படையிலான மனவோட்டங்களை எம். வி.வெங்கட்ராமின் புனைவுகள் பேசுகின்றன.

## முற்போக்குப் புதினங்கள்

பொதுவுடைமைச் சமூக விடுதலை நோக்கத்தைத் தங்கள் இலக்காகக் கொண்ட படைப்பு முற்போக்கு இலக்கியம் என்றழைக்கப்படுகிறது. பொதுவுடைமைப் பேசும் ரஷ்ய இலக்கியங்கள் போன்ற மேலைநாட்டு இலக்கியங்களின் வருகையால் தமிழிலும் இவ்வகை இலக்கியங்கள் தோன்றின. இப்பொருண்மையை உள்ளடக்கமாகக் கொண்டு படைக்கப்பட்ட புதினங்களை முற்போக்குப் புதினங்கள் எனலாம்.

தமிழில் முற்போக்குப் புதினங்களை முதலில் தந்தவர் தொ.மு.சி.ரகுநாதன். அவர் எழுதிய பஞ்சும் பசியும் என்ற புதினம் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்ட வாழ்வைப் பற்றிப் பேசுகிறது. முற்போக்குச் சிந்தனையாளரான ஜெயகாந்தனின் ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், சில நேரங்களில் சில மனிதர்கள், கங்கை எங்கே போகிறாள், சுந்தரகாண்டம், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்ற புதினங்கள் குறிப்பிடத்தகுந்தவை.

## வட்டார வழக்குப் புதினங்கள்

வட்டாரப் புதினம் என்பது, குறிப்பிட்ட ஒரு பகுதியைக் களமாகக்கொண்டு, அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் குறிக்கோளுடன் எழுதப்படுவதாகும். இப்புதினங்கள், தாம் எழுதப்படும் வட்டாரத்தின் மொழியிலேயே அமைந்திருப்பது சிறப்பு. வட்டாரப் புதினங்கள் தமிழகத்தின் பல்வேறு வட்டாரங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை.

கொங்கு வட்டாரம், கரிசல் வட்டாரம், நாஞ்சில் வட்டாரம், நெல்லை வட்டாரம், முகவை வட்டாரம், மதுரை வட்டாரம், தஞ்சை வட்டாரம் எனத் தமிழக வட்டாரங்களை வகைப்படுத்தலாம்.

வட்டாரப் புதினம் எழுதும் வழக்கை ஆர். சண்முக சுந்தரம் தோற்றுவித்தார். அவரின் நாகம்மாள், அறுவடை, கி.ராஜநாராயணனின் கோபல்ல கிராமம், பெருமாள்முருகனின் ஏறுவெயில, சோலை சுந்தர பெருமாளின் செந்நெல், சுப்ரபாரதிமணியனின் சாயத்திரை போன்ற புதினங்கள் வட்டாரப் புதினங்களாக அறியப்படுகின்றன.

### விளிம்புநிலை வாழ்வியல் புதினங்கள்

வாழ்க்கை அனுபவங்கள் தந்த நேரடியான வலிகளையும் தங்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் அவற்றிலிருந்து மீளத்துடிக்கும் உணர்வுகளையும் பதிவு செய்பவை விளிம்புநிலை வாழ்வியல் படைப்புகள். விளிம்புநிலை மாந்தர்களின் உரிமைகளைப் பேசும் புதினங்கள் தமிழில் பெருவாரியாகத் தோன்றியுள்ளன.

பாமா எழுதிய கருக்கு, சங்கதி, வன்மம் போன்றவை விளிம்புநிலைப் படைப்புகளில் முக்கியமானவை. நுட்பமான, நம்பகமான கதாபாத்திர வார்ப்போடு விளிம்புநிலை பற்றி இமையத்தின் படைப்புகள் பேசுகின்றன. 'கோவேறு கழுதைகள்' இவரது முதல் படைப்பு. செடல், ஆறுமுகம், எங்கதெ, செல்லாத பணம் ஆகியன இவரது முக்கியமான புதினங்கள்.

சிவகாமியின் ஆனந்தாயி, பழையன கழிதலும், சோ.தர்மனின் கூகை, தூர்வை, ஸ்ரீதர கணேசனின் உப்புவயல், அழகியபெரியவனின் தகப்பன்கொடி போன்ற புதினங்கள் விளிம்புநிலை வாழ்வியலைப் பேசுவன.

### பெரும் வாசகப் பரப்பு – பொழுதுபோக்கு

தமிழில் வேடிக்கை, விளையாட்டு, குற்றம், மர்மம், காதல் ஆகியவை கலந்த வாசிப்புச் சுவைமிக்க படைப்புகள் பெருமளவில் விற்பனையான இதழ்களில் வெளிவந்தன. இவ்வகைப் படைப்புகளைத் தந்ததில் புகழ்பெற்றவராக சுஜாதா விளங்குகிறார். சுஜாதாவின் புனைவு நடை மிக நவீனமானது. என் இனிய இயந்திரா, மீண்டும் ஜூனோ போன்ற அறிவியல் புனைவுப் புதினங்களும் கரையெல்லாம் செண்பகப்பூ, கனவுத் தொழிற்சாலை, ரத்தம் ஒரே நிறம் போன்ற புதினங்களும் குறிப்பிடத்தக்கவை.

மனச்சலனங்களையும் உறவுச் சிக்கல்களையும் மையமாகக் கொண்ட படைப்புகளை எழுதியவர் பாலகுமாரன். ராஜராஜசோழனைப் பற்றி இவர் எழுதிய உடையார் என்னும் வரலாற்றுப் புதினம் இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்தது.

### பெரும் வாசகப்பரப்பு–இலக்கியத்தன்மை

விஷ்ணுபுரம், பின்தொடரும் நிழலின் குரல், காடு, ரப்பர், ஏழாம் உலகம், கொற்றவை போன்ற படைப்புகளின் மூலம் புதின இலக்கியத்தின் பன்முகத் தன்மையை வெளிக்கொணர்ந்தவர் ஜெயமோகன். மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்ட 'உபபாண்டவம்', மதுரை மாவட்ட குற்றப்பரம்பரைப் பற்றிப் பேசும் 'நெடுங்குருதி' போன்றவை எஸ். ராமகிருஷ்ணனின் முக்கியமான புதினங்கள். இவரது சஞ்சாரம் புதினம் 2018ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றது.

பெருமாள்முருகனின் நிழல்முற்றம், கூளமாதாரி, மாதொருபாகன் ஆகிய படைப்புகள் முக்கியமானவை. இவர்களோடு பாவண்ணன், தமிழவன், ஜோ டி குரூஸ் போன்றோரின் படைப்புகள் இலக்கியத்தன்மை வாய்ந்த பெரும் வாசகப்பரப்பினைக் கொண்டவை.

### பின்நவீனத்துவ புதினங்கள்

கோணங்கியின் பாழி, பிதிரா போன்றவை புதின இலக்கியத்தின் நவீன போக்குகளுக்காக அறியப்பட்டவை. சாருநிவேதிதாவின் எக்ஸிஸ்டென்ஷியலிசமும் பேன்சி பனியனும், ஜீரோ டிகிரி ஆகிய படைப்புகள் இத்தன்மை வாய்ந்தவை. பிரேம், ரமேஷ் எழுதிய எரிக்கப்பட்ட பிரதிகளும் புதைக்கப்பட்ட மனிதர்களும், சொல் என்றொரு சொல் போன்ற புதினங்கள் பின்நவீனத்துவ சொல்முறையைக் கொண்டவை. எம்.யுவன் எழுதிய குள்ளச்சித்தன் சரித்திரம், பகடையாட்டம் எழுதிய ஆகிய புதினங்களில் பின்நவீனத்துவ நுட்பங்களைக் காணலாம். எம்.ஜி.சுரேஷ் புதினங்களும் பின்நவீனத்துவ வரிசையில் சேரும்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 50 04-04-2020 15:03:56

சு. வேணுகோபாலன், கண்மணி குணசேகரன், முருகவேள், உமா மகேஸ்வரி, சல்மா, லக்ஷ்மி சரவணக்குமார், வினாயகமுருகன், கரன் கார்க்கி, சரவணன், சந்திரன் போன்றோர் அண்மைக்காலத்தில் புதின முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் இளம் எழுத்தாளர்கள்.

இவ்வாறாகத் தமிழின் காவிய மரபின் தளத்திலிருந்து கதை சொல்லிப் போகும் உரைநடைப் பதிவாகவும் தமிழுக்கு வந்த மேலை மொழிப் புதினங்களின் தாக்கத்தாலும் தமிழில் புதின எழுத்துகள் தொடங்கின. இக்காலத்தில் தமிழர் வாழ்வின் அனைத்துப் பண்பாட்டுக்கூறுகளின் ஊடாகத் தமிழ்ப் புதினங்கள் செழும் படைப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. நவீன வாழ்வின் விரைவுமிகுந்த இக்காலக்கட்டத்திலும் ஆயிரமாயிரம் பக்கங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் பெரும் புதினங்களும் அவற்றிற்கு உள்ள வாசக ஈர்ப்பும் தமிழ்ப் படைப்புலகை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதாக அமைந்துள்ளன.

**படிப்போம் சுவைப்போம்**

## சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினங்கள்

| வ.எண் | ஆண்டு | நூல் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 1 | 1956 | அலை ஓசை | கல்கி |
| 2 | 1961 | அகல் விளக்கு | மு. வரதராசன் |
| 3 | 1963 | வேங்கையின் மைந்தன் | அகிலன் |
| 4 | 1971 | சமுதாய வீதி | நா. பார்த்தசாரதி |
| 5 | 1972 | சில நேரங்களில் சில மனிதர்கள் | ஜெயகாந்தன் |
| 6 | 1973 | வேருக்கு நீர் | ராஜம் கிருஷ்ணன் |
| 7 | 1977 | குருதிப் புனல் | இந்திரா பார்த்தசாரதி |
| 8 | 1980 | சேரமான் காதலி | கண்ணதாசன் |
| 9 | 1984 | ஒரு காவிரியைப் போல | லக்ஷ்மி |
| 10 | 1990 | வேரில் பழுத்த பலா | சு. சமுத்திரம் |
| 11 | 1991 | கோபல்லபுரத்து மக்கள் | கி. ராஜநாராயணன் |
| 12 | 1992 | குற்றாலக் குறிஞ்சி | கோவி. மணிசேகரன் |
| 13 | 1993 | காதுகள் | எம்.வி. வெங்கட்ராம் |
| 14 | 1994 | புதிய தரிசனங்கள் | பொன்னீலன் |
| 15 | 1995 | வானம் வசப்படும் | பிரபஞ்சன் |
| 16 | 1997 | சாய்வு நாற்காலி | தோப்பில் முகமது மீரான் |
| 17 | 1998 | விசாரணைக் கமிஷன் | சா. கந்தசாமி |
| 18 | 2001 | சுதந்திர தாகம் | சி.சு. செல்லப்பா |
| 19 | 2003 | கள்ளிக்காட்டு இதிகாசம் | வைரமுத்து |
| 20 | 2005 | கல்மரம் | ஜி. திலகவதி |
| 21 | 2007 | இலையுதிர் காலம் | நீல பத்மநாபன் |
| 22 | 2011 | காவல் கோட்டம் | சு. வெங்கடேசன் |
| 23 | 2012 | தோல் | டி. செல்வராஜ் |
| 24 | 2013 | கொற்கை | ஜோ டி குரூஸ் |
| 25 | 2014 | அஞ்ஞாடி | பூமணி |
| 26 | 2015 | இலக்கியச்சுவடுகள் | ஆ. மாதவன் |
| 27 | 2018 | சஞ்சாரம் | எஸ். ராமகிருஷ்ணன் |
| 28 | 2019 | சூல் | சோ. தர்மன் |



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 51 04-04-2020 15:03:56

# புதினம் எழுதும் கலை

புனைகதை இலக்கியம் எழுதப்படும் வடிவம், விவாதிக்கப்படும் மையப்பொருள் சார்ந்து சிறுகதை, புதினம் எனப் பிரித்துப் பேசப்படுகின்றது. உரைநடையில் இலக்கியம் எழுதப்படுவதற்கு முன்பிருந்த தனிக்கவிதைகளே சிறுகதைகளாகவும், கதை தழுவிய காப்பியங்களே புதினங்களாகவும் மாற்றம் பெற்றன என்றொரு பார்வை உண்டு.

புதினம் என்பது, முழுமையான வாழ்வுப் போக்கை அனைத்து அறங்களோடும் சொல்லவந்த வடிவம். அதனால், ஒரு புதினம் நிகழும் களத்தின் அனைத்துக் கூறுகளுக்குள்ளும் சூழல்களுக்குள்ளும் கால இடைவெளிகளுக்குள்ளும் ஒரு புதின ஆசிரியன் தனது படைப்போட்டத்தை நிகழ்த்த வேண்டியுள்ளது. சிறுகதை என்பது ஒரு மனநிலையை ஒரு சம்பவத்தை என வாழ்வின் ஒரு புள்ளியை மட்டும் சொல்லவந்த வடிவம். வாழ்வின் விரிந்துசெல்லும் பரப்புகளை விரித்தும் தொகுத்தும் சொல்லி ஒரு முழுமையான பார்வையை வாசகனுக்குத் தரும் வடிவம் புதினம்.

## உள்ளடக்கமும் வடிவமும்

ஒரு புதினத்தின் உள்ளடக்கம் எத்தளத்தில் வேண்டுமானலும் இருக்கலாம். வாழ்வியல் பிரச்சினைகளை ஆராயும் களங்களாக, இன வரைவியல் பதிவுகளாக,தத்துவ தரிசனங்களாக, இலக்கிய மறு உருவாக்கங்களாக, வரலாற்றுப் பதிவுகளின் படைப்பாக்கங்களாக அமையலாம். பொதுவாகப் புதினத்தின் உள்ளடக்கங்கள் அறம் பேசுதல், உழைப்பைப் பேசுதல், உளவியலைப் பேசுதல், வட்டாரம் பேசுதல், இடப்பெயர்வு பேசுதல், உறவு சிக்கல் முரண்களைப் பேசுதல் என அமைகின்றன.

ஒரு புதினத்தின் உள்ளடக்கத்தை வலிமையாய் வெளிப்படுத்துவதில் அதன் வடிவத்தின் பங்கு மிகவும் இன்றியமையாதது. வடிவம் என்பது சொல்லப்படும் முறையின் ஒழுங்கும் ஒழுங்கின்மையும் எனச் சொல்லலாம். புதினம் வாழ்வின் ஒரு துளியை ஒரு புள்ளியை ஒரு தரப்பை மட்டும் சொல்லவந்த வடிவம் அன்று. அது, அதன் கருவைச் சார்ந்த அனைத்தையும் வாசகர்கள் முன் தொகுத்து முன்வைக்க முனைகிறது. அதன்மூலம் வாசகர்கள் அனைத்தையும் தமக்குள் கண்டு ஆராய்ந்து, தம் நோக்கை உருவாக்கிக் கொள்ள வழிவகுக்கிறது.

## புதினமென்னும் புனைகதையின் கூறுகள்

நமது மொழியைப் பயன்படுத்திப் புதின ஆசிரியர் எழுதிய நூலொன்று அச்சிடப்பெற்று புதினம் என்னும் வகைப்பாட்டுக்குரியதாக நமக்குக் கிடைக்கிறது. அந்த முழுமையான நூலுக்குள் கண்ணுக்குத் தெரியும் கூறுகளும் கண்ணால் பார்த்துப் புரிந்துகொள்ள முடியாத கூறுகளும் இருக்கின்றன. சில புதினங்கள் பாகங்களாகப் பிரிக்கப்பட்டுத் தரப்படுகின்றன. சில புதினங்கள் எண்ணிடப்பெற்ற இயல்களாகத் தரப்படுகின்றன. சில புதினங்கள் எண்ணிடப்படாமல் நிறுத்தக்குறிகள் வழியாகப் பிரிப்படையாளத்தைக் காட்டித் தரப்படுகின்றன. இவையெல்லாம் கண்ணுக்குப் புலப்படும் கூறுகள். இவையல்லாமல் புனைகதையைத் தாம் முன்வைக்க நினைத்த விவாதப்பொருளை நேரடியாகச் சொல்லாமல் புனைகதைத் தன்மைகொண்டு எழுத்தாளர் அதற்கொரு வடிவம் கொடுக்கிறார். அவற்றைப் புனைகதைக் கலைத்திறன் எனச் சொல்கின்றனர். முதன்மையான புனைகதைக் கலைக்கூறுகளை அறிந்துகொள்வதின் மூலம் நாமும் புனைகதை ஆசிரியர்களாக ஆகமுடியும். அக்கூறுகளாவன:

1. கதைப்பின்னல்
2. கதைமாந்தர்கள்
3. சொல்முறை உத்திகள்
4. மொழிப்பயன்பாடு
5. பேசுபொருள்
6. பேசுபொருளுக்கான கால, இடத்தேர்வுகள்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 52 04-04-2020 15:03:56

## கதைப்பின்னல்

ஒரு புதினம் அதன் வாசிப்பின் பயனாக வாசகனுக்கு ஓர் ஒட்டுமொத்தப் பார்வையை அளிக்கவேண்டும். அத்தன்மையோடு விரித்தும் தொகுத்தும் சொல்லப்படுவதே கதைப்பின்னலாகும்.

### 1. நேரடிக் கதைப்பின்னல்

ஆற்றொழுக்குப் போன்ற கதையோட்டத்துடன் நிகழ்வுகளை அடுக்கி, விரித்தும் தொகுத்தும் சொல்லுதல் நேரடிக் கதைப்பின்னல்.

### 2. செறிவுக் கதைப்பின்னல்

இன்றைய புதின வடிவத்தில், நவீனத்துவ மொழியின் இறுக்கமும் எவ்வரிசையிலேனும் அமைந்த கதையோட்டமும் கொண்டு, புதினத்தின் மையம் இதுதான் என்று அடையாளப்படுத்தாத முறையில் சொல்லப்படுவது செறிவுக் கதைப்பின்னல்.

### கதைமாந்தர்கள்

புதினத்திற்குள் உருவாக்கப்படும் மனிதர்களைக் கதைமாந்தர்கள் என்பர். கதைமாந்தர்களுடன் பயணிப்பதே வாசக மனத்தின் விருப்பமாக இருக்கிறது. கதைமாந்தர்களை உயிர்ப்புடன் படைத்துச் செல்வது புதினத்தின் முதன்மையான தேவை. புதினத்திற்குள் அதன் பரப்பு முழுவதும் வந்து முதன்மையானவர்களாக அடையாளம் காணப்படும் மாந்தர்களை முதன்மை மாந்தர்கள் எனவும், சில நிகழ்வுகளில் இடம்பெற்று முதன்மை மாந்தர்களோடு தொடர்புடைய மாந்தர்களைத் துணைமை மாந்தர்கள் எனவும் அழைப்பர்.

புதினத்தில் கதைமாந்தர் அறிமுகமாகும் இடத்திலேயே அவரைப்பற்றிய தன்மையை வாசகர் மனத்தில் தெளிவாக ஏற்படுத்திவிட வேண்டும்.

உறுதியான ஒரு கதைமாந்தர் அடையும் மாற்றமே (வளர்ச்சி/வீழ்ச்சி) புதினத்திற்கு இலக்கியத்தன்மையைத் தருகிறது.

பொதுவாகக் கதைமாந்தர்கள் கதாசிரியனின் வாழ்வியல் மதிப்பீடுகளின் வடிவங்களே. அந்த மதிப்பீடுகளின் மோதல்களே புதினத்தின் உச்சத்தைத் தீர்மானிக்கின்றன.

கதைமாந்தரது தோற்றத்தை, அவரை அறிமுகப்படுத்தும் இடத்தில் முழுமையாகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. கதையின் போக்கில் அது தானாகவே வெளிப்படும் வகையில் அமைவது சிறப்பு.

### மொழிப்பயன்பாடு

ஒரு புதினம் அதன் கதைக்கரு, சூழல், காலம், கதைக்களம் ஆகியவற்றுக்குப் பொருந்தும்படியான மொழிநடையில் அமைதல் நலம். நடை என்பது ஓர் எழுத்தாளனின் தனிப்பட்ட திறன் அடிப்படையிலான விளைவு. அது அவனது படைப்பாளுமையை நிர்ணயிக்கும் அளவீடாகவும் விளங்குகிறது.

❖ படைப்பாளன் தனக்கேயுரிய சொற்கள், சொல்லாட்சிகளைப் பயன்படுத்தலாம். அது அவனது படைப்பு மனத்தின் வெளிப்பாடு. ஆனால், தன் நடை குறித்த விழிப்புணர்வு ஒரு படைப்பாளனுக்கு இருக்கவேண்டும். இல்லையெனில், தொடர்ந்து வரும் ஒரே மாதிரியான சொல்லாட்சிகள் புதினத்தின் கலைத்தன்மையைக் குறைத்து, சலிப்புக்குள்ளாக்கிவிடும்.

❖ புதினத்தில் வெறுமனே தகவல்களாக அளித்துச் செல்வதும் அதன் போக்கைப் பலவீனப்படுத்திவிடும். ஓர் அறையைப்பற்றி எழுதவேண்டுமென்றால், அதன் பொதுத்தன்மை, தனித்தன்மை இரண்டையும் சுருங்கக் குறிப்பிட்டால் போதும்.

### சொல்முறை உத்தி

புனைகதை யாரால் சொல்லப்படுகிறது? எந்த வரிசையில் சொல்லப்படுகிறது? சொல்வதற்குப் பயன்படும் மொழிக்கூறுகள் எவையெனத் திட்டமிடுவதே சொல்முறை உத்தியாகும். எழுத்தாளர் ஒரு பாத்திரம் தானே சொல்வது போல எழுதலாம். அம்முறை தன்மைக் கூற்று முறையாகும். அதேபோல் உடனிருக்கும் இன்னொரு பாத்திரம் கூறுவதாக அமைவது முன்னிலைக் கூற்று முறையாகும்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 53 04-04-2020 15:03:56

யார் சொல்வது என்று தெரியாத நிலையில் கதையை நகர்த்திச் செல்லும் முறை படர்க்கைக் கூற்று முறையாகும்.

சொல்பவர் ஒவ்வொரு நிகழ்வையும் வரிசையாகச் சொல்லும் போது நேரடிக் கூற்றாகவும் வரிசை மாறாக்கூற்று முறையாகவும் அமையும். அதையே காலம் மற்றும் இடங்களை மாற்றிச் சொல்லும்போது வரிசையற்ற கூற்றுமுறைக் கதைசொல்லலாக மாறிவிடும்.

*இயல்பான வரிசையில் கதை சொல்லும் முறை*

கதை நிகழும் வரிசையிலேயே சொல்லிச் செல்லும் முறை.

*இணையாகப் பிரித்துச் சொல்லும் முறை*

இரண்டு களங்களில் நிகழும் கதையைச் சொல்ல நேரும் போது இரண்டையும் மாறிமாறித் தனித்தனிப் பகுதிகளாகச் சொல்லிச் செல்வது இணையாகப் பிரித்துச் சொல்லும் முறையாகும். இம்முறையில் குறிப்பிட்ட அளவு கதை வளர்ச்சிக்குப் பிறகு தேவைப்படும் இடத்தில் இரண்டு பகுதிகளும் ஒன்றுசேர்ந்து இயங்கலாம்.

### நனவோடை முறை

ஒரு கதாபாத்திரம் தனது எண்ண ஓட்டங்களாகக் கதை நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் வடிவத்தில் கதைப்பகுதி அமைவது நனவோடை முறை.

### பின்னோக்கும் முன்னோக்கும்

தற்போதைய கதை நிகழ்வுக்குக் காரணமான, கடந்த கால நிகழ்வுகளை இடையில் காட்டி மீண்டும் தற்போதைய நடப்புக்கு வந்துவிடுவது பின்னோக்கு முறை.

கதையின் போக்கில் எதிர்காலக் கற்பனைகள் விவரிக்கப்படுவதே முன்னோக்கு முறை. பாத்திரங்களின் இலட்சியங்களை, கனவுநிலைகளைக் காட்ட இம்முறை பயன்படுகிறது.

### காட்சித் துணுக்கு முறை

கடந்தகால நிகழ்வுகளை அல்லது நினைவுகளை விரைவாகப் புகைப்படப் பிரதிகளை அடுக்கிக் காட்டுவதுபோல, விரைவாகக் காட்சித்துணுக்குகளாகச் சொல்லிச் செல்லும் முறை.

### இடையில் பிரித்துச் சொல்லும் முறை

கதையைச் சொல்லிச் செல்லும்போது, அதன் ஒரு புள்ளியில் உட்சென்று மற்றொரு துணைநிகழ்வைச் சுருங்கச் சொல்லி, மீண்டும் கதைக்கு வருவது.

மொழிப்பயன்பாட்டு அடிப்படையிலும் சொல்முறை உத்திகள் மாறுபடுவதுண்டு. அதிலும் மூன்று நிலைகள் உள்ளன

*1. பொதுமொழியில் சொல்லும் முறை*

அனைத்துப் பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகிற பொதுமொழியில் கதை சொல்லும் முறை. இஃது எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அமையலாம்.

*2. வட்டார மொழியில் சொல்லும் முறை*

அந்தந்த நிலம் சார்ந்து நிலவும் வட்டாரத்தின் பேச்சுவழக்கில் கதையைச் சொல்லிச் செல்லுதல்.

*3. பொது மற்றும் வட்டார மொழியில் சொல்லும் முறை*

கதாசிரியர் கதையின் விவரிப்பைப் பொதுவான மொழியிலும் கதைநிகழ்வை வட்டார வழக்கிலும் கலந்து சொல்லுதல்

### உரையாடல்

ஒருபுதினத்தின்நிகழ்வுகளைஉரையாடலே நகர்த்திச் செல்கிறது. பாத்திரங்களின் மனநிலை, உணர்ச்சி, உள்நோக்கம் ஆகியவற்றை வெளிக்கொணர்வது உரையாடலின் பணியாகும். பாத்திரங்கள் அவை பேசுகின்ற பேச்சின் மூலம் தம்மை அடையாளப்படுத்துகின்றன. உரையாடலின் அமைப்பே ஒரு புதினத்தைக் கலைப்படைப்பாக்குகிறது எனலாம்.

❖ எந்தக் கதைமாந்தர் பேசினால் கதையின் தொடர்பும் விளைவும் சிறப்பாக அமையுமோ அந்தக் கதைமாந்தர் மட்டும் பேசினால் போதும்.

❖ நிகழிடம், காலம் போன்ற சூழல்கள் உரையாடலில் இடம்பெற வேண்டியதில்லை. ஆசிரியர் விவரிப்பிலேயே உணர்த்தி விடலாம்.

❖ செறிவான உரையாடலே புதினத்தைச் சிறப்பாக்கும். சாதாரணமான, சாரமற்ற பேச்சுகளைப் புதினத்தில் எழுதக்கூடாது. அது புதினத்தை நீர்த்துப்போகச்செய்யும்.

## நிகழ்விடமும் காலமும்

புதினக்கலை நடந்துமுடிந்த அல்லது நடந்துகொண்டிருக்கிற வாழ்வியல் நிகழ்வுகளை எழுத்தில் நிகழ்த்திக் காட்டுகிறது. அதற்காகப் புனைகதை ஆசிரியர்கள் கதைக்களம் ஒன்றையும் நிகழும் காலச்சூழலையும் உருவாக்கித் தருகிறார்கள். தனது எழுத்து முறை மூலம் நிகழ்விடங்களின் நம்பகத்தன்மையையும். காலச்சூழலின் உண்மைத்தன்மையையும் உருவாக்கும்போது புனைகதை சிறப்படைகிறது. ஒருவரது புனைகதை குறிப்பிட்ட கால எல்லைக்கு உட்பட்டது என்றாலும், வாசக மனத்தில் காலம் முன்னும் பின்னுமாக நகர்ந்து எல்லைகளைக் கடந்து விரியுமானால் அது படைப்புக்குக் கலைத்தன்மையை வழங்கிவிடும். இக்கூறுகளின் ஒர்மையைக் கற்றுத்தேறிய ஒருவரே சிறந்த புனைகதைகளை உருவாக்க முடியும். தமிழில் சிறந்த புனைகதைகளை எழுதிய எழுத்தாளர்கள் முறைப்படி இவற்றைக் கல்விப்புலத்தின் வழியாகப் படித்துத் தேர்ந்தவர்கள் இல்லை என்றாலும் தங்கள் முன்னோடிகளையும் பிறமொழி எழுத்தாளர்களையும் வாசித்து உள்வாங்கியதின் வழியாகவே புனைகதை இலக்கியத்தில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

### படிப்போம் சுவைப்போம்

### புதினங்கள்

'நாவெலா' என்னும் இத்தாலிய மொழிச் சொல்லிருந்து, 'நாவல்' என்னும் ஆங்கிலச்சொல் பிறந்தது. இச்சொல் புதுமை என்னும் பொருளுடையது. இதனால், நாவலைப் 'புதினம்' என்றழைத்தனர். உண்மை நிகழ்ச்சிகளையும் செயல்களையும் கூறியதுடன், கற்பனை மாந்தரையும் நிகழ்ச்சிகளையும் படைத்துப் புனைந்து கூறியமையால் புதினம், 'புனைகதை' என்னும் பெயரும் பெற்றது. தற்காலத்தில் கவிதையின் கற்பனை அழகுகளையும் உணர்ச்சி வெளிப்பாடுகளையும் உரைநடை மூலம் தருகின்ற சிறந்ததொரு கலைவடிவமாகப் புதினம் திகழ்கிறது.

குறும்புதினங்கள் சிறுகதையின் போக்கிலிருந்து சற்று மாறுபட்டவை. இதன் கதைப்பின்னல் நீண்ட வரலாறு போல் அமையாமல் சிறுகதை போல் அமைந்திருக்கும். இவ்வகைப் புதினங்கள், புதினங்களாகவும் இல்லாமல் சிறுகதைகள் போலவும் இல்லாமல் அமையும் ஒருவகை புனைகதை இலக்கியம் என பிரெஞ்சு திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். புதினத்திலிருந்து அளவால் சுருங்கியதாக இருந்தாலும் இது புதினத்தின் ஒரு பிரிவாகும்.

புதின இலக்கியங்களிலிருந்து குறும்புதினங்கள் வேறுபடுவதற்கு அடிப்படைக் காரணமாகக் கதைக்கரு வெளிப்படுத்தும் முறை அமைகின்றது. கதை, நிகழ்ச்சியை நோக்கி அமைந்தால் அதனைக் குறும்புதினம் என்றும், நிகழ்ச்சிக்கு அப்பால் கதைக்கரு அமைந்தால் அதனைப் புதினம் என்றும் கூறலாம். எனவே, சிறுகதையிலிருந்து மாற்றம் பெற்ற புனைகதை வடிவமே குறும்புதின இலக்கியம்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 55 04-04-2020 15:03:56

# கண்ணாடி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தமிழின் முதல் புதினமாக அறியப்படுவது

அ) கமலாம்பாள் சரித்திரம் ஆ) பத்மாவதி சரித்திரம்

இ) பிரதாப முதலியார் சரித்திரம் ஈ) ராஜசேகர சரித்திரம்

2. வாழ்வியல் நிகழ்வுகளின் தொகுப்புப் பார்வையாக உரைநடையில் எழுதப்படுவது

அ) சிறுகதை ஆ) நாடகம் இ) புதினம் ஈ) கட்டுரை

3. கீழ்க்காண்பனவற்றுள் சாகித்ய அகாதெமி விருது பெறாத புதினம்

அ) வானம் வசப்படும் ஆ) காவல்கோட்டம்

இ) சஞ்சாரம் ஈ) ரத்தம் ஒரே நிறம்

4. பொருந்தாத இணையைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| அ) ஆர். ஷண்முகசுந்தரம் | – | நாகம்மாள் |
| ஆ) பாமா | – | ஆனந்தாயி |
| இ) அ. மாதவையா | – | பத்மாவதி |
| இ) பாரதியார் | – | சந்திரிகை |

5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| எழுத்தாளர் | – | புதினம் |
| அ) பெருமாள்முருகன் | – | 1) வேருக்கு நீர் |
| ஆ) டி. செல்வராஜ் | – | 2) கூகை |
| இ) சோ. தர்மன் | – | 3) தோல் |
| ஈ) ராஜம் கிருஷ்ணன் | – | 4) நிழல் முற்றம் |

அ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ – 1, ஆ – 4, இ – 3, ஈ – 2 ஈ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) இலட்சியவாதப் புதினம் | – | 1) பஞ்சும் பசியும் |
| ஆ) வரலாற்றுப் புதினம் | – | 2) அறுவடை |
| இ) முற்போக்குப் புதினம் | – | 3) அகல் விளக்கு |
| ஈ) வட்டாரவழக்குப் புதினம் | – | 4) பொன்னியின் செல்வன் |



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 56 04-04-2020 15:03:56

அ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ – 1, ஆ – 4, இ – 3, ஈ – 2 ஈ ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1

7. பின்வரும் கூற்றுகளில் தவறானவற்றைச் சுட்டுக.

அ) கதை தழுவிய காப்பியங்களே புதினங்களாக மாற்றம் பெற்றன.

ஆ) முதன்மையான புனைகதை கலைக்கூறுகளுள் ஒன்று, கதைப்பின்னல்.

இ) வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்படுபவை, இலட்சியவாதப் புதினங்கள்.

ஈ) வாழ்வின் பல்வேறு இயல்புகளையும் சிக்கல்களையும் விரித்துச் சொல்வதற்குப் புதினம் ஏற்ற வடிவமன்று.

அ) 2, 3 தவறானவை ஆ) 3, 4 தவறானவை

இ) 1, 2 தவறானவை ஈ ) 1, 4 தவறானவை

8. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) கதாபாத்திரம், தனது எண்ண ஓட்டங்களாகக் கதைநிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் வடிவத்தில் கதை அமைவது, நனவோடை முறை

ஆ) புதினம், வாழ்வின் ஒரு துளியை, ஒரு புள்ளியை, ஒரு தரப்பை மட்டும் சொல்ல வந்த வடிவம்.

இ) உறுதியான கதைமாந்தர் அடையும் மாற்றமே, புதினத்திற்கு நாடகத் தன்மையைத் தருகிறது.

ஈ ) ஒரு புதினம், அதன் வாசிப்பின் பயனாக வாசகனுக்கு ஓர் ஒட்டுமொத்த பார்வையை அளிக்க வேண்டுவதில்லை.

அ) 2, 3 சரியானவை ஆ) 3, 4 சரியானவை

இ) 1, 3 சரியானவை ஈ ) 1, 4 சரியானவை

9. எழுத்தாளனின் படைப்பாளுமையை நிருணயிக்கும் அளவீடு

அ) மொழிநடை ஆ) கதைப்பின்னல் இ) உள்ளடக்கம் ஈ) உரையாடல்

10. கதையின் போக்கில் எதிர்காலக் கற்பனைகள் விவரிக்கப்படுவது

அ) முன்னோக்கு முறை ஆ) பின்னோக்கு முறை

இ) நனவோடை முறை ஈ) காட்சித்துணுக்கு முறை

## குறுவினா

1. பிரதாப முதலியார் சரித்திரம் குறிப்பு வரைக.
2. கல்கியின் சமூகப் புதினங்களைக் குறிப்பிடுக.
3. விளிம்புநிலைமாந்தர் விடுதலை நோக்கில் எழுதியோரில் நால்வரைக் குறிப்பிடுக.

4. முதன்மையான புனைகதை கலைக்கூறுகள் யாவை?
5. சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

## சிறுவினா

1. கதைப்பின்னல் – வரையறு
2. புதினத்தில் உரையாடலின் பங்கினை விளக்குக.
3. கதை நிகழ்விடமும் காலமும் குறித்து நீவிர் அறிவன யாவை?
4. இணையாகப் பிரித்துச் சொல்லும் முறை என்பது யாது?
5. புதினம் எழுதுதலில் பின்னோக்கு முன்னோக்கு உத்திகள் குறித்து எழுதுக.
6. கதை மாந்தர்கள் – குறிப்பு வரைக.

## நெடுவினா

1. புதினங்களில் நவீனம் – தற்காலம் குறித்து விவரித்து எழுதுக.
2. புதினம் எழுதும் உத்திகளை வகைப்படுத்துக.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 58 04-04-2020 15:03:57

புதினம்

# கல்மரம்

– ஜி. திலகவதி

**கதை முகம் :**

*கட்டடத் தொழிலாளர்களின் அசலான வாழ்க்கையை அவர்களுடனே தங்கி இருந்து களஆய்வின் மூலம் ஆசிரியரால் எழுதப்பட்டது இப்புதினம். வீடு என்ற சொல்லுக்குப் பின்னால், நமக்குள் அலையலையாய் எழும்புகிற நினைவுகளில் ஓரிடத்தில்கூட கட்டடத் தொழிலாளர்கள் வருவதில்லை. அவர்களது வாழ்க்கைப்பாடுகளையும் அவர்களின் மீதான உழைப்புச் சுரண்டலையும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளையும் இப்புதினத்தில் தன்னார்வத் தொண்டராக வரும் சுசீலா கதாபாத்திரத்தின் வழியாகத் திலகவதி பேசுகிறார். இந்நாவலுக்கு 2005ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.*



1

'காசு வச்சுக்கிறியாம்மா?' தூக்கம் கலையாத குரலில் கேட்டபடியே பாயில் புரண்டு படுத்தான் காசி. சுள்ளென்று அடித்த வெயில் அவன் முகத்தில் உறைத்தது. அழுக்கிலும் எண்ணெய்ப் பிசுக்கிலும் முடமுடத்துப் போயிருந்த தலையணையின் கீழ் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

காசியின் தங்கை காவேரி அந்தச் சிறிய குடிசையின் மூலையடுப்பின் எதிரே உட்கார்ந்திருந்தாள். சற்று முன்னர்தான் வீடு வந்து சேர்ந்த அம்மா ஆதிலட்சுமி வேலைசெய்கிற வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வந்திருந்த பழைய சோற்றையும் குழம்பு, காய்கறிகளையும் வீட்டுப் பாத்திரங்களுக்கு மாற்றிக் கொண்டிருந்தாள்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 59 04-04-2020 15:03:57

'எந்திரிப்பா... இன்னிக்கு ஒரு எட்டுப்போய் அந்தக் கன்னீமா பொண்ணைப் பாத்துட்டு வா. வாயும் வயிறுமாக்கிறா மவ. நெனைச்சாப்பில நாம்ப போறதுக்கு உண்டா? வரதுக்கு உண்டா? வர சொல்ல எல்லாம் வண்டி நிறைய சீர் கொண்டாரணும்பா சம்பந்தியம்மா. நீன்னா இப்படியே ஏதோ வேலையா வந்தேன்னு ஒரே வார்த்தையிலே முடிச்சிக்கலாம்...'

'ஆமா! இவரு அப்படியே பக்கம் பக்கமா வேலை பார்த்துக்கினே இருக்கிறா பாரு. அத்தொட்டு அவங்க இவரு சொன்னதும் சடக்குன்னு நம்பிக்குவாங்க...' போவியா.

விருட்டென்று எழுந்து பாயில் உட்கார்ந்த காசி, 'ஹக்... தூ... அடி செருப்பாலே...' என்று காவேரியை அடிப்பதுபோல கையை ஓங்கினான்.

அவள் சிரித்துக் கொண்டே, அவன் கைவீச்சுக்கு அகப்படாதவாறு சுவர் ஓரமாக நகர்ந்து கொண்டாள்.

"அதானே? என்னத்துக்குடி அவனை எளக்காரம் பண்றே? அவன் பக்கம் பக்கமா வேலை பாக்காமதான் நாம்ப ஆளாயிட்டமா? உனுக்கு என்ன தெரியும்? ஜல்லி போடறேன்னு சாரத்து மேலே ஏறி மூணாவது மாடியிலேர்ந்து உங்கப்பன் வுளுந்து உசிரை விட்டுச்சே அப்போ உனுக்கு நாலு வயசு... ம்... பேச்சுக்குப் பேச்சு எம்மவனை நல்லாப் படிக்க வச்சி டாக்டர் வேலைக்கு அனுப்பப் போறம் பாருன்னு சொல்லும். கடைசியிலே அந்த மவன் பத்து வயசில இருந்து ஒழைக்க வேண்டியதாப் போச்சு". ஆதிலட்சுமி குடிசையின் கிழக்குப் பார்த்த சுவரில் வட்டமாய்ப் பூசியிருந்த மஞ்சளையும் அதன் நடுவே மூன்று பட்டைகளாக ஓடியிருந்த குங்குமக் கீற்றினையும் பார்த்தாள். அதிலிருந்து ஒரு முழ அளவுக்கு மேலே சுவரிலே அடிக்கப்பட்டிருந்த மர ஸ்டாண்டில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த சாமி படங்களையும் ஒரு முழ நீளத்துக்குக் கீழே தரையில் சுவரில் சார்த்தினாற்போல வைக்கப்பட்டிருந்த படங்களையும் பார்த்து நியாயம் கேட்பவளைப்போல இரண்டு கைகளையும் விரித்து ஆகாயத்தை நோக்கி உயர்த்தினாள்.

'இன்னிக்காவது எதுனா வேலை கிடைக்குமா உனுக்கு?' ஆதிலட்சுமியின் குரலில் கவலை தெரிந்தது. காசி மீண்டும் விட்டத்தைப் பார்த்தான்.

'நான் என்ன கவர்மெண்ட் உத்தியோகத்திலா இருக்கிறேன். இல்லே நாலு எழுத்து எழுதப்படிக்கத்தான் தெரியுமா? நான் படிச்ச நாலாங்கிளாஸ் படிப்புக்கு என்ன உத்தியோகம் காத்தினுக்கிது? என்னை மாதிரி ஆளுங்களுக்கு டக்குனு கிடைக்கிற வேலை கொல்லு வேலைதான். நீ என்னடான்னா அந்த வேலைக்குப் போகவே கூடாதுங்கிற. கையடிச்சு சத்தியம் வாங்காத கொறையா மனுசனைப் போட்டு நெருக்கற...'

'ஏம்மா! எத்தனையோ பேரு கட்டட வேலைக்குப் போறாங்க. எல்லாருக்குமேவா அப்பாவுக்கு ஆனது மாதிரி ஆகிடும்? ரோட்டிலே நடந்து போய்க்கிட்டிருக்கறவங்க மேல கூடத்தான் சமயத்துலே வண்டி ஏறிடுது. அதுக்காக யாருமே ரோட்டில நடந்து போகாமலேயேவா இருக்கிறாங்க?'

'சரி... சரி... போதும்... ரொம்ப வெவரமானவளாட்டம் பேசிக்கிட்டிருக்காம போய் வேலையப்பாரு. கட்டட வேலையாம் கட்டட வேலை. ஒனுக்கு ரொம்பத் தெரியுமா? கையிலே நகம் மொளச்ச நாளையிலிருந்து அதுல இருக்கிற நல்லது கெட்டதைப் பார்த்தவ நானு. கெங்காதரன் மேஸ்திரின்னு அம்பது ஆளவச்சு காண்ட்ராக்ட்ட எடுத்து தொழில் நடத்துனாரு எங்க அப்பாரு. அங்க வேலைக்கு வந்து கல்தச்சரா இருந்தவருதான் உங்கப்பா. அப்பறம் என்னென்னமோ ஆச்சு. நானு வீட்டைப் பகைச்சுக்கினு உங்கப்பனைக் கட்டிக்கினேன். நானும் அவர் கூடவே சித்தாள் வேலைக்கும் போனேன். போனதனாலதான் அந்தக் கண்றாவியக் கண்ணாலயும் பார்த்தேன். அதுக்கப்பறம் கட்டட வேலை நடக்கிறதப் பார்த்தாக்கூட அடிவவுறு கலங்குது...' ஆதிலட்சுமியின் குரல் தழுதழுத்தது.

'அதுக்கில்லம்மா. உங்கப்பாவை நீயி கெங்காதர மேஸ்திரின்னு எத்தினி பெருமையா சொல்லிக்கிற. அதுமாதிரி அண்ணனையும்

காசி மேஸ்திரின்னு நாலு பேரு சொன்னா எத்தினி கௌவுறதையா இருக்கும்?...'

"இருக்கும். இருக்கும். அது சரி நீ என்னா நீ நாலு நாளைக்கு வேலைக்குப் போனா போன சுருக்குல மேஸ்திரிப் பட்டம் வந்துடும்னா நெனச்சிக்கினே? வருஷக்கணக்கா எல்ப்பரா இருந்து, பெரியாளாயி, கொத்தனாரு கையிலே தாஜா பண்ணி, அவரை அப்பான்னு, அண்ணான்னு கெஞ்சி கைக்காசைப் போட்டு அவருக்குக் காப்பின்னும் பீடின்னும் நாஷ்டான்னும் வாங்கிக் குடுத்து அவங்க பீடி புடிச்சிக்கினு நிக்க சொல்ல கொல்லுருவை எடுத்து கொஞ்சம் கொஞ்சமா வேல பழகி அரைக் கொத்தனாராயி முழுக்கொத்தனாராயி அப்பாலே தானே மேஸ்திரியாவணும்...?"

"ம்... காசு எதுனாக்கீதாம்மா?" ஆதிலட்சுமியை நோக்கி உயர்ந்தது காசியின் குரல்"

ஆதிலட்சுமி இடுப்பில் செருகியிருந்த சேலை நுனியில் இருந்த முடிச்சை அவிழ்த்து அவன் கையில் சில்லரையை வைத்தாள்.

"அய்யோ... அய்யோ... மூணு ரூவா... அப்படின்னா பன்னண்டு இட்லி... எம்மாடி..." காவேரி விளையாட்டாய்க் கூவினாள்."எங்களுக்கெல்லாம் பழயது. இவருக்கு மட்டும் சுடச்சுட இட்லி" செல்லமாய்ச் சிணுங்கினாள்.

"சீ! களுதை! வாயை மூடு," என்று மகளை அதட்டியவள் 'நீ புறப்படு ராசா. வவுறு ரொம்பத் தின்னுட்டுப் போ. வடைகறி இருந்தா வாங்கிக்க. துட்டுப் பத்தலேன்னா இட்லிக்கார சின்னத்தாயக்காளைக் கணக்கு வச்சுக்கச் சொல்லு." மகனை வழியனுப்ப வாசலுக்கு வந்தவள், 'அப்பிடியே சாயங்காலமா கொஞ்சூண்டு பூவும் மிக்சரும் வாங்கினு போய் குடுத்துட்டு அந்தக் கன்னீம்மா பொண்ணைப் பார்த்துட்டு வா" என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சற்றே தயங்கிய காசி, எதையோ சொல்ல வந்து சொல்லாமல் விழுங்கியவனாய் வீட்டைவிட்டுக் கிளம்பினான்.

## 2

குத்துக்காலிட்டு அமர்ந்தபடி பாவாடையை முழங்கால்களுக்கு இடையே செருகிய நிலையில் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்த காவேரியின் கால்கொலுசு ஈரம்பட்டு புதுமல்லிகையாக நிறம் காட்டியது. வீட்டில் இருந்த மற்ற நகைகளைப்போல, அதுவும் எப்போதோ அடகுக்குப் போயிருக்க வேண்டிய பொருள்தான். ஆனால், காவேரி தானாவே சிறுகச் சிறுகச் சம்பாதித்துச் சேர்த்து வைத்திருந்த காசில் ஆசை ஆசையாக வாங்கியது என்பதால் அதைக் கேட்க ஆதிலட்சுமிக்கு மனசு வருவதில்லை. இன்னைக்கோ...?

'காவேரி நவுந்துக்கோ... நான் வௌக்கிறேன்'.

'அட! ஏம்மா?...'

ஆதிலட்சுமியின் பார்வை தன் கால் கொலுசுகளில் படிந்து நிற்பதைக் கவனித்தாள் காவேரி.தண்ணீரில் வெறுத்த பாதங்களின்மேல் அவளுடைய தேமாங்கொழுந்து நிறத்துக்கு அந்த வெள்ளிக் கொலுசு எவ்வளவு பாந்தமாக இருக்கிறது என்று எண்ணியது ஆதிலட்சுமியின் மனம்.

எப்படியும் கைக்குக் காசு வரும். கட்டாயமா மீட்டுடலாம். நீ போய் பாப்பாக்கடையிலே கொலுசை வச்சி நூத்தியம்பது ரூபா வாங்கிட்டு வா. நூத்தியெழுவத்தஞ்சி ரூபா கேளு. அப்பத்தான் நூத்தியம்பது ரூபா நிக்கும். "காவேரி மறுத்துப் பேசிவிடப் போகிறாள் என்று அஞ்சியவள் போல ஆதிலட்சுமி தொடர்ந்தாள். வர்ரப்ப அப்படியே உன்கால் புண்ணுக்கு சைபால் வாங்கியாந்துடு'.

காவேரி கால்களைத் தரையில் உதைத்துக் கொண்டாள். 'போம்மா! நான் என் கொலுசைத் தரமாட்டேன். நீ இப்படித்தான் காசு வரும் வருமுன்னு சொல்லி எல்லாத்தையும் அடவுக் கடையிலே கொண்டுபோய் வச்சிடுவே. ம்க்கும்...'

'இல்லடி என் தங்கமே! இந்த வாட்டி நிச்சியமாக வர்ர வாரத்திலே என் தலையை அடமானம் போட்டாவது வாங்கித்

தந்துர்ரேன். என்னான்னு கேளு நாளை மறுநாளு உங்கண்ணன் கண்ணாலம் பேச சிந்தாதிரிப்பேட்டையிலேருந்து ஆளை இட்டாரேன்னு இட்லி விக்கிற சின்னத்தாயக்கா சொல்லிங்குது. அவங்க வர சொல்ல சர்க்கரை, கிருஷ்ணாயில்னு நாலும் நெறக்க இருந்தாத்தான் சட்னு எத ஒண்ணும் செய்யலாம். சொம்புல சாக்ரின் டீயை வாங்கியாந்து தந்தா நல்லாவா இருக்கும்?பொண்ணைபெத்தஆளுவேறஎங்கியோ இங்கிலீஷ்காரன் கம்பெனியிலே நாப்பது வருசமா வேல பாக்குதாம். அந்தப் பொண்ணுகூட எட்டாங்கிளாசோ, பத்தாங்கிளாசோ படிச்சிங்குதாம், அதுக்குத் தக்கனையா நாம்ப நடந்துக்குனா தானே மருவாதி...?' மகளைக் கெஞ்சினாள் ஆதிலட்சுமி.

'அப்ப நீ உன் மூக்குத்தியைக் கொண்டும் போய் வையி...' மகள் சொல்வதைக் கேட்ட பிறகுதான் தான் போட்டுக் கொண்டிருந்த மூக்குத்தியும் தங்கம்தான் என்ற பிரக்ஞை வரப் பெற்றவளாக ஆதிலட்சுமி அதைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். யாரும் அதைத் தங்கமாக யூகித்துவிட முடியாத அளவில் எண்ணெய் இறங்கி, அழுக்கு மூடி, கறுப்பு ஏறிப்போய் அது இருந்தது. 'சொன்னாக் கேளு புள்ள இதை வித்தாக்கூட நூறு ரூபாய்க்குமேல தேறாது'.

'எல்லாம் தேறும், நீ கழட்டிக் குடு. நான் போய் வாங்கியாறேன்'.

'யாருடி இத்தனூண்டுப் பொட்டுக்கு நூத்தம்பது தருவான்'.

'எல்லாம் தருவான். நான் டெய்லி போய் டீ வாங்கியார்ரனே அந்தக் கடையிலே புரோட்டா போடுதில்ல ஒரு ஆளு. அந்த ஆளு என்கிட்டே நெறய தடவை சொல்லிருக்கு. 'காவேரி' உனுக்கு என்னா கஸ்டம்னாலும் என்கிட்ட வா. நானு உனுக்கு என்னா வேணுண்ணாலும் தர்ரேன்னு. உனக்காக என்னா வேணுண்ணாலும் செய்யறேன்னு...' காவேரி கொலுசு திருகாணியைச் சரிபார்த்துக் கொண்டாள். 'ம்... தருவான். தருவான். தொடைப்பக் கட்டையை எடுத்துக்கினேன்னா தெரியும் அவன் தர்ரதும் நான் தர்ரதும். இன்னா வோணும்னாலும் தருவாராமா. இவுரு பெரியமைசூரு மகாராஜா... இந்தா, நீ ஒண்ணும் ஒங்கொலுசைத் தர வேணா. நீயே போட்டுக்க. நான் போயி சின்னத்தாயக்கா கையிலே சொல்லி, வார வட்டிக்கே வாங்கிக்கறேன். ஒண்ணு சொல்லிப் புடறேன் கேட்டுக்க. இன்னமே நீ அந்தக் கடைப் பக்கமே போவக் கூடாது. போனாலும் அந்த புரோட்டாக்கார ராசுகோலு கையிலே பேசக்கூடாது. உங்கண்ணன் காதுல இந்தப் பேச்சு வுளுந்தா கொலையேவுழும் ஆமா...

ஆதிலட்சுமி சுவர் மாடத்தின்மேல் மாட்டியிருந்த கையகலக் கண்ணாடியைப் பார்த்து கலைந்து கிடந்த தலையை அமுக்கி விட்டுக்கொண்டாள். மாடப்பிறையில் இருந்த சிறிய டப்பாவுக்குள் ஆட்காட்டி விரலைத் தோய்த்து சின்னதாக விபூதிக்கீற்றை இட்டுக்கொண்டாள்.

காவேரி, எதிர் எதிராக இரண்டு தட்டுகளை வைத்து தனக்கும் தாயாருக்குமாகப் பரிமாறினாள். குனிந்து குழம்பைப் போட்டுப் பிசைந்து ஒரு வாய் உண்ணத் தலைநிமிர்ந்த ஆதிலட்சுமியின் கண்கள் கேள்வியாய்ச் சுருங்கின. ஒருக்களித்துக் கிடந்த கதவைத் திறந்து கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள் கன்னியம்மாள். எவர்துணையும் இல்லாமல் பொசுக்கும் வெயிலில் திடீரென்று வந்திருக்கும் கர்ப்பஸ்திரீயான மகளைப் பார்த்துப் பொறிகலங்கிப் போனாள் அவள்.

## 3


கையில் இருந்த உணவுக் கவளத்தைத் தட்டில் உதறிவிட்டு கன்னியம்மாளின் அருகேபோய் உட்கார்ந்தாள் ஆதிலட்சுமி. உட்காருவதற்குக்கூட தெம்பு இல்லாதவளாக உட்கார்ந்த நிலையிலேயே சுருண்டாற் போல தரையில் சரிந்தாள் கன்னியம்மாள்.

'ஒரே மயக்கமாக்கீது' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

சொர சொரத்துக் காய்ந்து கருத்துப்போன தன் இடது கைவிரல்களால் தாய்மையின் கனிவெல்லாம் மேன்மையெல்லாம் தேக்கித் தரையில் கிடந்த மகளின் மெலிந்த உடலையும் நெற்றியையும் ஆதரவாகத் தடவிக் கொடுத்தது ஆதிலட்சுமியின் கை.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 62 04-04-2020 15:03:58



கண்களை மூடித் தரையில் படுத்திருக்கும் கன்னியம்மாளின் தலைமாட்டில் அமர்ந்தாள் காவேரி. 'எக்கா... இந்தா கண்ணை முளி. தலையைத் தூக்கு, ஒரு வா தண்ணி குடி. குடிக்கா சரியாப்பூடும்'.

மூடிய கண்களைத் திறக்காமலே வேண்டாமென்று தலைலை அசைத்தாள் கன்னியம்மா.

'வாந்தி வரும்'

ஒருவாய்த் தண்ணீர் உள்ளே இறங்கினாலும் உடனே வாந்தி வந்து விடக்கூடும் என்று அவள் பயந்தது தெரிந்தது.

'போம்மா! போ! காவேரி... ரெண்டு பேரும் சாப்பிடுங்க. சோத்தில எதுனா உளுந்திடப் போவுது'.

'உனுக்கும் ஒரு தட்டு போடட்டுமா அக்கா?'

'இப்ப வாணாண்டி வரசொல்லவே கொட்டிக்கினுதான் வந்தேன்.

'சரி! அப்புறம் என்னாச்சி, வேலை வெஷயமா எதுனா உருப்படியா நடந்துச்சா? மாமா, நகையை மூட்டு உங்கையிலே கொண்டாந்து குடுத்துடிச்சா' இதற்கென்ன சொல்கிறாய் என்று கேட்டாள் காவேரி.

'என்னாத்தை வச்சி நகையை மூட்டுக் கொடுக்கறது? இது சோறு துண்ண வூட்டுக்கு வர்ரநேரம் போவ மிச்ச நேரமெல்லாம் கட்டுக்கு வெட்டுக்கு சிக்காம சிநேகிதக்காரனுக்களோட செட்டு சேர்த்துக்குனு திரியுது. கேட்டா மட்டும் கோவம் பொத்துக்குனு வந்துடுது. இல்லாட்டி நமக்கு புரியாதமாதிரி எதுனா சொல்லி வாயை அடைச்சுப்புடுது'.

'அதெப்படி அடைச்சுப்புடுவான். கேக்கற வெதத்துல எசவு பார்த்துக் கேட்கணும். அதுக்கெல்லாம் ஒரு சாமர்த்தியம் வேணும்' ஆதிலட்சுமி சாப்பிடுவதை நிறுத்திவிட்டு கன்னியம்மாளைப் பார்த்தாள். 'சரி, நீங்கள்ளாம் ரொம்ப சாமர்த்தியக்காரங்க... போதுமா? சலிச்சுப்போய் வூட்டுக்கு வந்தவளை வந்ததும் வராதுமா கொக்கி போட்டு மடக்கி



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 63 04-04-2020 15:03:59

மடக்கிக் கேள்வி கேக்கறீங்க. கட்டிக் குடுக்கறதுக்கு மின்னாடி மாப்பிள்ள எப்பிடி, மாமியா எப்பிடி மக்க மனுச எப்பிடின்னு நாலையும் வெசாரிச்சிங்க வேண்டிதுதானே. எனுக்கு கண்ணாலம் கட்டி வைங்கன்னு நானா வந்து உங்ககிட்டே கேட்டேன்? ஊர்ல தெருவுல இருக்கறவங்க கேக்கற வெறுங்கேள்விக்குப் பயந்துக்குனு என்னைப் பாழுங்கெணத்துல தள்ளிப்புட்டீங்க?' கன்னியம்மாளின் கண்கள் நிறைந்தன. குரல் தளும்பியது.

ஆதிலட்சுமிக்குத் தட்டில் இருந்த சாப்பாடு இறங்கவில்லை. மகளின் கஷ்டம் நெஞ்சைப் பிழிந்தது. பக்கத்தில் இருந்த செம்பை எடுத்துக் கை கழுவினாள். கன்னியம்மாளை ஆதரவாகத் தன்மேல் சாய்த்துக் கொண்டாள். அதற்காகவே காத்திருந்தவள் மாதிரி கன்னியம்மாள் பெரியதாகத் தேம்பித் தேம்பி அழுதாள்.

## 4

சின்னத்தாயின் குரல் கேட்டு வாசலுக்கு வந்தாள் ஆதிலட்சுமி.

"நீயாக்கா? வா... நம்ம கன்னீம்மா புள்ளத்தாய்ச்சியா இருக்குதில்லே. டாக்டர்கிட்டே காமிச்சுப் போலாம்னு வந்துச்சாம். அப்படியே நம்பளை எல்லாம் பார்த்துட்டுப் போகலாமுன்னு வந்துங்குது".

'பார்த்தியா, பார்த்தியா... அந்தப்புள்ள பாவாடை கட்டத்தெரியாத காலத்துலே இருந்து என் மடியில கெடந்து, வளர்ந்தது. என் கிட்டயே நீ அத்தைப் பத்திப் பொய்சொல்றே. அது மூஞ்சியும் தலையும் இருக்கற இருப்பும்... அது சும்மா விடுவிடுன்னு நடந்து வந்த சுருக்கும்... யம்மா... நான் கேக்கலடி ஆத்தா. உங்க வீட்டு நாயம் எனக்கென்னாத்துக்கு...' சின்னத்தாயி மோவாயில் விரல்களை ஊன்றிக் கொண்டாள்.

'சரி அத்தை... நீ கோவிச்சுக்காதே... வா... நான் உள்ளது உள்ளபடி சொல்றேன்' சின்னத்தாயின் கையைப் பிடித்து குடிசைக்குள் இழுத்தாள் காவேரி.

ஆதிலட்சுமி சின்னத்தாயின் சின்னக்கோபத்தைச் சமாதானப்படுத்தினாள். அதுவரை தன் அக்கா அவளுடைய மாமியார் வீட்டில் அனுபவித்த சங்கடங்களையும் கொடுமைகளையும் விவரமாக சின்னத்தாயிடம் எடுத்துச் சொன்னாள் காவேரி.

தயங்கினாற்போல அமர்ந்திருந்த ஆதிலட்சுமியைக் கிளப்பினாள் காவேரி. சின்னத்தாயியைப் பார்த்து 'என்ன அத்தை அண்ணனுக்கு பொண்ணு பார்க்கப் போறீங்களா? ஜாலிதான். அப்ப இன்னிக்கு அருமையான டிபன் காபி எல்லாம் கெடைக்கும். புறப்படுங்க சீக்கிரம். பொண்ணு அலங்காரமெல்லாம் பண்ணிக்கிட்டு காத்துட்டிருக்குமில்லே.'

சின்னத்தாயி சுருக்குப்பையிலிருந்து இன்னொரு வாடி வதங்கிய வெற்றிலை எடுத்து தட்டி நீவி வாய்க்குள் திணித்துக் கொண்டாள். 'கேட்டுக்கோ. ஓயாம சினிமாவும் டி.வியும் பார்த்து புத்தி போற போக்கை. பொண்ணை சிங்காரிச்சு அனுப்பு. நாங்க பாக்கறோமுன்னு நம்மளவங்ககிட்டே வாயைத் தொறந்து கேட்டுட முடியுமா? ஏன் உங்கக்கா கல்யாணம் எப்படி நடந்துச்சி? அதை எப்படி பொண்ணு பார்த்தாங்க? அது தண்ணி புடிக்க தெருக்குழாயாண்டே போனப்ப எங்க வூட்டாண்டே நின்னுதானே பார்த்தாங்க...' அதே மாதிரித் தான் நாம்பளும் பண்ணனும். சந்தையிலே ஆடு, மாடு, கோழி வாங்கறாப்பலயா பொண்ணை நிக்கவச்சுப் பாக்கறது. கேவலமில்ல அது...'

சின்னத்தாயி கன்னியம்மாளின் அருகே உட்கார்ந்து ஆதரவாக அவள் கையைப் பிடித்துக் கொண்டு தைரியம் சொன்னாள். ஆதிலட்சுமி மூலையில் வைத்திருந்த டிரங்குப்பெட்டிக்குள் இருந்த அந்துருண்டை மணக்கும் சேலையை எடுத்து மாற்றிக் கொண்டாள். இருவரும் புறப்பட்டார்கள்.

## 5

சுசீலா அந்தப் பகுதியில் வசிக்க வந்தபோது அந்தக் குடிசைவாசிகள் எல்லோரும் அவளை எத்தனை சந்தேகத்தோடு பார்த்தார்கள்? என்னமாதிரி பேசிக்கொண்டார்கள்? பெரிய படிப்புப் படித்த அவள் ஏன் கைநிறைய சம்பாதிக்கிற வேலைக்குப் போகாமல் இங்கே



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 64 04-04-2020 15:03:59

வந்தாள்? வசதியான குடும்பத்தில் பிறந்த அவள் அழுக்கும் வறுமையும் கூடாரம் போட்டுத் தங்கியிருக்கும் அந்தக் குடிசைப் பகுதிக்கு ஏன் வந்தாள்? இவள் ஏதாவது ஒரு புதிய மதத்துக்குக் தங்களை மாற்ற வந்தவளா? எதாவது ஒரு புதியகட்சியின் ஏஜெண்டா? இப்படி... இப்படி... இப்படி...

எல்லாத் திரைகளும் மெல்ல விலகின. வருஷத்துக்கு ஒரு தடவையாவது ஒரு உயிரைப் பலிவாங்கும் தரைக்கிணறு ஒன்று அந்தப் பகுதியில் இருந்தது. பெரும்பாலும் கட்டடத் தொழிலாளர்களே வசிக்கிற அந்த இடத்தில் அந்தக் கிணற்றைச் சுற்றி ஒரு சுற்றுச்சுவர் எழுப்பப் படாமல் இருந்ததே அதற்குக் காரணம். சுசீலா சொல்லிப் பார்த்தாள். வீட்டுவாசலில் உண்டியல் கட்டிப் போட்டாள். ஒவ்வொரு குடிசைக்குள்ளும் போய் சொல்லிப் பார்த்தாள். "கல்லும் மண்ணும்தான் நாங்கள் புழங்குகிற பொருட்கள். காசு இல்லை" என்று அந்தப்பகுதி மக்கள் சொல்லாமல் சொன்னார்கள். அவர்கள் வேலைக்குப்போன பெரிய இடத்துக் காண்டிராக்டர்களை சுசீலா சந்தித்தாள். கொஞ்சம் கல்லும் கொஞ்சம் சிமெண்டும் தருவது அவர்களுக்குத் தொல்லையாக இல்லை. வேலை முடிந்து திரும்பும்போது ஐந்து செங்கல்லும் பத்து செங்கல்லும் அரைப்பை சிமெண்டுமாக கொண்டுவந்து சேர்த்ததில் சுமக்கிற சிரமமும் தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்த கட்டடப் பொருட்களைச் சேமிக்கிற கிடங்கானது சுசீலாவின் வீடு.

மின்சக்தி வயப்பட்ட இரும்புத்துண்டு காந்தமாவது போல கட்டடத் தொழிலாளர் பிரச்னைகளைக் குறித்து ஆய்வுசெய்யப் போன சுசீலா அவர்களில் ஒருத்தியாகவே மாறிப்போனாள். என்ன விசித்திரம்? பொதுவாக தொழிலாளர்களால் செய்யப்படும் பொருட்கள் விற்பனைக்குப் போகும். தொழிலாளர்கள் தங்களுக்கு என நியமிக்கப்பட்ட அதே இடத்தில் இருந்து உழைப்பார்கள். இந்தத் தொழிலிலோ செய்யப்பட்ட பொருட்கள் நிலைப்பட்டு நிற்க தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள். சிற்பியும் ஓவியனும் எழுத்தாளனும் விஞ்ஞானியும் போல எத்தனையோ பேர் தாங்கள் செய்த பொருட்களால் தங்கள் பெயர் விளங்க நின்றபோது இந்த ஒரே தொழிலில் மட்டும்தான் உண்டாக்கியவர்களின் நினைவு இல்லாமலே போனது. உயர்ந்து நிற்கிற எந்தக் கட்டடமும் தன் இருப்புக்கு முதல் போட்டவன் பெயரைச் சொன்னதேயல்லாமல் உண்டாக்கியவனின் பெயரைச் சொல்லவே இல்லையே! இந்தப் புதுமைகள் சுசீலாவை ஈர்த்தன. அவர்களின் பிரச்னைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்வதிலும் அவற்றைத் தீர்ப்பதில் பங்கெடுத்துக் கொள்வதிலும் தனக்கு ஒரு மனிதக்கடமை இருக்கிறது என்று அவளுக்குப் பட்டது.

'ஒருவேளை நீங்க என்னமோ ஒண்ணு சொன்னீங்களே அதை எளுதி முடிச்சி மேலிடத்திற்கு அனுப்பிச்சிருந்தா அவுங்க எங்க கஸ்டம் தெரிஞ்சு எதுனா குடுத்தாலும் குடுத்திருப்பாங்க' என்று ஒரு தடவை பக்கிரி சொன்னான். சுசீலாவுக்கும் கோபம் வரும் என்று அந்தப்பகுதி மக்கள் அன்றுதான் தெரிந்து கொண்டார்கள்.

சுசீலா சொன்னாள் "எதுனா குடுத்திடுப்பாங்களா? என்ன பக்கிரி இது... ஏதோ பாவப்பட்டுப் போடற பிச்சையைச் சொல்றாப்பல சொல்றீங்க. இங்க பாருங்க... சுதந்திரம் வாங்கிட்டோம்னு சொல்றோம். சுதந்திரமான இந்த நாட்டிலே சோம்பித்திரியாம உழைக்கறது நம்ப கடமை. உழைச்சவனுக்கு கெடைக்க வேண்டியதை கேட்டு வாங்கறது நம்ப உரிமை. அதுக்கு மேலேயும் போய் உழைச்சவனுக்கு மேலான ஊதியத்தையும் நல்ல உழைப்பாளியை ஊக்கப்படுத்தறதுக்கு சலுகைகளையும் பரிசுகளையும் கொடுக்க வேண்டியது ஜனநாயக நாட்டிலே ஒரு அரசாங்கத்துக்குப் பெருமை.

நாள்முழுவதும் தேடியும் வேலை கிடைக்காமல் திண்ணையில் விழுந்து கிடந்த காசிக்கும் அதே குடிசைக்குள் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த கன்னியம்மாளுக்கும் அதைக் கண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்த காவேரிக்கும் ஏதோ ஒரு விதத்தில் எல்லாம் நல்லபடி நடக்கும் என்ற நம்பிக்கையை



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 65 04-04-2020 15:03:59

ஏற்படுத்திக் கொண்டிருந்தவள் சுசீலா. ஒரு ஜீவியத்தை நியாயப்படுத்த இது போதாதா? போதும் என்றாலும் அவர்களின் நம்பிக்கைகளை நடப்பாக்கிக் காட்டுவது சுசீலாவுக்கு மட்டும் அத்தனை எளிதாக இயலக்கூடியதா? வாழ்க்கை, பதில் இல்லாத பல கேள்விகளில் மையங்கொண்டு சுழன்றது.

ஏண்டா! பாவி! குடிகுடிக்கற நேரமாடா இது? நான் பெத்த புள்ளயாட்டம் யோக்கியசாலி இல்லேன்னு பொண்ணு வீட்ல இப்பத்தானேடா சொல்லிட்டு வர்ரேன். அய்யோ... எந்தலை எயுத்தே... என்று தலையில் பட்பட்டென்று அடித்துக்கொண்டாள்.

அதுவரை அமைதியாக இருந்த சின்னத்தாயி ஆதிலட்சுமியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"வுடும்மா... அத... நீ போயி வந்த வெஷயம் என்னாச்சி. தம்பிக்குப் பொண்ணைப் பார்த்தியா? அதச்சொல்லு" என்றாள் கன்னியம்மா. சுவரில் சாய்ந்து கொண்டாள் ஆதிலட்சுமி.

"பொண்ணைப் பார்த்தோம் கன்னி. மெட்ராஸ்காரப் பொண்ணு. பத்தாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிங்குது. பளிச்சின்னு ஷ்டைலா நல்லாதான் கீது. அண்ணங்காரன் ஆட்டோ வச்சிங்கிறான். தம்பிக்காரன் படிக்கிறாப்பலக்கிது. அவங்கம்மாக்காரிகிட்ட சித்தநேரம் பேசிட்டு வந்தோம். ஜாக்கெட்டைக்கூட சலவைபண்ணி போட்டுங்கிது அந்தம்மா. அப்பன் டூட்டிமேல போயிட்டாரு. அந்தம்மா புடி குடிக்காமத்தான் பேசிச்சுது. ஞாயம்தானே? பாக்கலாம். அவன் தலை எயுத்து எப்படிக்கிதோ" என்று சின்னத்தாயி விவரம் சொன்னாள்.

"ஆமா... இந்தச் சீமான இப்ப வந்து பாக்கணும் பொண்ணு வூட்டுக்காரங்க" காவேரி மெல்ல முனகினாள்.

"அந்தப் புள்ளைய நெலையா ஒரு தொழிலு ஒரு எடமுன்னு வேலக்கிப் போவ வுட்டாத்தானேனு சொல்லிக்கினுந்தேன்". சின்னத்தாயி ஆதிலட்சுமியின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

## 6

காசியின் திருமணம் சட்டென்று கூடிவந்தது. ஆட்டோக்கார மாரிமுத்துவிடம் அவன் காண்டிராக்ட் வேலை செய்வதாகச் சொல்லப்பட்டதைக் கேள்வி கேட்காமல் நம்பினார்கள் ராகினி வீட்டார். ராகினி ஆம். அதுதான் காசிக்கு மனைவியாக வரப்போகிறவளின் பெயர்.

காசி மனசுக்குள்ளேயும் வெளியிலும் திரைகானமும் ஒலியும் ஒளியுமாக ஓயாமல் பொங்கித் ததும்பினான். ராகினியின் அம்மா சொன்னபடி குடிசையின் ஒரு மூலையில் சாணிபோட்டு வழித்த மூங்கில் தட்டிகள் இரண்டைக்கட்டி ஒரு சிறிய அறையைத் தோற்றுவித்தான்.

திருமணம் முடிந்து 'மொய்'வழங்கல் தொடங்கியது. கல்யாணத்துக்கு என்று வாங்கிய கடனில் ஏதாவது ஒரு பகுதியை அடைப்பதற்காவது இந்த மொய் தேறுமோ என்ற கணக்கில் ஆதிலட்சுமி மனம் குடிகொண்டிருந்தது.

ராகினி அவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்து ஒரு ராணுவவீரன்போல நடந்து வந்து அவனருகே உட்கார்ந்தாள்.

"இங்க பாருங்க. ஒரு மாசத்துக்கு உங்களுக்கு எவ்வளவு வருமானம் கெடைக்கும்" என்று கேட்டாள் ராகினி. காசியின் மனசுக்குள் அதுவரை கேட்டுக்கொண்டிருந்த பாட்டு சட்டென்று நின்று போனது.

## 7

ராகினி அந்த வீட்டுக்கு வந்த பின்னர் பல மாற்றங்கள் உண்டாயின. மூங்கில் தட்டிகள் இரண்டைக் கட்டி அமைக்கப்பட்டிருந்த தனியறையை இப்போது கொஞ்சம் விசாலமாக்கிவிட்டாள். கதவுத் திரையை மாற்றி கொஞ்சம் வலுவான துணியினால் மறைப்பு ஏற்படுத்தி விட்டாள்.

"ம்... இப்பப் பாருங்க. கதவு வச்சாப்பல" என்று காசியிடம் அவள் திருப்தியோடு சொன்னாள். 'புது சிம்னி விளக்கு மாட்னதும்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 66 04-04-2020 15:03:59

ரூம் அளகா இருக்குதில்ல' என்று சிலாகித்தாள். உடனே 'ஒரு சின்னக் கட்டிலு வாங்கிப்போடணும். பழக்கமில்லாததினாலே வெறும் பாயில் படுத்தா எனக்கு உடம்பு நோவுது' என்று ஒரு கட்டளைபோல அவள் பேசியதைக் கேட்டதும் காசியின் முகம் சட்டென்று சுருங்கிப் போயிற்று.

அவளை ஏறிட்டுப் பார்க்க முடியாத கூச்சத்துடன் கால் நகத்தை சுரண்டிக் கொண்டே மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவன் அதுவரை அனுபவித்திராத கவலையும் இனம் புரியாத அவமான உணர்ச்சியும் நாசித்துவாரத்தைக் குறுகுறுக்க வைக்கிற பார்த்தீனியச் செடியாக அவன் மனதினுள் படர்ந்தது.

ஒருவாரம் கழித்து ராகினியின் தாய் வேலம்மாள் மகள் குடித்தனம் பண்ணுவதைப் பார்க்க அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். கூடவே துணிப்பையில் அதிரசம், கைமுறுக்கு, கடலை உருண்டை, கொஞ்சம் கமலாப்பழங்களும் வந்தன.

'அதிரசம் எடுத்துக்கம்மா. உனக்கு உசிராச்சேன்னு பண்ணி எடுத்தாந்தேன்'. ராகினியின் முகத்தில் குழந்தையின் பரவசம் பூவின் இதழ்களாக அவிழ்ந்தது. கண்களில் ஆர்வம் கனிந்தது. அதிரசத்தைப் பிட்டு வாயில் போட்டாள். "ம்... பிரமாதம்... அப்பாடா... இப்பிடி ருசிருசியாய்ச் சாப்பிட்டு எத்தினி நாளாச்சு" என்று தன்னை மறந்த ஆனந்தப் பரவசத்தில் சொன்னாள். ராகினியின் வார்த்தைகள் தூண்டில் முள்ளாக வேலம்மாளின் காதுகளைத் துளைத்து நெஞ்சுக்குள் குடிபுகுந்தன. திகைப்புற்றவளாக ராகினியின் பொய்ச்சிரிப்பை உடைத்துக் கொண்டு உள்ளே போகிறவளாக உற்றுப் பார்த்தாள்.

'ஒண்ணுமில்லவுடும்மா...'என்று தட்டிக் கழிக்க முனைந்த ராகினியை கீழ்க்கண்ணால் பார்த்தபடி பெருமூச்சு விட்டாள். அவள் மனசுக்குள் சுரீரிட்டு எதுவோ எரிந்தாற்போல இருந்தது. "அவசரப்பட்டு இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்துவிட்டோமோ?"

"எங்கே அவங்கள்ளாம்?" வேலம்மாள் நான்கு திசைகளிலும் பார்வையை ஓட்டினாள். பேச்சற்ற ராகினியின் கண்களில் துயரம் குழிதோண்டிக் குடியிருந்ததைக் கண்டுகொண்ட வேலம்மாவின் மனத்தை கவலை தன் கூரிய நகங்களால் கிழித்தது. செல்லமாக வளர்த்த பெண்ணுக்கு நெஞ்சுக்குள் அடிவிழுந்து ஊமைக்காயம் பட்டிருப்பதை அந்தத் தாயுள்ளம் சுலபமாக அறிந்து கொண்டது.

செம்பை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகக் காப்பிக்கடைக்குப் புறப்பட்டாள் ராகினி.

## 8

"சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து இந்தக் கொளுத்தற வெயில்லே வருவானேன்? வந்த வேகத்திலே ஓடுவானேன். நாங்கள்ளாம் மனுசளாப் படலியா உங்கம்மாவுக்கு? இருந்து கலந்துக்கினு போவாத... ம்..." கோபமும் சலிப்புமாகக் காசி பேச்சும் முணுமுணுப்புமாக ஏதோ சொன்னான்.

"என்ன சொன்னீங்க?... இருந்து... கலந்துக்கறதா? யாரோட... எங்கம்மா வர்றாகன்னு மரியாதையா வூடு தங்கி 'வாங்க... இருங்க'ன்னு உங்க வூட்டுச்சனமும் நீங்களும் நடந்துக்கிட்டீங்க பாருங்க... அதுக்காக நாலுநாள் தங்கிப் போவாதது தப்பாப் போயிடிச்சி இல்லியா"

"அப்ப என்ன சமையல் பண்ண?"

"தண்ணி சோறுதான்"

"எப்பப் பாரு தண்ணிசோறு. இல்லன்னா பழைய சாம்பாரு... சீ... நாக்கே செத்துப்போச்சு"

"வகைவகையாப் பண்ணிச் சாப்பிட யாருக்கு ஆசையில்ல? துட்டு வேணுமே"

எகத்தாளமாய்ப் புன்னகை செய்தாள் ராகினி. "எங்க அண்ணனைப் பாருங்க. பதினாறு வயசுலே சம்பாதிக்கப் போனான்... இன்னைக்கு வரைக்கும் அங்க ஒரே கதைதான். உங்கம்மா ஒருத்தரு ஒழைச்சு நாம்ப நாலுபேரும் சாப்பிட்டா வாயைத் திறந்து இதுவேணும் அதுவேணும்னு கேட்க முடியுமா? இந்த வீட்டில ஒரு மொடக்குத் தண்ணி குடிக்கறதுகூட கேவலம்தான்" ராகினியின் வார்த்தைகள் சாட்டைகளாக பளீர் பளீரென அவன் இதயத்தில் அறைந்தன.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 67 04-04-2020 15:03:59

"நல்லா யோசனை பண்ணிப் பாருங்க. கல்யாணமாகி இத்தனை நாளாச்சு... உங்க வரும்படியிலே எனக்கு என்ன வாங்கிக் கொடுத்திருக்கீங்க... ஒரு மொழம் பூவு வாங்கணும்னாக்கூட உங்கம்மா கையைத் தானே எதிர்பார்க்கிறீங்க" என்றாள். அவள் சொன்ன வார்த்தைகள் மனத்துக்குள் ஈட்டிகளாகச் செருக அவன் குமைந்தான்.

'கோவிச்சுக்காதீங்க, நான் சொல்றதைக் கேளுங்க... இனிமே நீங்க சம்பாதிக்கணும். தினமும் வேலைக்குப் போகணும். அங்கியும் இங்கியும் போறதும் சும்மா சுத்தறதும் வேல எதுவும் கெடைக்கலன்னு திரும்பி வர்றதுமா இப்படியே இன்னும் எத்தினி நாளைக்கு இருக்கப் போறீங்க?' நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள் ராகினி.

"நாளைக்குக் காத்தால எங்கண்ணன் வருவான். அவன்கூடப் போங்க. எங்கேயோ அவன் உங்களுக்கு வேல ஏற்பாடு பண்ணியிருக்கிறான்". காசி, மௌனமாய் நின்றான்.

9

ராகினியின் அண்ணன் துரை எவ்வளவோ வற்புறுத்திய பிறகுதான் காசி அதற்கு சம்மதித்தான். பொறுமையான வார்த்தைகளால் காசியின் பிடிவாதத்தை துரை மெல்ல மெல்ல வென்றான்.

"எடுத்த எடுப்பிலே ஆயிரத்து ஐந்நூறு தர்றதா சொல்லியிருக்காங்க. இது வாட்ச்மேன் வேலைக்கு மட்டும் தர்ற சம்பளம். பில்டிங் வேலை ஆரம்பமானதும் எதுனா வேற கட்டட வேலையும் பார்க்கலாம். அதுல எப்படியும் நானூறு ஐநூறு நிக்கும்.

'ம்...' என்று தயங்கித் தயங்கி இழுத்தான் காசி.

"பேசாம அண்ணன் செய்ற வேலய ஒத்துக்குங்க. எதோ என் தலைவிதி இப்படி ஆச்சின்னு விதியை நொந்துக்கிட்டு நானும் அங்கயே எதுனா கெடைக்கிற வேலய செய்யறேன்" என்றாள் ராகினி.

"என்னது? என்ன சொன்னே? ஏம்மா அதுக்காகவா உன்னைக் கண்ணுக்குள்ள வச்சு வளர்த்தோம்?" துரையின் குரல் அதட்டியது.

வாழ்க்கையைப் பற்றி அவள் என்னென்ன கனவுகள் கண்டாள். இளமையும் துடிப்பும் மின்ன கைநிறையச் சம்பாதிக்கிற, அவளையே சுற்றிச் சுற்றி வருகிற, அவளுடைய விருப்பங்களை துருவித் துருவிக் கேட்டு உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கிற ஒருவனை அவள் மானசீகமாக மனத்துக்குள் குடி வைத்திருந்தாள். ஆனால்... இப்போது... அவள் கண்கள் பனித்தன. கண்கலங்கிய ராகினியைப் பார்த்த துரைக்கு மனசு வலித்தது.

துரையுடன் போன காசி சுற்றிலும் உயரமான சுவர் எழுந்து நின்ற அந்த விசாலமான நிலத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான். 'இவ்வளவு பெரிய நிலம் முழுக்கவா வீடுகட்டப் போறாங்க' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான். திடீரென்று நினைத்துக் கொண்டவன் போல, 'இங்க எத்தினி பேரு வேலை செய்ய வருவாங்க' என்றான்.

"ஒரு முப்பது முப்பத்தஞ்சு பேரு வருவாங்க" என்று சொல்லிக் கொண்டே துரை வெளியே பார்த்தான். தூரத்தில் வந்த காரை அடையாளம் கண்டு பெரிய இரும்புக் கேட்டைத் திறந்தான். திறந்த சில கணங்களில் பெரிய படகுக்கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்தது.

துரை, காசியை காரில் வந்தவனுக்கு அறிமுகப்படுத்தினான். வந்தவனுக்கு வயது நாற்பது இருக்கும். வாட்டசாட்டமாக இருந்தான். கறுப்புக் கண்ணாடியின் அதீதக் கருமையால் அவன் யாரைப் பார்த்துப் பேசுகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

'ஷெட்டெல்லாம் ஒரே வாரத்துல ரெடியாயிடும். நாளைக்கு நல்லநாள். கிணறுவெட்டத் தொடங்கிடுவாங்க. நீதான் புதுவாட்ச்மேனா...? தண்ணி, கிண்ணி போடுவியா?" என்று காசியைப் பார்த்துக் கேட்டான் ஓனர் ஆர்.ஆர்.எம்.

துரை அவசரமாகக் குறுக்கிட்டான். "இல்லீங்க அவர்கிட்ட எந்தக் கெட்ட பழக்கமும் இல்லீங்க" என்றான்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 68 04-04-2020 15:03:59

ஆர்.ஆர்.எம்மின் முகம் சிவந்தது. கரகரத்த குரலில்"வாட்ச்மேனைத் தானேய்யா நான் கேட்டேன்?" என்றான். துரை வாயை மூடிக்கொண்டு காசியைப் பார்த்தான். காசி மெல்லிய குரலில் "என்கிட்ட அந்தப் பழக்கமெல்லாம் இல்லீங்க..." என்றான்.

"அப்படி எதுனா இருந்தா இப்பவே நீ போயிடலாம். ஆமா உனக்குக் கல்யாணம் ஆயிடிச்சா? என்றான். 'ஆயிடிச்சு சார்' என்றான் காசி துரையைப் பார்த்தபடியே.

'குழந்தைங்க இருக்குதா?'

'இல்லீங்க' என்றான் காசி.

'ரொம்ப நல்லது. பிளாட்ஸ் கட்டி முடியறவரை அதெல்லாம் இல்லாம இருக்கறதே நல்லது. இப்பத்திக்கு ஒண்ணும் வேணாம்' என்றவர், 'இஷ்டமாயிருந்தா ஒம் பொண்டாட்டியைக்கூட நீ இங்கேயே அழைச்சுக்கிட்டு வந்துடலாம். ஆனா ஒரு நிமிஷம்கூட இந்தக் காம்பவுண்டுக்கு வெளியே போய் நீ நிக்கக்கூடாது என்ன?' என்றார் அதட்டும் குரலில். 'சரிங்க' என்றுகாசி தலையை அசைத்தான்.

ஆதிலட்சுமி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். அந்தப் பெரிய காம்பவுண்டின் இடப்புற மூலையில் காசியின் 'ஷெட்'. அது ஒரு தனி அறை, ஹால், சமையலறை என்று பிரிக்கப்பட்டிருந்தது. ராகினியின் முகத்திலும் வார்த்தைகளிலும் சந்தோசமும் பரவசமும் சரஞ்சரமாகத் தொடுத்த பிச்சிப் பூவாக மணந்தது.

ஓணர் ஒருநாள் காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது புத்தகமும் கையுமாக ராகினி எதையோ ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்தபோது அவர் வியப்போடு 'நீ படிச்சிருக்கியா?' என்று கேட்டார். 'ஆமா சார். டென்த் வரைக்கும் படிச்சிருக்கேன்...' நிஜமாகவா?' சற்றே அளவுக்கு மீறிய வியப்பு ஆர்.ஆர்.எம்மின் குரலில் கேட்டது. அது உள்ளேயிருந்த ஆதிலட்சுமியின் காதிலும் விழுந்தது.

"இந்தக் கட்டடக் கன்ஸ்ட்ரக்ஷன் விவரங்களை எழுத இந்தக் காம்பவுண்டுக்குள்ளே ஒரு கணக்குப்பிள்ளை தேவைப்படுது, டென்த் படிப்பு இதுக்கெல்லாம் போதும். நம்பிக்கையான ஆளா இருக்கணும். நல்ல ஆளா கெடைக்கணுமேன்னு நெனச்சிக்கிட்டே இருந்தேன். பார்த்தா நீ இங்கியே இருக்கறே. என்ன சொல்றே? மாசம் ரெண்டாயிரம் ரூபாய் தந்துடறேன். உன்னால முடியும்னு நெனக்கறேன். உனக்கு இஷ்டம் தானே" என்று அவன் கேட்டான்.

"இஷ்டம்தான் சார்" என்றாள் ராகினி. "சார்! இது நீங்க எங்களுக்குச் செய்யற பெரிய உதவி. இதை நான் உசுரு உள்ளவரைக்கும் மறக்கமாட்டேன். ரொம்ப தாங்க்ஸ் சார்"

'சார்... இப்படி வாங்க' என்று ஆர்.ஆர். எம்மை ஒதுக்குப்புறமாக அழைத்துக்கொண்டு போன மேனேஜர் விச்சு "என்ன சார்... எதுக்கு இவங்களுக்கு எடுத்ததும் இவ்வளவு சம்பளம் தர ஒத்துக்கறீங்க. யோசனை பண்ணுங்க" என்றான். "ம்... எல்லாம் யோசித்துத்தான் செய்யறேன் விச்சு. பிசினஸ்மேன் நான். ஆதாயம் இல்லாம எதுலயும் காலை விடமாட்டேன். திருட்டுப்புரட்டு இல்லாததுங்க. இந்த செட் ஆளுங்க நம்ப கட்டட வேலைக்கு என்னென்னிக்கும் உதவியா இருக்கறாப்பல வளைச்சுப் போட்டம்னா நமக்குத்தான் லாபம். ஆயிரம் வைக்கவேண்டிய இடத்துல நூறு வச்சாலேயே இதுங்க பூரிச்சுப் போயிடும். பாரேன் நாளா வட்டத்திலே இவங்களால ரொம்ப சௌரியமிருக்கப் போகுது. வெவரம் இல்லாத கூட்டம். பத்துரூபா தந்தாலே மகிழ்ந்து போயிடுங்க. பார்த்துக்கிட்டேயிரு..."

அவன் அங்கிருந்து போன பின்பும் வெகுநேரமாக வெளியிலேயே உட்கார்ந்திருந்தாள் ராகினி. ஆதிலட்சுமி அவள் அருகில் வந்து 'நான் புறப்படறேம்மா?, எனக்கு நீ ஒரு ஒத்தாசை பண்ணனும் தாயி' என்றாள்.

'என்ன விஷயம்?' ராகினியின் பார்வை ஆதிலட்சுமியைத் தொட்டது. "நீதான் பாத்தியே கன்னீம்மா வூட்டுக்காரனை, எப்பிடி எலும்பும் தோலுமா பூட்டான், வுடாம காய்ச்சல் அடிச்சிக்கினே இருக்குதாம். தர்மாஸ்பத்திரியிலே சேத்துங்கறாங்க. கன்னீம்மாவுக்கு தலைப்பிரசவமா

வேறக்கிது. நாம்பளே வச்சிருந்து நல்லபடி பார்த்துடலாம்னா எல்லாம் செலவுதான். அதனாலதான் சொல்றேன் மொதலாளி கையில சொல்லி காவேரிக்கும் இங்கியே ஒரு வேலை ஏற்பாடு செஞ்சுப்புடு ராகினி" என்றாள் ஆதிலட்சுமி கெஞ்சும் குரலில்.

## 10

முந்திய தினத்தில் ஆர்.ஆர்.எம் அந்தக் கணக்குப் புத்தகத்தில் அவள் எழுதியிருந்தவற்றைப் பார்த்துவிட்டு சொன்ன வார்த்தைகள் இப்போதும் காதோடு கேட்டுக் கொண்டிருந்தன. "ரொம்ப நல்லா எழுதியிருக்கியே குட். நீட்டா இருக்கு. நான் நெனச்சதவிட கெட்டிக்காரியா இருக்கியே. நல்லபடி வேலை பாரு... வேற எதாவது கஷ்டம் இருந்தா சொல்லு. கூச்சப்பட வேண்டியதே இல்லை".

விடியற்காலையில் லாரியில் வந்திறங்கிய கம்பிக் கட்டுகளை முதல் ஷெட்டில் அடுக்கி வைத்து விட்டு, ஸ்டூலில் உட்கார்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்த ராகினியை எரிச்சலோடு பார்த்துத் தொண்டையைச் செருமினான் காசி.

ராகினி சாதாரணமாக அவனைப் பார்த்தாள். 'என்ன வேணும்... சொல்லுங்க'.

'ம்... டீ வேணும்'

"முதல்ல கம்பி வாங்கியாந்த ரசீதைக் கொடுங்க... கணக்கிலே எழுதிடலாம்..."

நறநறவெனப் பற்களைக் கடித்தபடி மடியில் இருந்த ரசீதை எடுத்து ராகினியின் முன்னால் இருந்த மேசையில் போட்டான் காசி. "சீ...சீ... எதுக்கு இப்படி இந்த ரசீதைக் கசக்கி வச்சிருக்கீங்க. இப்படிப் போய்ப் பண்ணுவாங்களா யாராவது?" காசிக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை.

"டீயும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். நான் போறேன். வெறுப்போடு சொல்லி கிடுகிடு வென்று வளர்ந்து கொண்டிருக்கிற சுவரைப் பார்த்தபடி நடந்தான்.

"இந்தாப்பா வாட்ச்மேன். ஒருவாய்த் தண்ணி குடுக்கறியா?" என்று தளர்ந்த குரலில் பொன்னம்மா அவனைக் கேட்டாள். டின்னில் தண்ணீரை மொண்டு பொன்னம்மாவுக்குக் கொடுத்தான். பின்னர் தானும் குடித்தான். தண்ணீர் கல்கண்டாக இனித்து உடலுக்குத் தெம்பூட்டியது.

திடீரென்று மரகதம் வீலென்று கத்தினாள். மரகதம் செங்கற்களைத் தூக்கிக் கொண்டு நின்ற இடத்துக்கு பங்கஜமும் உண்ணாமலையும் பதற்றத்தோடு ஓடி வந்தார்கள்.

கொத்தனார் குப்பு கெட்ட வார்த்தைகளால் திட்டியபடி அங்கு வந்து சேர்ந்தார்.

"என்ன ஆயிடுச்சி, இப்படி எல்லாரும் கூட்டமா கூடிக்கினீங்க..."

கருந்தேளு போட்ருச்சிங்க. பாவம் புள்ள. போனமாசந்தான் சடங்காச்சி" கவலையோடு சொன்னாள் சரோஜா.

இவை எல்லாவற்றையும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராகினி, தொலைவில் கேட்ட ஹார்ன் சத்தத்தில் திடுக்கிட்டாள். "ஓணர் வர்றாரு..." காசி விடுவிடுவென்று ஓடிப்போய்க் கேட்டைத் திறந்தான். ஓணர் ஆத்திரத்தோடு இறங்கினான். கொத்துவேலைக்காரர்கள் எல்லோரும் மாயமாக மறைந்தார்கள். அப்படி ஷணத்தில் கரையாவிட்டால் வேலை கெட்டுவிட்டதென்று ஆர்.ஆர்.எம் எப்படிப் பயங்கரமாகக் கோபிப்பான் என்று அவர்களுக்குத் தெரியும். தேள்கடிக்கு அனுதாபம் கொள்கிற மனிதத்தன்மையை ஆர். ஆர்.எம் புரிந்துகொள்ளமாட்டான் என்பதை அவர்கள் தங்கள் அனுபவத்தில் நன்றாகவே தெரிந்து கொண்டிருந்தார்கள்.

## 11

சாரத்தடிகளையும் பலகைகளையும் நீளமான கம்பிகளையும் லாரியிலிருந்து கூலியாட்கள் இறக்குவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள் ராகினி. அவற்றை இரண்டாவது ஷெட்டில் காசி, ராமு, கிட்டா எல்லோருமாக இறக்கி அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

லாரி கிளீனர் சண்முகம் ரசீதை ராகினியிடம்கொடுத்துவிட்டு அங்குமிங்குமாகப் பார்த்தவாறு கிசுகிசுத்தான்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 70 04-04-2020 15:03:59

"நம்ப காண்டிராக்டரும் கடைக்காரனும் சேர்ந்து கோல்மால் பண்ணி, மட்டமான கம்பியை இங்கே தள்றாங்க. இந்த கம்பி வெலைகூடக் கம்மிதான். இங்கயும் உள்ளாளுங்க இருக்கறாங்க..."

அப்போது ஓணர் ஆர்.ஆர்.எம். காரிலிருந்து புன்னகையோடு இறங்கினான். ராகினி வணக்கம் சொன்னாள். வணக்கம் என்று முணுமுணுத்தபடி கை சற்றே ஆசிர்வதிப்பது மாதிரி உயர்த்தி "சிமெண்ட் லாரிக்காரன் வந்தானா?" என்றபோது கம்பி லாரி டிரைவர் கருப்பையா வந்தார்.

"வரல... கம்பியும் சாரமும் மட்டும்தான் வந்திருக்குது" என்றவள் லாரி டிரைவரைக் "கொஞ்சம் நில்லுங்க..." என்றாள்.

"என்னம்மா... ராகினி... என்ன விஷயம்?" என்றான் ஆர்.ஆர்.எம்.

"ஒண்ணுமில்லசார்... இந்தக் கம்பிங்கள்ளாம் சரியா இருக்கான்னு நீங்க கொஞ்சம் பாருங்க..."

அவள் பேச்சை முடிப்பதற்குள் சிமெண்ட் லாரி பயங்கர சத்தத்துடன் அங்கே வந்து நின்றது. "ரசீதை வாங்கிக்கம்மா" என்றவன் காசியின் பக்கம் திரும்பி "காசி, சிமெண்ட் மூட்டைங்களை எண்ணிக்க..." என்று கட்டளையிட்டுவிட்டு, "கருப்பையா நீ கொஞ்சம் நில்லு" என்று கனத்த குரலில் சொன்னான் ஆர்.ஆர்.எம்.

லாரியிலிருந்து இறக்கிய மூட்டையொன்று தோளில் சுமக்கமுடியாமல் சட்டென்று சரிந்தான் கிட்டா. விழுந்த மூட்டையின் வாய்பிளந்து சிமெண்ட் சிந்தியது. நிலத்தியல் சிந்திய சாம்பலும் மண்ணும் கலந்த பொடியை அள்ளி, "இதைப் பாருங்க சார்" என்றபடி ஆர்.ஆர்.எம்மிடம் அந்தக் கலவையைக் கொடுத்தாள் ராகினி.

அவன் முகம் சிவந்தது. கோபத்தால் உடம்பு ஆடிற்று. பற்களை நறநறவெனக் கடித்தான். "திருட்டுப் பொறுக்கிங்க. யாரைடா ஏமாத்தறீங்க?" என்று கத்தினான். "எங்கிட்டியாடா உங்க சாமர்த்தியத்தைக் காட்டறீங்க... இந்த ஆர்.ஆர்.எம் யாருன்னு காட்டறேன். ஒவ்வொருத்தனையும் கம்பி எண்ண வக்கிறனா இல்லியான்னு பாருங்க" என்றாவாறே, "காசீ" என்று சத்தம்போட்டு அழைத்தான்.

"ஒருதளம் கட்டி முடிச்சாச்சி. இங்கே நடக்கிற மோசடியை நீ கண்டுபிடிக்காம இருந்திருக்கறே..." என்று உரத்துக் கத்திவிட்டு பளீரென்று காசியின் கன்னத்தில் அறைந்தான்.

ராகினி திகைத்துப் போய் நின்றாள். வார்த்தைகள் வரவில்லை. ஆர்.ஆர்.எம்மை வெறுப்புடன் பார்த்தாள். யாரோ செய்த தவறுக்குத் தன் அப்பாவிக் கணவன் பழியும் தண்டனையும் சுமக்கும்படி ஆனது அவளுக்குத் தாங்கமுடியாத வேதனையை ஏற்படுத்தியது.

## 12

தன்மகன் காசியின்மீது கட்டடத்தின் ஓணர் கைநீட்டிய சம்பவத்தைப் பற்றிக் கன்னியம்மாள் சொன்னதைக் கேட்டு, வெந்து நீரான ஆதிலட்சுமியின் தாயுள்ளம் அனல்மூச்சைக் கக்கியது. அவள் கண்களில் இதயத்தின் பாரம் கசிந்தது. தன் மகனுக்கு நேர்ந்த அவமானத்தைத் தாளாத அவள் நெஞ்சம் வேதனையால் கனத்தது. சின்னப்பிள்ளையாக இருக்கும்போது, காசிசெய்த குறும்புகளுக்காகக்கூட அவள் அவனைக் கைநீட்டி அடித்ததில்லை.

ஆதிலட்சுமி வீட்டு வாசலில் சிறுசும் பெரிசுமாகப் பத்துப்பதினைந்து கட்டடத் தொழிலாளர்கள் நின்று கொண்டிருந்தார்கள். "கொல்லு வேலைக்காரங்கள்னாவே என்னுமோ அடிமைங்க மாதிரி ஆயிடிச்சி" என்று அலுத்துக் கொண்ட சங்கரன், "என் தம்பிகூடத்தான் மில்லுலே வேல செய்யறான். இப்பிடித் துடியா எவனாவது கை நீட்டிருவானுங்களா? என்னுமோ சங்கம்ங்கிறான். எந்தம்பிகூட அதுல மெம்பரு. இத்தினிக்கும் அவன் அங்க வேலக்கிச் சேர்ந்து ஆறுமாசந்தான் ஆவுது. வேலைக்குத் தக்க கூலி, அனுபவத்துக்குத் தக்க புரமோஷன் இல்லேன்னாலும் மானம் மருவாதி கெடாதுங்கறான். நம்பளுக்கும் அப்பிடி சங்கம் இருந்திச்சின்னா இப்பேர்ப்பட்ட அநியாயம் அக்கிருமம் நடக்கறப்ப தட்டிக் கேக்கலாம்" என்றான்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 71 04-04-2020 15:03:59

தன்மனதில்உருவங்கொள்ளாதிருந்தஏதோ ஒரு விஷயத்தை சங்கரன் விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டதில் தெளிவுகொண்டாள் அகிலாண்டம்.

"படிச்சவங்களுக்குத்தான் வெவரமா சங்கம்லாம் வைக்கத்தெரியும். எதுனாச்சும் உருப்படியாப் பண்ணமுடியும். படிச்சவுங்க என்னாத்துக்கு கொல்லு வேலைக்கு வரப்போறாங்க" என்று சங்கரன் ஏங்கியபடி பெருமூச்சு விட்டான்.

"அய்ய... என்னா இது, எல்லாரும் இங்க வந்திட்டாங்க" என்று குழம்பிப்போனவளாகக் கன்னியம்மா சங்கரனைப் பார்த்தாள்.

"நாந்தாம்மா சொன்னேன். எல்லோருக்கும் இது பக்கம் அதுக்கோசரந்தான்" என்றான் சங்கரன்.

"தப்புப்பண்ணா தண்டனை தரட்டும். வேண்டாங்கலை. ஆனா, எடுத்த எடுப்பில தொழிலாளி மேல கைய நீட்டறது அவங்கள வாய்க்கு வந்தமாதிரி திட்டறதுங்கறதெல்லாம் மோசமான சமாச்சாரம். இதை இப்படியே விட்டுரக்கூடாது. இப்படியே விட்டுரவே கூடாது" கணீரென்ற குரலில் சங்கரன் பேசினான்.

"அவுங்ககிட்டே பணபலம் கீது. எதுனாச்சும் பண்ணுவாங்க. எப்பிடியும் பொழைச்சுக்குவாங்க. நம்பளைப் போல ஏழைங்க என்னா பண்ண முடியும்? என்னாத்தையும் பொறுத்துக்கினுதான் போவணும்" என்றான் மணி.

"இன்னாடா பெரீய்ய பணக்காரனுங்க" மீனாட்சிக் கிழவி கோபத்துடன் கொதித்தாள். பணக்காரனுங்களா இருந்தா எதை வேணா பண்ணிப்புடுவானுங்களா? ரோட்டோரமா கடந்துச்சே பொணம் இவுங்ககிட்ட கீற பணத்துனாலே அத எழுப்பிட முடியுமா? மனுசாளு இல்லாம என்னாடா செய்யும் பணம்?"

சுண்ணாம்புக் கலவை ஏறி ஏறி தோலுரிந்து கறையாய்த் தெரியும் பாதங்களையே பார்த்துக் கொண்டிருந்த பாப்பாத்திக்கு, மீனாட்சிக் கிழவி சொன்னது சரியென்று பட்டது.

"எங்க அந்த காசிப்பையன்" என்று விசாரித்தாள் சின்னம்மா.

"வருவான்... எல்லாரும் வந்துடுவாங்க" என்று உறுதியும் தைரியமுமாக அகிலாண்டம் சொன்னாள். "அதா... அஞ்சாறு பேரு வர்ராப்பலக்கீது" என்று சொன்ன கன்னியம்மாளின் குரலில் சோகம் கரைந்து பெருமிதம் லேசாக எட்டிப் பார்த்தது. புதிய விடியல் உக்கிரங்கொண்டு வளர்ந்து கொண்டிருந்தது.

கார் உள்ளே வந்தது. காரிலிருந்து இறங்கிய ஆர்.ஆர்.எம் எதிரே நின்ற காசியைப் புன்னகையோடு பார்த்தான். கருப்புக் கண்ணாடியைக் கடந்து வந்து அளந்தது ஆர்.ஆர்.எம்மின் பார்வை. அவனைப் போன்றவர்களுக்குத்தான் இந்தத் தந்திரங்கள் கைவந்த கலையாயிற்றே. அப்பாவிகளைப்போல உள்ளத்தை, உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல் இருப்பதும் முடிந்தால் உள்ளேயிருக்கிற எண்ணத்துக்கு முற்றிலும் மாறான தோற்றத்தைக் காட்டுவதும்தானே அவனைப் போன்றவர்கள் பழக்கம்.

"காசி... இந்தப் பையைப் பிடி..." பெரிய பை ஒன்றை அவன் கைகளுக்குள் திணித்தான். ராகினி திகைப்புடன் பார்த்தாள். "என்னா காசி... உனக்கும் உன் சம்சாரத்துக்கும் புது டிரெஸ் வாங்கிட்டு வந்தேன். கொஞ்சம் பழம், பலகாரம்லாம் இருக்குது. வேறொன்றும் இல்லை. சும்மா கொண்டுபோய் உள்ளாற வையி... ஆர்.ஆர்.எம் உரிமையோடு கண்டிக்கும் வகையில் ஒரு செல்ல அதட்டல் போட்டான். காசி வீட்டுக்குள் போனான்.

"என்னமோ ஆத்திரத்தில அப்பிடிப் பண்ணிட்டேன். யாரு மன்னிக்காட்டியும் நீ என்னை மன்னிச்சுடணும்... காசிக்கு ஒரு அண்ணன் இருந்தா அவனைக் கண்டிக்க மாட்டானா? அந்தமாதிரி நெனச்சுக்க..."

ஆர்.ஆர்.எம்மின் வார்த்தைகளைக் கேட்டு ராகினி திகைத்துப் போனாள். "அய்யய்யோ... பெரிய வார்த்தைங்கள்ளாம் சொல்லாதீங்க சார்"

'என்னா செய்யறது ராகி, எம்மனசு கேக்க மாட்டேங்குதே' ராகினி ஒரு நொடி தாமதித்து

"இன்னிக்கு... யாரும்" என்று சொல்லி நிறுத்தினாள்.

"வேலைக்கு யாரும் வரலேன்னு தானே சொல்லவந்தே" ராகினி பதில் பேசாமல் மௌனமாக நின்றாள். "என்னம்மா... டல்லாயிருக்கிறே. ரெண்டு பேரும் சண்டை போட்டீங்களா?" அவளுடைய கண்கள் கலங்கின. 'பார்த்துக்க. இதான் நான் அப்பவே சொன்னது. இப்பிடித்தான் ஆகும். உனக்குப் படிப்பு இருக்குது. எல்லா வெவரமும் புரியுது. அவனுக்கு என்னா புரியும்... சொல்லு... எதுக்கு சண்டை போட்டீங்க? இங்கே வேலையே நாம பாக்கவேணாம் கௌம்புன்னிருப்பான். கெடச்ச வேலையைத் தொலைச்சிட்டு என்னா பண்றதுன்னு நீ பதிலுக்குக் கத்தியிருப்பே. நான் சொல்றது கரெக்ட் தானே?"

அதுவரையில் அப்படி நினைக்காத ராகினிக்கும் காசிக்கும் சட்டென்று வேலையில்லாமல் வறுமையோடு போராடும் வாழ்வின் அலைச்சல் நினைவுக்கு வர மனசு அலைக்கழிப்புக்காளானது. மனம் முழுக்க நிறைந்திருந்த கசப்பும் கோபமும் இந்தத் திகிலில் கரையத் தொடங்கியது. புத்தம்புதிய பத்துரூபாய்த் தாள்கள் ஐந்தை எடுத்து நீட்டினான் ஆர்.ஆர்.எம்.

"வச்சுக்க... டிபனுக்கு... செலவுக்கு ஆவும். ஆமாம் மொதல்ல காசி சாப்பிடட்டும். அப்புறம் எல்லா ஒர்க்கர்ஸையும் அவன்தான் போய்க் கூட்டியாரணும். "அய்யோ அவரா... அவரு போவாரா..." ராகினி கீச்சிட்டாள்.

"தபாரு ராகி! நீ சொன்னா காசி கேப்பான். உறுதியான குரலில் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லியபடி அவளைப் பார்த்தான் ஆர்.ஆர். எம். "நீ கட்டாயப்படுத்தி அவனுக்கு உறைக்கற மாதிரி சொன்னா அவன் நிச்சயம் கேப்பான். நீ கெட்டிக்காரி. புத்திசாலி. படிச்சவ. எப்பிடி சொல்லணுமோ அப்படி சொல்லி அவனை அனுப்பிவை". காசி இருந்த திசையைப் பார்த்துக்கொண்டே மௌனமாக நின்றாள் ராகினி.

## 13

மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாகக் கருமுகில்கள் குவிந்து நெருங்கிக் கிடந்தன. இருட்படலம் வானத்தை வேகவேகமாய் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. ராகினி காசியைப் பார்த்தாள். "மத்தவேலையாளுங்களை நான் எந்த மூஞ்சியோட பார்த்துப் பேசறது?" அவளும் சங்கடப்பட்டுப் போனவளாக அவன் முகத்தில் பதிந்திருந்த பார்வையைத் தரைக்குத் தாழ்த்தினாள்.

"என்னியப்பத்தி அவங்க என்னா நெனச்சிக்குவாங்க" சொல்லியவாறு எழுந்தான் காசி. "அந்த ரோஷமெல்லாம் சரிதான். ஆனா எல்லாருக்கும் வயிறுன்னு ஒண்ணு இருக்குதில்ல. அந்த மனுசனுந்தான் இவ்வளவுக்கு எறங்கி வந்து வாயைத் தொறந்து மன்னிப்புக் கேக்காத குறையா பேசிட்டுப் போறாரு. காரியம் பெரிசா வீரியம் பெரிசா?"

"வேற எங்காவது போகலாம். கூலிவேலதானே? எங்கியாவது போய் செஞ்சி மானத்தோட பொளைக்கலாம். எனக்கு இங்கே பிடிக்கலை..." ராகினி அலட்சியமாகச் சிரித்தாள்.

"சர்த்தான் ரொம்ப நல்லாயிருக்குது. எங்கே போனாலும் நம்மைப் போல வசதியில்லாதவங்க அவமானப்பட வேண்டியதாத்தான் இருக்கும்... போற புது எடத்திலேயும் இங்கே கெடைக்கற மரியாதை கூட கெடைக்குமோ கெடைக்காதோ? இது உங்களுக்குப் பொருத்தமான வேலை. மத்தபடி வேற வேலையைத் தேடறதுன்னா அப்படி உங்களுக்கு உருப்படியா என்னா வேலை தெரியும்...?"

"குத்தியா காட்டறே?" காசி அவளை எரிச்சலோடு பார்த்தான். "நாலுபேருக்கு முன்னால் நான் அசிங்கப்பட்டது உனக்கு உறைக்கலியா?" அந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. ஆர்.ஆர். எம்மின் எண்ணப்படி பேசவேண்டி வந்ததில் அவளுக்குத்தன்னைப் பற்றித் தனக்குள்ளாகவே தலைகுனிவாகத்தான் இருந்தது.

ராகினியின் கண்கள் பனித்தன. பெற்றவர்கள் தன்னைப் பாழும் கிணற்றில் தன்னைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு விட்டதைப்போல உணர்ந்தாள். ராகினிக்கு

விம்மி விம்மி அழவேண்டும் போல் இருந்தது. எழுந்து உள்ளேபோய் முழங்காலில் முகம் புதைத்து உடல் குலுங்க விம்மினாள்.

ராகினியின் பக்கத்தில் உட்கார்ந்து பரிவோடு அவள் தோளில் கையை வைத்தான். அவனை நிமிர்ந்து பார்த்த ராகினி, "இங்க வேல பாக்கணும்னு எனக்கு மட்டும் ஆசையின்னா நெனைக்கறீங்க? வேற வழியில்லையே..." அவள் மீண்டும் அழ ஆரம்பித்தாள். "சரி சரிம்மா...அழாதே. தலையை வலிக்கப் போகுது... நான் போய் டிபன் வாங்கியாரட்டா". "மழை... கனமா வந்துடப்போகுது. எதுக்கும் குடையைக் கொண்டு போங்க..." ஓடிப் போய் குடையை எடுத்துவந்து விரித்து அவன் கையில் திணித்தாள்.

டிபன் வாங்கிக்கொண்டு திரும்பிய காசி, ராகினியோடு ஆதிலட்சுமி, கன்னியம்மா, சங்கரன், அகிலாண்டம் ஆகியோர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும் ஆச்சர்யப்பட்டுப் போனான். மற்ற தொழிலாளர்களை எதிர்கொள்வது தனக்குத் தர்மசங்கடமாக இருக்கும் என்பதைப் புரிந்துகொண்டு ராகினியே வீடுவரை போய் அவர்களை அழைத்து வந்திருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. எப்படித்தான் அவர்கள் மனதை மாற்றினாளோ என்று வியந்து போனான். ஆனாலும் அதை வெளியே காட்டாமல், "அதானே பார்த்தேன் என்னாடா இது இப்பிடி காலமில்லாத காலத்திலேஇப்படிப் பேய்மழை புடிச்சிக்கிச்சேன்னு" என்றான் சகஜ பாவத்தில். வெளியே பலமாக இடிஇடித்தது.

பிளாஸ்கை அவனிடமிருந்து வாங்கி டம்ளரில் காப்பியை ஊற்றி முதலில் ஆதிலட்சுமியிடம் கொடுத்தாள் ராகினி. காப்பியைக் குடித்தவாறே, "காசி, ராக்கு எல்லாம் சொல்லிச்சி" என்றாள். காசி வியப்புடன் ராகினியை வியப்புடன் பார்த்தான்.

"ஓணர்தான் தான் பண்ண தப்பை உணர்ந்து மனசுக்குள்ளே ஃபீல் பண்ணி ராகினிக்கிட்டே சொல்லிட்டாருல்ல, அப்புறம் என்ன?" என்றான் சங்கரன். காசியின் நெற்றி சுருங்கிற்று. "வேணுமின்னா எங்கையிலவே சொல்றேன்னாராமே. அதான் பெரிய மனுசன்றது. சரி வுடு. என்னாவோ நடக்கக் கூடாதது நடந்து போயிடிச்சு..."

"வேலை செய்யாவிட்டாலும் இன்னிக்கு சம்பளம் போட்டுத்தரேன்னு சொல்லிங்கறாராமே... உங்கையில ரொம்ப மருவாதியா பேசனாராமே..." என்றாள் குரலில் திருப்தியோடு அகிலாண்டம்.

"இன்னாடா கம்னு குந்திங்கறே" ஆதிலட்சுமி அவனை உலுக்கினாள். சட்டென்று, அவன், "ஆமாம்மா, ரொம்ப மருவாதியா பேசனாரு, அன்னிக்கு என்னமோ அப்படி ஆயிரிச்சி"

"அப்ப, என்னா பண்றது இப்ப?" கன்னியம்மாள் ஆர்வத்துடன் கேட்டாள். "நாளையிலிருந்து வேலைக்கு ஒழுங்கா முறையா வந்துட வேண்டியதுதான்" என்றான் சங்கரன். சங்கரனின் வார்த்தைகளை ஒரு தீர்ப்பைப்போல ஏற்றுக்கொண்ட அனைவரும் கலைந்து போனார்கள்.

## 14

கொலுத்துக் கரண்டியும் மட்டப்பலகையும் இரண்டாவது தளத்திலிருந்து சட்டென்று கீழே விழுந்ததும் அஞ்சலை திகைத்துப்போய் விட்டாள். கீழே இருந்து சிமெண்டும் சரளைக் கற்களும் நிறைந்த தலைச்சுமையுடன் சாரத்தின் மேல் ஏறி வந்துகொண்டிருந்த கம்சலையின் கால்மீது கொலுத்துக் கரண்டி சளாரென்று விழுந்தது. விழுந்த வேகத்தில் ரத்தம் பீரிட்டது. இரண்டு விரல்கள் தனியாகத் தொங்கின. அறுந்து தொங்கும் சதையும் பெருகும் ரத்தமும் தரையை நனைத்தன. கம்சலை துடித்துப் போனாள். தலையிலிருந்த சட்டி நிலத்தில் விழ தடுமாறிச் சரிந்தாள். காசி கீழ்த்தளத்திற்கு ஓடிவந்தான்.

எங்கோ போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தனர் காவேரியும் ராகினியும். பதற்றத்தோடு வந்த காசியைப் பார்த்து என்ன? என்ன ஆச்சு? சொல்லுங்க... என்றாள் ராகினி. நடந்ததை ஒற்றை வரியில் விவரித்துவிட்டு காசி தண்ணீர் எடுப்பதற்காக ஓடினான். காவேரி ராகினியைப் பார்த்தாள். ராகினி பதற்றத்தை

வெளியே காட்டிக் கொள்ளாமல் சீனிவாசனைப் பார்த்து "சீனி, ஓடிப்போய் தெரு முனையில் இருந்து எதுனா ஆட்டோ கூட்டிக்கினு வாயேன்" என்றாள். "சரி. மத்தவங்க போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க" என்றாள். அஞ்சலை அவளை எரிச்சலோடு பார்த்தாள்.

"ஆட்டோ வந்திரிச்சி..." என்றபடி சீனி ஓடிவந்தான். "கம்சலை கூட தொணைக்கு யாரு போறது" என்ற ராகினியிடம் "நானும் அன்னம் அக்காவும் போதும்" என்றாள் அஞ்சலை. "யாருன்னா ஆம்பளையாளுங்க கூட போனாப் பரவாயில்லை" என்று தனம் கேட்டதற்கு, "நான் வரட்டுமா" என்று ராகினியைப் பார்த்தவாறே காசி கேட்டான். "ஆட்டோகாரனுக்குத் துட்டு சரிபண்ணனுமே" என்றவாறு முடித்தாள் அஞ்சலை.

ஆட்டோவுக்கு எவ்வளவு துட்டாகும்? என்ற காவேரியிடம், "இருபது ரூபா கேப்பாங்க, அப்பறமா மருந்து மாத்திரைன்னு சீட்டு எழுதிக் குடுப்பாங்க. அத்த வாங்கணும்..." என்றாள் அஞ்சலை. "சரி... அப்பக் கிளம்புங்க... எங்கிட்டக் கொஞ்சம் துட்டுக்கீது நான் தர்றேன்" என்றாள் காவேரி. காசிக்குப் பெருமையாக இருந்தது காவேரியின் குணத்தை நினைத்து.

"கம்சலைக்கு ஓணர் எதுனா உதவி பண்ணுவாரா அண்ணி?".

"நமக்கு என்னா தெரியும்"

"இல்ல... வேலை பண்ணிக்கினு இருக்கசொல்லதானே கம்சலைக்கு வெரலு போச்சு. ஞாயமாப் பார்த்தா அவர் உதவி பண்ணியாவணும் தானே?"

"அப்பிடி கண்டிசனா சொல்லிட முடியுமா? அவராப் பாத்து பெரிய மனசு பண்ணி அய்யோ பாவம்னு நெனச்சா உண்டு. அவ்வளவுதான்..."

"நீங்க படிச்சவுங்க. வெவரம் தெரிஞ்சவுங்க. ஓணர்கிட்ட எடுத்துச் சொல்லி ஞாயமா கம்சலைக்கு என்ன பண்ணணுமோ அதை நாம்பதான் பண்ணணும். அந்தப்பொண்ணு பாவமில்லை. நீங்க சொன்னா ஓணர் கேட்பாருங்கறாங்க" காவேரியின் பார்வை மேல்தளத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களைத் தொட்டுவிட்டு மீண்டும் ராகினியின்மேல் படர்ந்தது.

"இவங்க நம்பளைப்போல ஏழைப்பட்ட ஜனங்க, அண்ணி நம்பளாலதான் இவங்க கஷ்டத்தைப் புரிஞ்சுக்க முடியும். நாமதான் இவங்களுக்கு சப்போர்ட்டா இருக்கணும்..." சொல்லிக் கொண்டிருக்கும் போதே விம்மலும் கதறலுமாக ஓடிவந்தாள் கம்சலையின் தாய் பங்கஜம். வெளியே ஆர்.ஆர்.எம்மின் படகுக்கார் வந்து நின்றது.

## 15

"யாரும்மா நீ? இப்ப என்னத்துக்கு ஓயாம அழுவறே. நிறுத்தும்மா உன் அழுகையை" என்றார் ஆர்.ஆர்.எம். "இந்தம்மா இங்கியா வேலை செய்யறாங்க? எனக்குப் புரியலியே. இதென்ன இது? கொலுத்துக்கரண்டி மட்டப்பலகையெல்லாம் இப்படி விழுந்து கெடக்குது என்ன... என்ன ஆச்சு? ராகினி மெதுவாக நடந்தவற்றைச் சொன்னாள்.

சரி... அதெல்லாம் இருக்கட்டும். வேலையப்பாக்காம இப்ப காசி எங்கே போய்ட்டான்?" ராகினியின் முகம் சிறுத்தது, எவ்வளவுதான் கட்டுப்பாட்டுடன் அவள் மனதை இறுக்கி வைத்திருந்தாலும் ஒரு கொடிய விபத்து நடந்திருக்கிற இடத்தில் ஆர்.ஆர்.எம் காயம்பட்டவளை முழுமையாகப் புறக்கணித்து மனிதாபிமானமில்லாமல் பேசியது அவளைப் பாதித்தது.

"அவருகூட ஆஸ்பத்திரிக்குத்தான் போயிருக்கறாரு..."

"என்னா அநியாயம்? வேலைக்கு வந்தவங்கள்ள பாதிப்பேரா ஆஸ்பிட்டலுக்குப் போறது? ராகினி நீயும் வாயத்தொறந்து ஒண்ணும் சொல்லாம இருந்தியா? நான் என்ன கள்ளநோட்டா அச்சடிக்கிறேன்? உழைச்சு சம்பாரிச்ச காசைத்தானே இவங்களுக்கு கூலின்னு அழுதுதொலைக்கிறேன். இப்படிப் பண்றாங்களே...?" என்று சலித்துக் கொண்ட அவன் காது கொடுத்துக் கேட்க முடியாத வசைமொழிகளைப் பொழியத் தொடங்கினான்.

காவேரி அப்போதுதான் அந்த இடத்துக்கு வந்தாள். அவன் பேச்சு காதில் விழுந்து அவள்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 75 04-04-2020 15:04:00

மனதில் எரிச்சலை ஏற்படுத்தியது. அவன் அலட்சியமாக அவளைப் பொருட்படுத்தாமல் வெறுமையாகப் பார்த்தபடி நின்றான். "யாரும்மா நீ?" காவேரி வாயைத் திறப்பதற்குள் முந்திக்கொண்டு ராகினி, "என் நாத்தனாருங்க காவேரின்னு... படிச்சிங்கிது..." என்றாள்.

"கம்சலையோட கால்வெரலுங்க இரண்டும் துண்டாப் போயிட்டதுங்க. ரெத்தம் நிறைய கொட்டிருச்சுங்க...உங்க கட்டடத்துல வேலை பாத்துக்கிட்டிருக்கிறப்பதானே அவளுக்கு இப்பிடி ஆயிருக்குது?" காவேரி வாயைத்திறந்தாள்.

"சரி... அதுக்கு நான் என்னாம்மா பண்றது? நீ என்னமோ படிச்சவள்னு ராகினி சொல்லுது. நீ என்னடான்னா கொஞ்சம்கூட அறிவில்லாமப் பேசறியே" என்று காவேரியைப் பார்த்துக் கேட்டான் ஆர்.ஆர்.எம். கொஞ்சம் அளவுக்கு மேலேயே வார்த்தைகளைக் கொட்டிவிட்டோமோ என்ற குறுகுறுப்பும் தொழிலாளர்கள் வேலையை நிறுத்தித் தொல்லை தந்து விடுவார்களோ என்ற எண்ணமும் அவனுக்குள் மேலோங்கியது.

"ஏழைப்பட்டவங்க கம்சலையை நம்பி இருக்கிற குடும்பம். நீங்க அவங்களுக்கு உதவணும். அதுதான் ஞாயம்."

"சரி அவ்வளவுதானே... செஞ்சுட்டாப்போச்சு..." காவேரி திகைத்துப் போனாள். இதைப் புடிம்மா. கம்சலைதானே ஒம்பொண்ணு பேரு. "அந்தக் கம்சலை ஒடம்பு சொஸ்தமானதும் வேலைக்கு அனுப்பு போ..." பங்கஜம் அவன் நீட்டிய ரூபாய் நோட்டுகளை இரு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டாள். கண்களைத் துடைத்தபடி, "மகராசனா இருக்கணும்" என்றாள்.

"காசி. நம்ப கட்டட வேலை ரொம்ப ஸ்லோவா இருக்குதுப்பா. வேற ஒரு கட்டடவேல வேற தொடங்கவேண்டியதா இருக்கு. புதுசா கட்டடம் கட்டறப்ப நிறைய கணக்கு வழக்கெல்லாம் வரும். ராகினிக்கு இப்பவே கைநிறைய மூச்சு முட்டற வேல... புதுசா ஒரு ஆளப் போட்டுக்கலாம்மான்னு பாக்கறேன்" என்றான் ஆர்.ஆர்.எம். காசி திடுக்கிட்டவன்போல ராகினியைப் பார்த்தான்.

"நம்ப காவேரியைப் பாத்தா அந்த வேலைக்குப் பொருத்தமானவளா இருப்பான்னுதான் எனக்குப் படுது. நீங்க ரெண்டுபேரும் என்ன சொல்றீங்க?" காவேரியின் மனத்தில் சந்தோசம் பெருகியது. தனக்கும் ஒரு வேலை கிடைத்துவிட்டது. இனிமேல் தான் யாருக்கும் பாரமாக இருக்க வேண்டியதில்லை என நினைத்தாள். "காவேரி உனக்கு இஷ்டம்தானே?" என்றான் ஆர்.ஆர். எம். காவேரி தன்னிச்சையாகத் தலையை அசைத்தாள். அவன் கிளம்பிப் போனான்.

ராகினியின் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னவென்று புரியாத சங்கடம் இதயத்தைப் பிசைந்தது. ஆர்.ஆர்.எம்மின் சுயநலம், வேலை நடந்தால் போதும். வேலையைச் செய்து கொண்டிருக்கிற மனிதர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணும் போக்கு, பத்தையும் நூறையும் கொடுத்து ஏழைகள் வாயை அடைப்பது, ஏய்ப்பது என்ற அவ்வளவையும் நினைத்து அப்படிப்பட்டவன் தரும் வேலையை சந்தோசமாகக் காவேரியைப் போன்ற ஒருத்தியும் ஏற்றுக் கொள்ளவேண்டிய வறுமையும் நெருக்கடியும் அவளை வேதனையில் ஆழ்த்தின. தொண்டையில் நிற்கும் அந்தக் கசப்பை அவள் வெளியிடவும் முடியாது. வெளியிட்டாலும் குடும்பத்தார் அதைச் சரியாகப் புரிந்து கொள்வது கஷ்டம். மொத்தத்தில் எதையோ இழந்து போன குழப்பத்தில் ஆழ்ந்து போனது அவள்மனம். கணக்கெழுதும் போது அடிக்கடி தடுமாறினாள். விரலைக் கடித்துக் கொண்டாள்.

அப்போது யாரோ மூன்றுபேர் உள்ளே வந்தார்கள். காசி அவர்களைப் பார்த்தான். "யாருங்க வேணும்?" "நாங்க கொத்தனாருங்க. அய்யா இங்க வரச்சொன்னாரு. புதுசாக் கட்டடம் கட்டணும், அஸ்திவாரம் போடணும்னு சொன்னாரு. மழை ஆரம்பிக்கிறதுக்குள்ள கட்டட வேலையை முடிச்சிக்கணுமின்னு அய்யா சொல்றாரு. அதனால வெளியூர்ல இருந்தே வேலைக்கு ஆளுங்களை அழைச்சார்ரோம்." "அவங்கள்ளாம் எங்க தங்குவாங்க..." என்ற சிட்டிபாபுவிடம், "நாலு குடிசையைப் போட்டுக்கனா போச்சு. ஆறேழு

குடும்பங்க அப்படியே குடும்பம் குடும்பமா வாரவங்கதானே. அது என்னான்னா அப்படி வந்தாதான் ராப்பகலா வேல செய்யலாம்... நமக்கும் பணச்செலவு அதிகமாவாது" என்றான் வந்தவன். தாய் ஆதிலட்சுமி வருவது காசியின் கண்களில் பட்டது. காசிக்குச் சந்தோஷமாயிருந்தது.

## 16

சட்டென்று வாடிய ராகினியின் முகத்தைக்கண்டு ஆதிலட்சுமி "என்னம்மா... என்னாச்சு?" என்று கேட்டாள். "ஒத்தைத் தலைவலியால் கஷ்டப்படறா... சோர்ந்து போயிருக்கா..." என்றான் காசி. ஆர்.ஆர். எம்முக்காக கணவனுக்கும் குடும்பத்தாருக்கும் தெரியாமல் மனசில் பூட்டி வைத்திருக்கிற ரகசியத்தின் பாரம்தான் அவளுடைய தலைவலிக்குக் காரணம் என்று சொல்ல மாட்டாதவளாகத் திணறினாள் ராகினி.

இரண்டு நாட்களுக்குள் அந்தக் கட்டடத்தின் பின்னால் தெரியும் பொட்டலுக்குள் ஆறு குடிசைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆறு குடிசைகளுக்குள்ளும் ஆறு குடும்பங்கள். எப்போது பார்த்தாலும் சத்தமாக இருந்தது. புதிய கட்டடத்திற்கான கணக்கு வழக்குகளைப் பார்க்கிற வேலை காவேரியிடம் ஒப்படைக்கப்பட்டது. புதிய கட்டடத்தின் வேலைப் பொறுப்பு முழுவதும் வீராசாமியின் வசமே விடப்பட்டிருந்தது.

"நல்லா வேலை பார்க்கிறாங்க நம்ம ஆளுங்க" என்று ஆர்.ஆர்.எம்மிடம் சந்தோசம் பொங்கச் சொன்னார் வீராசாமி. அவன் முகத்தில் எந்தவித மாற்றமுமில்லாமல் "என்னவோ கொஞ்சம் பரவாயில்ல" என்றான். தொழிலாளிகள் எவ்வளவுதான் மாடாக உழைத்தாலும் அவர்களைப் பாராட்டி ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது. இருபது ஆண்டுகளாக அந்தத் தத்துவத்தையே இம்மியும் பிசகாமல் அவன் கடைப்பிடித்து வருகிறான். "முடியறாப்ல இருக்கற அந்தக் கட்டடத்துக்குத்தான் வேலைக்கு ஆளு சரியா அமையல. காலைல கட்டடத்துக்கிட்டே வந்து சேரவே ஒம்பது மணி ஆயிடுது. உள்ளூர்க்காரங்க. அதப் பாக்கிறப்ப அவங்களுக்கு இவங்க கொஞ்சம் பரவாயில்லதான்" பணிவோடு ஆர்.ஆர். எம்மைப் பார்த்தார் வீராசாமி.

"எங்க பார்த்தாலும் கட்டட வேலைங்க நடந்தபடியே இருக்குது. சில சமயங்களிலே கொத்து வேலைக்காரங்களுக்கோ சித்தாளுங்களுக்கோ ஒண்ணு ரெண்டு ஆக்ஸிடென்ட்கூட நடந்திடலாம். எதுவுமே நம்ம கையில இல்ல"

"ஆமாங்க" என்றார் வீராசாமி. "ஏதோ எதிர்பாராத விதமா கட்டடம் கட்ற தொழிலாளிங்களுக்கு எதுனா ஆகித் தொலைச்சிடுது. கவனமா இருக்கவேண்டியது அவங்க பொறுப்பு. அதை விட்டுட்டு பராக்கா இருந்து கையைக் காலை ஒடச்சுக்கிட்டு ரெண்டாயிரம் கொடு அஞ்சாயிரம் கொடுன்னு கேட்டா எனக்கது பிடிக்காது" பரபரப்புடன் வந்து விழுந்தன ஆர்.ஆர்.எம்மின் வார்த்தைகள்.

"அதில்ல... கட்டட வேலைக்கு வர்றவங்க எல்லாமே ஏழைப்பட்டவங்க. அன்னாடம் சம்பாதிச்சு அன்னாடம் வவுத்த ரொப்பிக்கிறவங்க. திடீர்னு ஏதுனா ஆயிட்டா என்னா பண்ணுவாங்க. அப்பிடி ஆயிடக்கூடாது. ஆயிட்டாக்கூட எதுனாச்சும் நூறு இருநூறு கொடுத்தாகணும்னு நெனைக்கறேன்" ஆயிரக்கணக்கில் எதிர்பார்க்காமல் இந்தக் குறைந்த தொகையை வீராச்சாமி சொன்னாரே என்ற ஆறுதலோடு மனதிற்குள் பெருமூச்சு விட்டபடி "சரி அப்படியே பண்ணிடுவோம். புண்ணியமாவது சேரட்டும்" என்றான்.

## 17

கம்சலையைக் கண்டதும் ராகினி திடுக்கிட்டுப்போய் விட்டாள். அக்குளில் ஒரு கட்டையை வைத்துத் தாங்கியபடி எக்கி எக்கி நடந்துவந்த அவளுடைய உருவமே மாறிப்போயிருந்தது. இளைத்துக் குச்சியாகியிருந்தாள். ராகினியைக் கண்டதும்தான் தாமதம். அவள் விக்கிவிக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

"நான் என்ன பண்ணப்போறேனோ தெரியலை. வலி தாங்க முடியலை. உசிரு போகுது. அப்பப்ப ஜுரம்வேற வந்துடுது.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 77 04-04-2020 15:04:00

எதுக்கோசரம் பொளைச்சிருக்கணும். செத்துப் போயிரலாம்னுகூட தோணுது" என்றவளைச் "சாப்பிட்டியா" என்றாள் ராகினி.

அக்கா நான் இங்க வந்தது ஒரு வேளை சாப்பாட்டுக்கில்லக்கா... ஒரு வேலை போட்டுக் கொடுங்க" என்றவளிடம் ராகினி, "உன் உடம்பு இருக்கற நெலைமைல உன்னால என்ன வேலை பண்ணமுடியும் கம்சலை? காயம் ஆறணுமே"என்றாள்.

"அது ஆறும்னு எனக்குத் தோணலை. காஞ்சனாவுக்கும் விரல்ல இப்படித்தான் வந்திச்சி. ரெண்டு வருசத்திலே போயிட்டா. என்னமோ நான் இருக்கறவரை அம்மா கண்கலங்காம இருக்க நான் ஏதாவது பண்ணணும்க்கா. எல்லாவற்றையும் பின்னால் நின்று கேட்ட காவேரி ராகினியைப் பார்த்துக் கேட்டாள், "கம்சலைக்கு முதலாளி ஏதாவது ஒத்தாசை பண்ணமாட்டாரா?" ராகினி வெறுமையாகச் சிரித்தாள். காவேரிக்கு ஆர்.ஆர்.எம்மின் பாணி பிடிபட இன்னும் கொஞ்சநாளாகும் என்று நினைத்துக் கொண்டாள்.

## 18

ராகினி திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். வெளியே குழந்தைகள் வீறிடும் குரலும் பெரியவர்களின் பரபரப்புச் சத்தமும் மழையின் பேரிரைச்சலுடன் கலந்து குழம்பியது கேட்டது. மழை காற்றோடு கூடி சுழன்று சுழன்று அடித்தது. அடர்ந்த திரையாக இருள் எங்கும் மூடிக்கவிழ்ந்தது. இடி பெருத்த சத்தத்துடன் தரை இறங்கியது. எங்கோ விழுந்தது. மின்னல் வெளிச்சத்தில் எதிரேயிருந்த கட்டடத்தில் நனைந்த கோற்றத்துடன் நிற்கிற வேலையாட்கள் ராகினியின் பார்வையில் பட்டனர். ரோட்டின் ஓரத்தில் இருந்த மரம் சடசடவென்று முறிந்து விழுந்த சத்தம் கேட்டது. காற்று மூர்க்கங்கொண்டு ஜன்னலை மூடியது.

ராகினிக்குத் தூக்கமே வரவில்லை. சே! என்ன வாழ்க்கை... யாருக்கும் அமைதியில்லாமல்... யாருக்கும் மகிழ்ச்சியில்லாமல். துரையண்ணனின் ஆட்டோ விபத்தில் நொறுங்கிவிட்டது. சே... சே... மனம் வெறுமையாக அலுப்படைந்து சோர்ந்தது. அவள் கண்களிலிருந்து அவளையறியாமலேகண்ணீர்பெருகிவழிந்தது. அவளை எல்லோரும் ஏமாற்றிவிட்டதாக நினைத்தாள். அப்பா, அம்மா, புருஷன் என்று யாருமே அவளை மனுசியாக நடத்தவில்லை. அவளை மதித்துப் பேசியதில்லை. அவரவர் சுயநலமே அவரவர்க்குப் பெரிது. அவள் பலி. நினைவுகளுக்கிடையே ஆர்.ஆர்.எம் வந்தான். ஏதோ ஒரு வேலை. இருக்க இடம். கைநிறைய சம்பளம் என்று சிறிது நம்பிக்கை அளித்த மனிதன். தன்னைப் பாராட்டி உற்சாகமூட்டிய ஆள். இப்படித்தான் ராகினி அவனை நினைத்திருந்தாள். ஆனால், நாளாக நாளாக அதுவும் பொய்யாக, நடிப்பாக, பாசாங்காக, சுயநலமாக இருந்ததை அவள் உணர்ந்தாள். மனம் கசந்தது.

சில தினங்களுக்கு முன்னால் ஒருநாள் தன்னிடம் மிகுந்த பவ்யமாகவும் அன்பாகவும் அக்கறையாகவும் பேசி மூன்று சூட்கேஸ்களைப் பத்திரமாக வைத்திருந்து தரும்படியும் வேறு எவருக்கும் அது தெரியக்கூடாது என்றும் யார்வந்து கேட்டாலும் இது அவனுடையது என்று சொல்லக்கூடாது என்றும் முப்பாத்தம்மன் பேரிலும் காசியின் பேரிலும் சத்தியம் வாங்கியதும்...

வேறொரு மாலைப்பொழுதில் மூன்று நான்குபேர் ஒரு காரில் வந்து அவளிடம் ஆர்.ஆர்.எம்மைப் பற்றி விசாரித்ததும் கட்டட பகுதிகளைப் பார்த்துவிட்டு அவன் எப்போது கடைசியாக அங்கே வந்தான் என்றெல்லாம் துருவித் துருவிக் கேட்டதும் "ஒரு வாரத்துக்கு மேல ஆச்சு" என்று அவள் பொய் சொன்னதும் அவளுடைய பொய்யில் காசி திகைத்துப்போய் நின்றதும்...

அந்தக் கனத்த சூட்கேஸ்களைக் காசிக்குக்கூடத் தெரியாமல் அவள் வீட்டுப்பரணில் மறைத்து வைக்க அவள்பட்ட பாடும் ஒருவாரம் கழித்து அவன் கேட்டதும் திருப்பிக் கொடுத்ததும்... எப்படியெல்லாம் ஒவ்வொருத்தரும் அவர்கள் வசதிக்கு அவளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவில் அவள் மனம் குறுகுறுத்தது.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 78 04-04-2020 15:04:00

ஆனால் அந்த சூட்கேசுக்குள் என்ன வைத்திருந்தீர்கள் என்று அவனிடம் அவள் ஒருநாள் கூடக் கேட்டதில்லை. அவனேதான் சொன்னான். "அது நிறைய பணமும் தங்கமும் வச்சிருந்தேன் ராகினி" அவள் தன் திகைப்பை மனசுக்குள் அடக்கிக் கொண்டாள். "ஆனாலும் நீ ரொம்பக் கெட்டிக்காரி... யாருக்கும் தெரியாம ரகசியத்தைக் காப்பாத்திட்டே" என்றான்ஆர்.ஆர்.எம். ஒரு தினுசாக சிரித்தபடி. "புத்திசாலிதான்... அப்படியுள்ளவங்க எதையும் துணிஞ்சு செஞ்சுடுவாங்க. இருந்தாலும் ஒரு விதத்துல ஆபத்தானவங்க...அவங்ககிட்ட ஜாக்கிரதையாத்தான் இருக்கணும்.

அவளுக்கு எரிச்சல் ஏற்படுத்தும் நினைப்புடனும்உன்னைவிட்டால்எத்தனையோ பேர் என்று காட்டவுமே அவன் காவேரியை அங்கே வேலைக்குச் சேர்த்துக் கொண்டானோ என்றுகூட அவள் அடிக்கடி நினைத்துக் கொள்வாள். அப்படியும் இருக்கலாம். தவிரவும் பொம்பளைங்களுக்குத் தில்லு முல்லு பண்ணத் தெரியாது. கால் சம்பளம் தந்துவிட்டு ரெண்டாள் வேலை வாங்கலாம் என்ற அயோக்கியத்தனமான முதலாளி மனோபாவமும் காரணமாக இருக்கும் என்று சுசீலா சொல்வதும் நினைவுக்கு வர ராகினியின் மனம் கசப்பில் மூழ்கியது.

## 19

மழை மீண்டும் மூர்க்கமாகப் பெய்யத் தொடங்கியது. "ஏய்யா சாரக்கொம்பெல்லாம் வெள்ளத்துல அடிச்சிக்கிட்டு போகுது. நீங்கள்ளாம் சௌகர்யமா நிக்குறீங்க... இறங்குங்க... எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணுங்க" என்றவன் சட்டென்று காசியைப் பார்த்து "ஏம்பா ஸ்டோர்ரூம் பக்கம் போனியா? நெலமை எப்படி இருக்குது பாத்தியா? காவேரி இன்னும் வரலியா? பொறுப்பில்லா பொண்ணு"என்றான் ஆர்.ஆர்.எம்.

"எல்லாப் பொருளும் உள்ளே சாக்ரதையாயிருக்குதுங்க" தன் கட்டட வேலையைக் கெடுத்து வைத்திருக்கிற மழைமேல் வந்த ஆத்திரத்தை எங்கே தன்மேல் கொட்டிவிடுவானோ என்ற அச்சத்தில் காசி ஒடுங்கியது ராகினியை வேதனைக்குள்ளாக்கியது.

தலையைச் சொரிந்து கொண்டே அங்கே வந்த ரங்கன் கையை நீட்டிக் காட்டினான். கட்டடத்தின் பின்வெளியில் அந்தத்தொழிலாளர்கள் இருந்த குடிசைகள் எல்லாம் வெள்ளத்தில் அமிழ்ந்து குலைந்து போயிருந்தன. "உள்ளே போக முடியல... காப்பித்தண்ணிகூட குடிக்கல... நாங்க ராவுக்கு எங்க தங்கறது...?" ரங்கன் குரலில் கண்ணீர் தளும்பியது.

"ஏய்யா இப்ப அதுவா பெரிசாப் போயிடுச்சி... கேடுகெட்ட மழைவந்து வேலையக் கெடுக்குது. எவ்வளவு லட்சம் வேஸ்ட். மினிஸ்டர் கொடுத்த தேதில கட்டடம் தொறந்தாவனும். பூசன சிமிண்ட் பூராவும் கரைஞ்சு வழியுது.சாரக்கொம்பெல்லாம் மறுக்க ரெடிபண்ணியாவனும் உங்களுக்கெல்லாம் காப்பி கேக்குது காப்பி...த்தூ" என்றபடி நிலத்தில் இறங்கிக் கட்டடத்தின் பக்கமாகப் போனான்.

ஆர்.ஆர்.எம்மின் முகம் சட்டென்று இறுகியது. சே... ஒரு கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்குள் எத்தனை தொல்லைகளை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. இவங்களை அனுசரித்துப் போகவேண்டியதாகவும் இருக்கிறது என நினைத்தபடி தனது டிரைவரைக் கூப்பிட்டான்.

"பார் சீனு... காசியோட இங்கே இருக்கிற வேலையாளுங்கள நம்ப மேட்டுக் கொட்டாய்க்குக் கூட்டிக்கிட்டுப் போ. ரங்கனைவிட்டு எல்லாத்துக்கும் சுக்குமல்லிக் காபி தரச் சொல்லு. ஒவ்வொருத்தரா கௌம்பி பக்கம் பக்கம் போயிரக்கூடாது. ஒரே இடமா கமுக்கமா இருக்கட்டும்" என்றவன் காசியை நோக்கி "காசி உனக்கு ஒண்ணு சொல்றேன். வேலை குடுக்கற முதலாளி மழைக்கும் பசிக்கும் ஏற்பாடு பண்ணனும்னு நீங்கள்ளாம் நெனக்கறீங்க பாருங்க. அது ரொம்பத் தப்பு. இவங்க ஏதோ மழையையும் வெள்ளத்தையும் கண்ணாலயே காணாதவங்கறாப்பல பேசறியே... நீ கொஞ்சம் ஸ்டிரிக்டா இருக்கணும்பா... இவங்களுக்குக் கொஞ்சம்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 79 04-04-2020 15:04:00

இடம் குடுத்தா தலைமேலயே ஏறிடுவாங்க. சரி...சரி... முதல்ல கட்டடத்தைச் சுத்தம்பண்ற வழியைப் பாரு" என்றான்.

பிறகு எதையோ நினைத்துக் கொண்டவனாக, 'ராகினி' என்று கூப்பிட்டு "ஆளுக்குப் பத்து ரூபாவாக இவங்க கையில குடுத்துடு. வேலையாகணும். மத்தியானத்துக்கு மேலயாவது வேலையைத் தொடங்கணும். இவங்க இன்னிக்கே பாதிநாள் வேல செஞ்சதாத்தான் கணக்கு வக்கணும். புரிஞ்சுதா? இன்னொரு விஷயம் ராகினி. என்கிட்ட வேலை செய்யறவங்க எனக்கு விசுவாசமா இருக்கறதுதான் பிடிக்கும். உன் புருஷன்கிட்டே சொல்லு. அவன் என்னைப் பற்றித்தான் யோசிக்கணும். சம்பளம் தர்றவன் நான் தானே... சொல்லிவை அவன்கிட்டே..." சட்டென்று காருக்குள் உட்கார்ந்து கொண்டான் ஆர்.ஆர்.எம்.

## 20

அத்தனை காலையில் தங்கள் குடிசைக்கு வந்த சுசீலாவைக் கண்டதும் காவேரிக்கு சந்தோஷம் பொங்கிற்று. மழையும் வெள்ளமும் ஆர்.ஆர்.எம்மின் சாக்கடை வார்த்தைகளும் தொல்லைக்குள்ளாக்கி இருக்கிற அந்தத் தருணத்தில் இருந்தே அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு அவள் வருகை ஆறுதலும் நம்பிக்கையும் தரும் என்ற எண்ணம் ஏற்பட்டது காவேரிக்கு.

சுசீலாவின் குரல் துயரத்தில் கனத்தது.

"இந்தக் கட்டட வேலைக்காரங்களோட பொழப்பு கரணம் தப்பினா மரணம்னு இருக்கு. மத்தபடி எத்தனை வேதனை. எவ்வளவு தொல்லை. நேருக்குநேராப் பாக்கறவ தானே நீ... மத்தவங்களோட வாழ்க்கையிலே கஷ்டம் வந்து போகும். இவங்களுக்கோ வாழ்க்கையே கஷ்டமாத் தானே போய்க்கிட்டிருக்குது. அவங்க கண்ணை நாம்பதான் திறக்கணும். உதிரியா இருக்கறதாலே கேட்பாரற்றுக் கெடக்கற இந்தக் கட்டட வேலைக்காரங்களுக்கு ஒத்துமையா இருக்கறதோட பலத்தை நாம்ப உணர்த்தணும். அவங்களை ஒரு அமைப்பா மாத்தணும். நீ வேலை பாக்கற எடத்தில இருக்கறவங்களைக்கூட அந்த அமைப்பிலே சேர்த்து சக்தியுள்ள சங்கமா மாத்தணும்" என்றதைக் கேட்ட காவேரி "நான் பண்றேன்..." என்றாள்.

காவேரியின் கையை நன்றியுடன் தொட்ட சுசீலா "இது அவ்வளவு சுலபமான விஷயமில்ல. சங்கத்துல சேர்ந்தா வேலைக்கு ஏதாவது ஆயிடுமோன்னு கொத்துவேலக்காரங்க பயப்படுறாங்க. அதனாலே சங்கத்துல சேர்றதுக்கு அவங்ககிட்ட சம்மதம் வாங்கறதே ரொம்ப கஷ்டமா இருக்குது. அவங்களுக்கு வேலை தர்ற கட்டடத்துக்காரங்களும் அவங்க சங்கத்துல சேர்றதை விரும்பறதில்ல..."என்றாள்.

மனிதர் நோகப் பார்க்கும் மனிதரைக் கண்டு மனிதர் ரௌத்ரம் கொள்ளாவிட்டால் மனிதம் எப்படித் தழைக்கும்? அநியாயம் எங்கே நடந்தாலும் தட்டிக் கேட்கிற ஆன்ம தைரியமும் தார்மீகப் பொறுப்பும் கொண்டவளாக சுசீலா இருந்தது காவேரிக்குப் பிடித்திருந்தது. சுசீலாவிடம் "சங்கத்திலெ சேர்றதால தொழிலாளருங்களுக்கெல்லாம் அப்படியென்ன பெரிசா நன்மை ஏற்பட்டுடப் போகுது..." என்றாள் காவேரி.

"உதிரியாக் கிடக்கிறதுனால் பலமிழந்து போயிருக்காங்க. அவங்க பலம் அவங்களுக்குத் தெரியலை. தங்களுடைய சோதனைகளுக்கு என்ன காரணம்? யாரால... அந்த சோதனைகள் என்பதெல்லாம் அவங்களுக்குத் தெரியலை. இ.எஸ்.ஐ, கிராஜுட்டி, பிராவிடண்ட் பண்ட் என்பன தொழிலாளர் நலச் சட்டங்கள். இ.எஸ்.ஐ திட்டத்தின் மூலம் மருத்துவ வசதி, நோயுற்ற நாட்களுக்கான அரைச்சம்பளம், விபத்துக்காலத்தில் முழுச்சம்பளம், பிரசவகால ஊதியம், ஊனம் அல்லது இறப்புக்கு நிவாரணம் தந்தாகணும்" காவேரிக்கு ஆச்சர்யமாக இருந்தது. சுசீலா லேசாகப் புன்னகைத்தாள்.

காவேரியின் மனக்கண்ணில் ஆர்.ஆர்.எம்மின் காம்பவுண்டில் உள்ள தொழிலாளர்கள் தென்பட்டார்கள். "நான் சொன்னதுபோல் ஊர்வலம், மாநாட்டுக்கு உங்க காம்பவுண்டில் உள்ள தொழிலாளர்களை நீ கூட்டிட்டு வரணும்" என்ற சுசீலாவின் பேச்சுக்கு, "நிச்சயமாக" என்றாள் காவேரி.

இருவரும் கிளம்பி ஆர்.ஆர்.எம்மின் காம்பவுண்டுக்குள் நுழைகையில் கேட்ட ஆராயியின் அவலக்குரல் அவர்களைத் திகைக்க வைத்தது. வலிப்பு வந்த பாஞ்சாலி காலை விலுக்விலுக்கென்று உதைத்துக் கொண்டு ஆராயியின் மடியில் அலங்கோலமாகக் கிடந்தாள். சுற்றி நின்றவர்களைச் சுசீலா நிதானமாகப் பார்த்தாள். காசியிடம் திரும்பி "ஆட்டோ கூட்டிட்டு வாங்க சார்" என்றாள் அழுத்தமாக.

## 21

காம்பவுண்டுக்குள் ஆட்டோ வந்து நின்றது. பாஞ்சாலி அசைவற்றுக் கிடந்தாள். வாயிலிருந்து ரத்தம் லேசாகக் கசிந்து கொண்டிருந்தது. ஆராயி கன்னத்திலும் நெற்றியிலும் கைவைத்துப்பார்த்துத் திடுக்கிட்டவளாக "ஒடம்பு நெருப்பாட்டம் காயிது..." என்றாள்.

அவளை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திருப்பத்தைத் தாண்டுவதற்குள் ஆர்.ஆர். எம்மின் கார் உள்ளே வந்து நின்றது. காரிலிருந்து இறங்கியவன் "என்னய்யா எல்லாரும் என்ன பண்ணிக்கிட்டிருக்கிறீங்க... என்ன ஆச்சு?" என்றான். "பாஞ்சாலின்னு ஒரு சின்னப்பொண்ணு வலிப்பு வந்திரிச்சு. ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கினு போயிருக்கறாங்க..." என்றான் காசி.

"என்னய்யா இது எழவு எப்பப்பாத்தாலும் இதே கருமமா? இது வேல நடக்கற எடமா... இல்லேன்னாதர்மசத்திரமா?எப்பவாவது நான் வர்ற வேளையில் அவங்கவங்க வேலையை பார்த்துகிட்டு இருந்திருக்கிறீங்களாய்யா? எங்கய்யா உந்தங்கச்சிக்காரி..." என்ற ஆர். ஆர்.எம்மிடம் "அவளும் பாஞ்சாலியோட போயிருக்கிறாள்" என்றான் காசி தயக்கத்துடன்.

"தோபாரு ராகினி இனிமே அவஇங்க வேலை பார்க்கத் தேவையில்ல திமிர் புடுச்சவ! இனிமே அந்தப் பொண்ணு வேலக்கி வேணா... சொல்லிடு அவகிட்ட... எல்லாத்தையும் பழையபடி நீயே பாத்துக்க. ஆமா, மேஸ்திரி எங்கே?" என்று கேட்டான்.

"மேஸ்திரிக்கு மூணுநாளா ஜுரம். ஆனா அதோடவே வேலபாத்தாரு. காலையில் ரொம்ப முடியலேன்னு குடிசையில படுத்துட்டாரு" பற்களைக் கடித்துக்கொண்டான். "இன்னிக்கி யாரும் வேல செய்ய வேண்டியதில்லை. சம்பளமும் தர வேண்டியதில்லை..." அவனுடைய கை முட்டிகள் இறுகின.

அங்கு வந்த வீராசாமி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "இன்னிக்கு செவ்வாய்க்கௌமைங்க. இன்னும் போனவாரச் சம்பளமே கைக்குக் கிடைக்கலை. ரொம்பக் கஷ்டமாயிருக்குது..." என்றான். "போய்யா வாயை மூடிக்கிட்டு..." வெறுப்போடு கத்தினான் ஆர்.ஆர்.எம். "மனச்சாட்சிக்கு விரோதமில்லாம வேலையைப் பாருங்க. அப்புறமா மத்ததைப் பேசலாம்..." என்றபடி சட்டென்று அங்கிருந்து புறப்பட்டான். எல்லோரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

"சே! ஈவு எரக்கமில்லாத ஆம்பளை..." என்றாள் ஆராயி வெறுப்புடன். "சாப்பாட்டுக்கு இப்ப நாங்கள்ளாம் என்னக்கா பண்றது?" ராகினியைப் பார்த்து பரிதாபமாகக் கேட்டான் ரங்கன். வழக்கத்துக்கு மாறாக முகம் வாடியிருந்த ராகினி மெல்லச் சொன்னாள் "எங்கிட்ட கொஞ்சம் பணம் இருக்குது தர்றேன்". "நம்ப கஷ்டம் தெரிஞ்ச பொண்ணு நீ, நல்லா இருக்கணும்மா" என்றாள் ஆராயி.

அவளை வினோதமாகப் பார்த்தபடி "முதலாளி எதுனா சொல்ல மாட்டாரா?" என்ற காசியிடம் "அவங்களும் வாயும் வவுறும் உள்ள மனுஷருங்கதான். அவங்க காத்தையா திம்பாங்க" என்றாள் ஏளனமாக. மேலும் "சாவறதுக்கு ஒரு நிமிஷம் வரையில் இவங்க ஒழைச்சாக வேண்டியிருக்குது. இவங்ககிட்ட என்ன இருக்குது? வீடா வாசலா? துணிமணியா? ஒண்ணுமில்ல. கொஞ்சநாள் பழக்கத்துலே நான் ஒரு விஷயத்தைப் புரிஞ்சிக்கிட்டங்க. இவங்க மனசுல கள்ளங்கவுடு இல்ல. வேஷமில்ல. ஏமாத்து இல்ல. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்பல யார்கிட்டவும் பழகறதில்ல. மனுஷனை மனுஷன் உதாசீனம் பண்றதைவிட மோசம் வேற ஒண்ணுமில்ல... ஆனா, வசதி உள்ளவங்களுக்கு இதெல்லாம்

தண்ணிபட்டபாடு..." காசிக்கு அவள் ஏன் இப்படிச் சொல்கிறாள் என்று விளங்கவில்லை. ஆனால், அதில் இருந்த உண்மை உறைத்தது.

## 22

மருத்துவமனையிலிருந்த கன்னியம்மாளைப் பார்த்து விட்டு, காவேரியிடம் ஆர்.ஆர்.எம். பேசி விட்டுப் போனவற்றை ராகினி தெரிவித்தாள். அதைக்கேட்ட காவேரி 'இது நான் எதிர்பார்த்த ஒண்ணுதான் இவங்கெல்லாம் தங்களுடைய நன்மையை நாம்ப பாதுகாக்கிற வரைக்கும்தான் நம்பளைத் தங்கக்கூட வைச்சிருப்பாங்க. அப்பிடி இல்லேன்னா இரக்கமேயில்லாம நம்மைக் கடாசி எறிஞ்சிடுவாங்க" வார்த்தைகளற்றுப் பார்த்தாள் ராகினி.

"சுசீலாக்காகூடப் பேசினேன். கட்டடத் தொழிலாளர் சங்கத்துக்கு என்னைக் கூட்டிப் போறதாச் சொன்னாங்க. நாங்கெல்லாம் சேரணும்னும் சொல்றாங்க. பெண்கள்னா கடைசிவரை சித்தாள் வேலைக்குத்தான் லாயக்கானவங்கன்னு நெனச்சுக்கிட்டிருக்கோம். ஆனா விஷயம் அப்படியில்லை. பெண்கள் கொத்தனாராக்கூட ஆவலாமாம்..." "அப்படியா" என்னவோ சொல்வதற்கு வாயெடுத்தாள் ராகினி.

"சங்கத்துல பொண்ணுங்களுக்குக் கொத்தனார் வேலைக்கு டிரெயினிங் கொடுக்கிறாங்க. பத்து மாசத்துக்கு இப்படிச் சொல்லிக் கொடுப்பாங்களாம். அப்புறம் எந்தப் பொண்ணாலும் கொத்தனாரா ஆயிடலாம்னு அவங்க அடிச்சுச் சொல்றாங்க" சட்டென்று சொன்னாள் ராகினி, "அப்படின்னா சுசீலாவை நானும் பாத்து இதைப்பத்திப் பேசணும்" அவளது ஆர்வம் காவேரிக்கு வியப்பையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

மாலை சுசீலாவை அவர்கள் சந்தித்தபோது, "போன அஞ்சு வருஷமாவே பொண்ணுங்களுக்குக் கொத்தனார் டிரெயினிங் கொடுக்கறாங்க. பத்துமாசப் பயிற்சி. இந்தப் பத்து மாசத்துக்கும் பணம் தர்றாங்க. அது டில்லியிலிருந்து வருது. தொழிலாளர் நன்மைக்குன்னே இருக்குற டிபார்ட்மென்டு அதைப் பண்ணுது" என்றாள் சுசீலா. "டிரெயினிங்கப்பத்தி கொஞ்சம் சொல்லுங்க" என்றாள் ராகினி ஆர்வத்தோடு.

காவேரியைப் போல் சுசீலாவுக்கும் இப்போது ராகினி ஆச்சரியமானாள். இந்தப் பெண்ணின் இருதய அந்தரங்கத்தை இத்தனைக் காலம் உணராமலிருந்ததற்காக சுசீலாவுக்கு வருத்தம் உண்டாயிற்று. கண்களில் வாத்ஸல்யம் பொங்க ராகினியைப் பார்த்தாள்.

"என்ன சுசீலா அப்படிப் பாக்கறிங்க. சிடுசிடுங்கிற ராகினியான்னு இருக்குதா? என்ன பண்ணச் சொல்றீங்க? எதுக்கும் பயந்து சாகிற என் வீட்டுக்காரரைப் பார்க்கிற பொழுதெல்லாம் எனக்கு ஒரு மாதிரி கஷ்டமாயிடுது. ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனுக்கு எதுக்காகப் பயப்படணும்? அது மாதிரியான வாழ்க்கையே வேணாம்னு தோணுது. உங்க பேச்சைக் கேட்கிறப்ப சுதந்திரமா ஒரு தொழிலைச் செய்யணும். ஏம் நாம்பளே ஒரு கொத்தனாராக ஆகக் கூடாதுன்னு தோணுது" தன்னைப் போல் உணர்வு கொண்ட இன்னொருவரை எதிர்பாராத விதமாகச் சந்தித்தால் உண்டாகிற ஆனந்த வாஞ்சை பொங்க ராகினியின் கைகளைப் பற்றிக் கொண்டாள் சுசீலா.

## 23

ஆர்.ஆர்.எம்மின் முகம் விம்மிச் சிவந்திருந்தது. ஆத்திரத்தில் கைகள் இறுகின. வாய்க்குள்ளே கெட்டவார்த்தைகள் தோன்றித் தோன்றி உருவழிந்தன. காறித்துப்பினான். "நன்றி கெட்ட பொறுக்கிப் பசங்க" காசியின் நெஞ்சில் அந்த வார்த்தைகள் கத்தியின் கூர்முனைகளாய் இறங்கின. ஆராயி நிமிர்ந்து பார்த்தவாறே "ஏழைங்க சொன்ன சொல்லை மீற மாட்டாங்க. உசிரைக் கொடுத்தும் காப்பாத்துவாங்க" என்றாள்.

"இந்தக் கட்டடம் கட்டி முடிஞ்சதும் நம்மளை விட்டுடுங்க சாமி. ராகினி இங்கே இனி ஒருநாள் கூட வேலை செய்ய முடியாதுன்னு சொல்லிட்டா. அதுதான் குடிசையைக் காலி பண்றேன்..." ஆராயி ராகினியின் வீட்டைப் பார்த்தவாறு நின்றாள்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 82 04-04-2020 15:04:00

"காசி நான் உங்களுக்கு என்ன குறைவச்சம்பா சொல்லு என்ற ஆர். ஆர். எம்மிடம் "அவங்கெல்லாம் கட்டடத்தொழிலாளர் ஊர்வலத்துக்கும் மாநாட்டுக்கும் போகணும்னு கேட்டாங்க. நீங்க ஒத்துக்கலை... அதான்..." என்றான் காசி.

"நீங்க போங்க... அதைப்பத்தி எனக்கொண்ணும் தடையில்லை. ஆனா இதெல்லாம் வேஸ்ட்டுப்பா... எதுக்குப்பா தொழிலாளர்களுக்குப் பாலிடிக்ஸ். மாநாடு, ஊர்வலம், தடியடி, மோதல், போலீஸ் கைது... இதெல்லாம் நமக்கு அவசியம்தானா... நாம தொழிலாளிங்க... செய்யற தொழில்தாம்பா நமக்குத் தெய்வம்... சரிசரி... ராகினியை வரச்சொல்லு... நான் அவகூட பேசணும். தைமாசம் கிருகப்பிரவேசம் வைக்கத் தீர்மானிச்சிருக்கு. எங்கே வேணுமோ போங்க. ஆனா வேலையைச் செஞ்சு முடிச்சிட்டுப் போங்க..." அவன் குரலில் தளர்ச்சி தெரிந்தது.

காவேரியுடன் வந்த ராகினி மௌனமாகப் பார்த்தவன் "ராகினி, ஏம்மா இப்படி ஆயிட்டே" என்றான். "இவங்க நியாயமாகச் சொன்னதைத்தான் நான் உங்ககிட்ட சொன்னேன். நீங்க ஒத்துக்கல. அதுக்கு மேல நான் என்ன செய்யமுடியும், சொல்லுங்க... மேஸ்திரிக்கு ஜுரம். கஞ்சிக்குக்கூட பணமில்லாம அவஸ்தைப்படறாரு. என்னைத்தான் கேட்கிறாங்க. என்ன பதில் சொல்றதுன்னே எனக்குத் தெரியல. அவங்க சொல்றதை நீங்க கேட்கமாட்டேங்கிறீங்க. அப்புறம் நான் என்ன செய்யிறது? அவங்க கேட்கறதைச் செய்யுங்க" சலிப்போடு சொன்னாள் ராகினி.

"அப்போ நீ?" என்றவனிடம் "எனக்குப் பதிலா வேற யாரையாவது பார்த்துக்குங்க..." சட்டென்று அவன் முகம் சுருங்கிற்று. மேஸ்திரி முனகிக்கொண்டே அங்கு வந்தார். "மேஸ்திரி எப்படி இருக்கிறீங்க?" குரலில் இரக்கம் இழையக் கேட்டான். மேஸ்திரி கைகளைக் கூப்பினான். "உடம்புக்குச் சுத்தமா முடியல. ரொம்ப கஷ்டமா இருக்கு. சோறுதண்ணி இல்லாம என்ன பண்ண முடியும்? கேட்டுக் கேட்டுத் தொண்டைத்தண்ணி வத்திப்போச்சு. அப்புறம்தான் எங்காளுங்க இந்த முடிவுக்கு வந்தாங்க."

"எல்லாரும் அவங்கவங்க வேலையைப் பாருங்க. காசி இதோ பாரு... இதில் சம்பளப்பாக்கி, ரெண்டுவார 'அட்வான்ஸ்' எல்லாம் இருக்கு... எடுத்துக்க. இதுக்கு மேலயும் ஏதாவது பண்றதுன்னா அது உங்க இஷ்டம், நான் நாளைக்கு வர்றேன். பெரிய கவர் ஒன்றை அவனது கையிலே சட்டென்று கொடுத்துவிட்டு அங்கிருந்த காரை நோக்கி வேகமாகச் சென்றான் ஆர்.ஆர்.எம். எல்லோரும் திகைத்துப் போய் நின்றனர்.

"முதலாளிங்க, பணக்காரங்க எல்லாருமே இப்படித்தான் பண்ணுவாங்க. நாம்ப அவங்க காலைப் பிடிச்சோமுன்னா நம்ம தோளில ஏறி உட்கார்ந்துக்குவாங்க. நம்ம உறுதியா நின்னு கேள்வி கேட்டா நம்ம வழிக்கு வந்திடுவாங்க. ஆனா, அது தற்காலிகமாகத்தான். அவங்க வேலை ஆவற வரைதான். அவங்க குணம் அப்படித்தான் இருக்கும்" என்றாள் சுசீலா காசியைப் பார்த்து.

இனி ஒருநிமிடம்கூட அங்கிருக்கப் பிடிக்கவில்லையென்ற ராகினியிடம், சுசீலா தெளிவாகச் சொன்னாள். "தொழிலாளர்களுக்கு நாம்ப தனியா இல்லைங்கற உறுதி இவங்களுக்கு வரணும்னா, நீ அருகே இருந்துதான் ஆகணும்..." ராகினி மௌனமாக நின்றாள்.

எப்படியிருந்த ராகினி எப்படி மாறிவிட்டாள்? உறுதி, தன் மக்களிடம் பரிவு, சலுகைகளுக்குத் தளராத துணிவு இந்தக் குணாம்சத்தை அவளிடம் உருவாக்கிய தொழிலாளர்களையும் நிர்பந்தங்களையும் திரும்பத்திரும்பக் காவேரி இரவுமுழுவதும் யோசித்தாள்.

நீலவானப் பின்னணியில் ஓங்கி வளர்ந்து வெள்ளை பூசிக்கொண்டிருக்கும் அந்த தொடர்மாடி வீடுகள் இரண்டையும் ஆனந்தம் பொங்கப் பார்த்தாள் ராகினி. எவ்வளவு வேகமாக ஓடிப்போய்விட்டது காலம். வீச்சான காட்டாற்றைப்போல தாவிப் போய் வியக்க வைக்கிற காலம். நேற்றுப்போல இருக்கிறது.

"என்ன ராகி, அப்படி பார்த்திட்டே நிக்கிறே..." என்ற சுசீலாவிடம் "மனுஷன் மகத்தானவன்னு சொன்னீங்களே. அது சத்தியமான வார்த்தை. அரை வயிறும் கால் வயிறுமாயிருந்து வெய்யிலையும் மழையையும் பனியையும் தாங்கி இந்த ஜனங்கள் எப்பேர்ப்பட்ட வேலையை செய்து முடிச்சிருக்கிறாங்க..." ராகினியின் குரல் தளும்பிற்று.

ஆர்.ஆர்.எம் மூணாவது பிளாட்ஸ் கட்டணும்னா நம்மளைத் தேடி வருவாரா?" என்றாள் காவேரி மெதுவாக. "நமக்குக் கையும் காலும் மனசில இருக்கிற துணிச்சலும்தான் சொத்து. பயப்படாதே, நம்மளை விட்டுட்டு வேற ஆளுங்களை அவரு கொண்டாந்தாலும் அவங்களையும் சங்கத்தில சேர்த்திடலாம்" காவேரியின் முகம் பளீரென்று மலர்ந்தது.

"ஆமா... தொழிலாளருங்க தங்களுடைய பலத்தை உணர்ந்துட்டா, பாதி பிரச்னை தீர்ந்திடும்" என்றாள் சுசீலா நம்பிக்கையான குரலில்.

## 24

இன்று, அந்தத் தொடர் மாடியின் முதல் அடுக்கிலுள்ள முதல் வீட்டில் பால்காய்ச்சி கிரகப்பிரவேஷம் செய்து வைக்கிறான் ஆர்.ஆர்.எம். அந்தப் பகுதியிலுள்ள எம்.பி, வக்கீல்கள், காவல் துறையினர், சினிமாக்காரர்கள் என்று பலதரப்பட்டோரும் அங்கே வந்திருக்கிறார்கள். அந்தத் தொடர் மாடிக்கு வெளியே மக்கள் கும்பல் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள்.

வேலையாள் மாவிலைக் கொத்துடன் அவசர அவசரமாக மேலே போவதை வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் ராகினி. அவளையறியாமலேயே பெருமூச்சுக் கிளம்பியது. சொல்லி வைத்தாற்போல, புதிய கட்டடத்தின் முன்னே வரிசையாகக் காய்ந்து, கருத்து ஒட்டடைக் கம்புகளாக நின்றார்கள் அந்தக் கட்டடத்தை உருவாக்கிய தொழிலாளர்கள்.

"நம்மையெல்லாம் மாடிக்குக் கூப்பிடமாட்டாங்களா?" ஆர்வம் பொங்கியது காவேரியைப் பார்த்துக் கேட்ட பதினாறு வயதான சின்னமணியின் குரலில்.

"நம்ம வேலை முடிஞ்சு போச்சு. அப்புறம் எதுக்கு அவங்க நம்மைக் கவனிக்கப் போறாங்க?" கனத்த குரலில் சொன்னாள் பங்கஜம். அவளுடைய வார்த்தைகள் குப்பனின் காதுகளில் செங்கல்லாய் அறைந்தன. இடுங்கிய கண்களில் துயரமும் விசனமும் தொனிக்க பங்கஜத்தைப் பார்த்தான்.

"என்னக்கா சொல்றே நீ?"

"ஓணர் அப்படித்தான் தாத்தாகிட்ட சொன்னாரு. புது பில்டிங்கோட அஸ்திவார வேலை அடுத்த மாசமே ஆரம்பிச்சிடுமாம். இப்போ உள்ளவங்க யாரையுமே அந்த வேலைக்குச் சேர்க்கமாட்டாராம்" வேதனை தொனிக்கச் சொன்னாள் பங்கஜம். அங்கு நின்றவர்களின் சுருங்கிய முகங்களில் சோகம் நிறைந்தது. "யாரப்பா மேஸ்திரி" என்றான் மேலேயிருந்து வந்த ஒருவன்.

அவசர அவசரமாக "நான் தானுங்க" என்றவர் புன்னகையுடன் முன்னே வந்தார் மேஸ்திரி. "மேலே வாய்யா..." என்றவாறு அவன் போனான். "அப்புறம் நம்மைக் கூப்பிடுவாங்களா...?" சின்னமணி கண்கள் படபடக்கக் கேட்டாள்.

சோர்வு நிறைந்த முகத்தோடு காசியும் மேஸ்திரியும் வர, அவர்களது முகக்குறியைப் பார்த்த காவேரியின் மனம் திக்கென்றது.

"ஏதோ விருந்து சாப்பாட்டுக்குக் கூப்பிட்டாங்கன்னாங்க. யாரும் நம்பளை வான்னுகூட சொல்றாப்பல இல்லியே... "என்றாள் தயங்கிய குரலில் சின்னமணி. "ஆமா... எனக்கும் பசிக்குது" சுமதியின் பிஞ்சுக்குரல் கசங்கி ஒலித்தது. "நம்பளை யாருமே கண்டுக்கல... நான் கணக்கெல்லாம் முடிச்சு வைச்சிருக்கேன்..." ராகினியை வெறுமையாகப் பார்த்தாள் காவேரி.

"மேஸ்திரி தாத்தா உங்கள எதுக்கு ஓணர் மேலேவரச் சொல்லிக் கூப்பிட்டாங்க"

"அதாம்மா... சும்மா எங்கையில ஐம்பது ரூபா குடுத்தாங்க...?



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 84 04-04-2020 15:04:00

"சாஸ்திரத்துக்குக் கணக்குத் தீர்க்கறாங்களா... ம்..." என்றாள் காவேரி. "தாத்தா தாகமாயிருக்கு" சின்னமணி கண்களைக் கசக்கினாள். "காசி, மாட்டேன்னு சொல்லாம எல்லாருக்கும் ஏதாவது குடிக்க சொல்லுப்பா" ஆர்.ஆர்.எம் தந்த கசங்கிய ஒற்றை ஐம்பது ரூபாயைக் கொடுத்தார்.

கட்டடத் தொழிலாளர் சங்கத்தில் எல்லாருடைய அங்கத்துவப் படிவங்களையும் நிரப்பிக் கொடுத்துவிட்டு, வெளியே வந்த ராகினியின் முகத்தில் பெருமிதம் தெரிந்தது. அங்கே முகம் மலர வந்தனர் சுசீலாவும் காவேரியும்.

"காவேரிக்கும் ராகினிக்கும் மேஸ்திரி டிரெயினிங்குக்கு இடம் கிடைச்சிருக்குது..." என்ற சுசீலாவைக் கண்கள் மலரப் பார்த்தாள் ராகினி.

"அப்ப நம்பளுக்குத் தரவேண்டிய சம்பளப் பாக்கியை நியாயமாக் கொடுத்தனுப்பற உத்தேசம் ஆர்.ஆர்.எம்முக்கு இல்ல... அப்படித்தானே?" ஆத்திரத்தைக் கக்கினாள் ராகினி. "ஆனா, உழைப்பை ஒருத்தன் சுரண்டறதை நாம்ப அனுமதிக்கவே கூடாது. நம்ப உரிமைங்களை நாம்ப போராடித்தான் அடைஞ்சாவணும். நாளைக்கு நமக்கு வேலை தரமாட்டாங்களோன்னு பயந்து பயந்து இன்னிக்குக் கெடைக்க வேண்டிய சம்பளத்தை வுட்டுடக் கூடாது தாத்தா..." என்றாள் காவேரி.

"நமக்குப் பாக்கிப் பணம் தந்து கணக்கை முடிச்சதுக்கு அப்புறமாத்தான் ஆர்.ஆர்.எம் தன்னோட அடுத்த வேலையைத் தொடங்க முடியும்னு யூனியன் மூலமா கடிதம் அனுப்புவாங்க. அப்படியே விரல் நசுங்கிப் போன கம்சலைக்கும் நஷ்டஈடு கேட்டிருக்கோம். ஆர்.ஆர்.எம் நம்ம கோரிக்கைக்குக் கட்டுப்படலேன்னா நாம்ப எல்லாரும் அவனுக்குப் பாடம் கத்துக்கொடுக்க முடியும்" என்றாள் சுசீலா உறுதி நிறைந்த குரலில். "எப்படி" சட்டென்று கேட்டாள் காவேரி.

"ஒற்றுமைப்பட்ட தொழிலாளி வர்க்கத்தைவிட உலகத்தில் பலமானது எதுவுமே இல்லை. ஜீவா சொல்லியிருக்கிறார்... 'கோடிக்கால் பூதமடா தொழிலாளி கோபத்தின் ரூபமடா...' இது சாவில்லாத வார்த்தை!" என்றாள் சுசீலா. காவேரியும் மற்றவர்களும் அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த சொல்லுக்கடங்காத மந்திரசக்தி மெல்ல மெல்லத் தங்கள் ரத்தநாளத்தினுள் நிறைவது போல உணரத் தலைப்பட்டனர். அதே தருணத்தில் கன்னியம்மாள் பிரசவித்தாள். ஒரு புதிய தலைமுறை இந்தப் பூமியைத் தொட்டு புதிய காற்றைச் சுவாசித்தது. அதன் அழுகை விடியலின் கீதமாகவே ஒலித்தது. சங்கரன் பிஞ்சுக் குழந்தையை ஆவலுடன் அள்ளி அணைத்துச் சீராட்டத் தொடங்கினான். அருகில் நின்ற ஆதிலட்சுமியும் காவேரியும் காசியும் ராகினியும் சுசீலாவும் நிறைந்து போனார்கள்.

(கல்மரம் புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்)

### படைப்பு முகம்



ஜி. திலகவதி (1951): தமிழகக் காவல்துறையின் முதல் பெண் தலைமை இயக்குநராகப் பணியாற்றிய இவர், தமிழின் சிறந்த எழுத்தாளராகவும் அறியப்படுகிறார். பெண்கள் சமூகத்தின் பலதளங்களில் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளைப் பிரதிபலிப்பவை இவரது படைப்புகள். இவர் சிறுகதைகள், குறும்புதினங்கள், புதினங்கள், கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என 60க்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துள்ளார். ஒரு பதிப்பாளராகவும் விளங்கி, சிறந்த உலக இலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 85 04-04-2020 15:04:01

குறும்புதினம்

# மாறுதல்

– அசோகமித்திரன்

**கதை முகம்**

இயல்பான வாழ்வில் ஏற்படும் சிறுசிறு பிரச்னைகளால் பதற்றமும் அவநம்பிக்கையும் கொண்டு, அதன் விளைவாக மன அழுத்தத்திற்கு ஆளாகி, ஒரு கட்டத்தில் மனநோயாளியாகவே ஆகிப்போகும் ஒரு பெண்ணின் கதை. வாழ்வின் சிறுசிறு பிரச்னைகளை நேர்மறையாக எதிர்கொள்ளவேண்டும். அத்தகைய மனப்பாங்கே நாம் கற்பிதமாக எண்ணிக்கொள்ளும் எதிர்மறையான விளைவுகளை மாற்றப் போதுமானது என்பதைச் சம்பவங்களின் வாயிலாக இக்குறும்புதினத்தில் காட்டுகிறார் அசோகமித்திரன்.

"நிம்மி!" பங்கஜம் கூப்பிட்டது வீடு முழுக்கக் கேட்டது. சமையலறையிலிருந்து அம்மா சுருக்கமாகப் பதில் சொன்னாள்: "அவ குளிச்சிண்டிருக்கா."

பங்கஜம் தன் கணவரின் மேஜை டிராயரை முழுவேகத்துடன் மூடினாள். மேஜை விளிம்பில் தொத்திக் கொண்டிருந்த மைப்புட்டி புரண்டது. அது கீழே விழுவதற்குள் சட்டென்று கைநீட்டி அதைப்பிடித்து நிறுத்தினாள். அதற்காகக் காத்திருந்தது போல அவளது நாடித்துடிப்பு சீறிக்கொண்டு உயர்ந்தது. பங்கஜம் கண்களை மூடினாள். ஒருகணம் அந்த அறையே அசைந்து அசைந்து சுழல்வது போலிருந்தது.

பங்கஜம் மேஜையைப் பிடித்தவண்ணம் எழுந்து நின்றாள். இனி இந்தப் படபடப்பு அடங்குவதற்கு அரைமணி நேரமாவது ஆகும். அம்மா கீரை நறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் ஒரு பூகம்பத்தை எதிர்பார்த்திருப்பது பங்கஜத்துக்குத் தெரிந்தது. அவள் அம்மா பக்கத்தில் போய் நின்று கொண்டாள். அவளால் இயன்ற அளவு அமைதியான குரலில் "இந்த நிம்மி ஏம்மா இப்படி இருக்கா?" என்று கேட்டாள். நல்லவேளையாக அம்மா பதிலேதும் தரவில்லை. இன்னும் கவனமாகக் கீரையை நறுக்கினாள்.

"அம்மா..." இப்போது அம்மா தலையை நிமிர்த்திப் பார்த்தாள். பங்கஜம் அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள். "அம்மா, நிம்மியை அவருடைய டிராயரைக் குடைய வேண்டாம்னு சொல்லேம்மா"

"நிம்மிதான் குடைஞ்சிருக்காளா?"

"இல்லேன்னா வேறு யாரும்மா அவர் டிராயரைத் திறக்கப்போறா? இன்னிக்குக் காத்தாலேகூட எல்லாத்தையும் ஒழுங்கா அடுக்கி வைச்சிட்டுப் போயிருக்கார். அதுக்குள்ளே இவ கலைச்சுப் போட்டிருக்காளே"

"அவ எதுக்குக் கலைச்சுப் போடப்போறா?"

பங்கஜம் ஒருகணம் தயங்கினாள். பிறகு மெதுவாக, "அவ சில்லறை எடுக்கிறா!" என்றாள். அம்மா கீரை நறுக்குவது ஒருகணம் நின்றது. அவள் மறுபடியும் நறுக்கத் தொடங்கியபோது ஒரு சொட்டுக் கண்ணீர் நறுக்கிய கீரைமீது விழுந்தது.

பங்கஜம் அம்மாவின் தோளைப் பிடித்துக் கொண்டாள். "அழவிடறதுக்கா அப்பா போனப்புறம் உங்களை இங்கே கொண்டுவந்து வைச்சிண்டிருக்கேன்?" சிறிது நேரம் கீரைநறுக்கும் சப்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது. நிம்மி குளித்துவிட்டு வந்தாள். அம்மாவையும் பங்கஜத்தையும் ஒரு பார்வையில் பார்த்துவிட்டு முன்னறைக்குச் சென்றாள். பங்கஜம் அம்மாவின் காதோரமாகச் சொன்னாள்: "அம்மா நான் அவளைப்போய்



12th ADVNCEI Tamil - Chap 1&2.indd 86 04-04-2020 15:04:01

விசாரிக்கிறேன். இப்படியே விட்டா நம்ம எல்லோருக்குமே அப்புறம் ரொம்ப கஷ்டமாப் போயிடும். நீ மட்டும் அழாதேம்மா. நானா ஒண்ணும் பண்ணிடமாட்டேன்."

பங்கஜம் எழுந்து முன்னறைக்குச் சென்றாள். நிம்மி பாவாடையையும் சட்டையையும் உடுத்திக் கொண்டு கண்ணாடிமுன் நின்று கொண்டிருந்தாள். பங்கஜம் மிக நிதானமாக "நிம்மி, இன்னிக்கு அவர் டிராயரை எதுக்குத் திறந்தே?" என்று கேட்டாள். நிம்மி பதிலே பேசாமல் நின்றாள்.

"ஏன்டி மறுபடியும் மறுபடியும் அவர் டிராயரைத் திறந்து காசு எடுக்கறே?"

"நான் ஒண்ணும் திருடலே"

"உன்னை யாரு திருடின்னு சொன்னா? யாருக்கும் தெரியாம அவர் டிராயரை ஏன் திறக்கறே?"

"நானொண்ணும் திறக்கலே"

"திறக்காம அவர் டிராயர்ல இருக்கிற சில்லறை டப்பியிலே காசு எப்படிக் குறைஞ்சிருக்கும்?"

"காசு குறைஞ்சா நாந்தான் எடுத்தேனா? நீதான் எல்லாத்தையும் பூட்டிப் பூட்டி வைக்கறயே?"

"அதுக்குத்தான் பூட்டாதவர் டிராயரைத் திறக்கணுமோ?"

"எனக்கொண்ணும் தெரியாது போ." பங்கஜம் இன்னமும் நிதானம் இழக்காமல் இருந்தாள். அதே அறையில் நிம்மியின் புத்தகங்கள் வைத்திருக்கும் இடத்துக்குச் சென்றாள்.

"என் புத்தகங்கள்கிட்ட போகாதே" என்று நிம்மி சொன்னாள். "என்னதான் வெச்சிருக்கே பார்க்கறேனே." நிம்மி பாய்ந்து வந்தாள். ஆனால் அதற்குள் பங்கஜம் நிம்மியுடைய பள்ளிக்கூடப் பையை எடுத்துவிட்டாள்.

"அதை எடுக்காதே! அதை எடுக்காதே!" நிம்மி இரண்டு கைகளாலும் பையைப் பிடித்து இழுத்தாள். பங்கஜம் அதற்குத் தயாராக இருந்தாள். "ஒண்ணும் எடுத்துக்க மாட்டேன். என்ன இருக்குன்னுதான் பார்க்கலாமே"

"விடு விடு. நீ ஒண்ணும் என் சாமானெல்லாம் தொடவேண்டாம்" பங்கஜம் உறுதியாகப் பையில் கையைவிட்டு நிம்மியுடைய ஜாமெட்ரி பாக்ஸை எடுத்தாள். நிம்மி பையைவிட்டு பங்கஜத்தின் கையைப் பிடித்தாள். பங்கஜம் திமிறி கையை விடுவித்துக் கொண்டு அந்தத் தகரப்பெட்டியைத் திறந்தாள். பென்சிலும் பேனாவும் ரப்பரும் காம்பஸும் கீழே சிதறி விழுந்தன. கூடவே ஒருரூபாய் நோட்டும் கொஞ்சம் சில்லறையும் விழுந்தன. அம்மாவும் உள்ளேயிருந்து ஓடிவந்தாள்.

"நான் சொல்லலேம்மா? இதைப்பாரு!" என்று பங்கஜம் சொன்னாள். அம்மா நிம்மியின் முகத்தைப் பார்த்தாள். நிம்மி பங்கஜத்தின் முகத்தைப் பார்த்தாள். பங்கஜம் நிம்மியைப் பார்த்தாள். அப்படியே பயத்தில் உறைந்து போனாள். வயதுப்பெண்ணின் முகத்தில் இவ்வளவு துவேசம் வெளிப்படக்கூடுமென்று பங்கஜம் எண்ணவில்லை.

"இது என்னடி நிம்மி!" என்று அம்மாதான் அந்த நேரத்தின் இறுக்கத்தைக் குறைத்தாள்.

"உனக்கு ஒண்ணுமில்லே போ" என்று நிம்மி பதில் சொன்னாள். "உனக்குக் காசு வேணுமின்னா என்னைக் கேட்கக்கூடாது?" என்று பங்கஜம் கேட்டாள். "ஆமாம், கேட்டா உடனே கொடுத்திடுவே"

"நீ எப்போ கேட்டு நான் கொடுக்காம இருந்தேன்?" நிம்மி கீழே விழுந்த சில்லறையை எடுத்து பங்கஜம் இருந்த திசையில் வீசி எறிந்தாள். "போடி, எடுத்திண்டு போடி."

"நிம்மி இது நன்னாவே இல்லே..." பங்கஜம் சொன்னாள். "எது நன்னா இருக்கு? நான் நன்னாவா இருக்கேன்? எல்லாருமே என்னை ஓடஓட விரட்டறேளே!" நிம்மி ஒவென்று அழ ஆரம்பித்தாள். அம்மா நிம்மியைக் கட்டிக் கொண்டாள். பங்கஜம் அங்கிருந்து விலகிச் சென்றாள்......



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 87 04-04-2020 15:04:01

அம்மா நிலைகொள்ளாமல் இருந்ததை பங்கஜம் சட்டை செய்யாமல் இருக்க. முடியவில்லை. மணி ஐந்தரை ஆகியும் நிம்மி வீடு திரும்பவில்லை. பங்கஜத்துக்கும் வயிறை என்னவோ செய்தது. பங்கஜம் கிளம்புவதற்கு முன்னால் முன்னறையில் தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையைப் பார்த்தாள். ஒரு வயதாகப் போகிற குழந்தை இன்னும் கையகலத்துக்குமேல் வளர்ச்சியுறாமல் படுத்துக் கிடந்தது. அதுவும் விழித்துக் கொள்ளும் நேரம். ஆனால், அவள் திரும்பி வந்துதான் அதைக் கவனிக்கவேண்டும். இப்போதெல்லாம் அம்மாவிடம் குழந்தையைப் பற்றி அதிகம் எதிர்பார்க்க முடிவதில்லை.

பங்கஜம் பஸ்ஸுக்காகக் காத்திராமல் ஒரு சைக்கிள் ரிக்சாவைக் கூப்பிட்டாள். நிம்மி ஸ்கூல் ஒருமைல் தள்ளியிருந்தது. பள்ளிக்கூடம் காலியாக இருந்தது. பங்கஜத்தை ஒரு டீச்சர்தான் முதலில் கவனித்தது. "யாரைப் பார்க்கணும்?" என்று கேட்டாள்.

"நிர்மலா. கே.நிர்மலா. எட்டாவது 'பி' செக்சன்."

"நீங்க அவளுக்குச் சொந்த அக்காவா?"

"ஆமாம். எனக்கும் அவளுக்கும் நிறைய வருசம் வித்தியாசம். அவ இந்த ஸ்கூலுக்கு வந்தப்போ எனக்குக் கல்யாணம்கூட ஆயிடுத்து"

"நிர்மலா மேல இங்கேயே கம்ப்ளெயிண்ட்ஸ் இருக்கு. கொஞ்சம் கண்டிச்சு வையுங்கோ" பங்கஜத்துக்குத் திக்கென்றது. "என்ன கம்ப்ளெயிண்ட்?" என்று கேட்டாள்.

"படிப்பு எல்லாம் நல்லாத்தான் படிக்கிறா. ஆனா நீங்க வீட்டிலே நிறைய பணம் தர்றீங்க போலிருக்கு"

"அவ ஸ்கூலுக்குப் பணம் கொண்டு வராளா?"

"ஏதோ நாலணா எட்டணா கொண்டு வந்தா சரி. ஒரு நாளைக்கு நாலு பேருக்கு லிம்கா வாங்கிக் கொடுத்திருக்கா."

"அன்னிக்கு அவ பர்த்டே"

"தினம் பர்த்டே வருமா?" பங்கஜத்துக்கு படபடப்பு மறுபடியும் வந்துவிட்டது. அப்பா போனதிலிருந்து அடிக்கடி வர ஆரம்பித்துவிட்டது. வெளியே வந்து ரிக்சாவில் ஏறிக்கொண்டாள். இன்னும் சிறிதுநேரத்தில் விளக்கு ஏற்ற வேண்டியிருக்கும். தங்கையைக் காணவில்லை என்பதோடு தங்கையை இன்னும் வேறு எதற்கெல்லாமோ கண்டித்து வைக்கவேண்டும். யார் கண்டிப்பது? பங்கஜம் கண்டித்தால் அதற்கு விளைவு நேர்மாறாக நிலைமை இன்னும் மோசமாகவல்லவா ஆகிவிடுகிறது?

நிம்மி அன்று வீடு திரும்பியபோது, பங்கஜம் அவளை ஒன்றும் கேட்கவில்லை. அவள் திரும்பிவந்த ஒருமணிநேரத்துக்குப் பிறகு அம்மா வீடு வந்தபோதும் என்ன விஷயம், என்னாயிற்று என்று கேட்கவில்லை. ஆனால், அம்மா மறுநாள் தன்பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டிருக்கும்போதுதான் முதல் நாளே எல்லாவற்றையும் பேசித் தீர்த்திருக்கலாம் என்று தோன்றிற்று. அம்மா பழைய இடத்துக்கே திரும்பிப் போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள்.

"நீ எப்படி அம்மா தனியா இருந்து சமாளிப்பே? என்கிட்டே முன்னாலேயே ஒருவார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா?"

"வேண்டாம் பங்கஜம். நான் எங்கே போயிடப்போறேன்? பஸ்ஸிலே ஏறினா அரைமணியிலே போய் சேர்ந்துடற இடம்தானே? நல்லவேளையா அந்த வீட்டிலேயே இன்னொரு சின்னஇடம் இப்போ காலியாத்தான் இருக்கு. எனக்கும் நிம்மிக்கும் அதுபோதும். பழகின இடம். ஒண்ணும் கஷ்டம் இருக்காது"

"காத்தாலே சொல்லியிருந்தா நான் அவர்கிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டிருப்பேனே? நீ திடுதிப்புன்னு போனா அவர் என்ன நினைச்சுப்பார். மத்தவாதான் என்ன நினைச்சுப்பா? வேண்டாம்மா. இப்போ என்னாயிடுத்து, நீ இங்கேயிருந்து போயிடற மாதிரி?"

"ஒண்ணும் ஆயிடலே. ஆனா ஒண்ணும் ஆயிடக்கூடாது இல்லையா? நீ எதுக்கும் கவலைப்பட்டுக்காதே"



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 88 04-04-2020 15:04:01



"என்னாலே எப்படீம்மா கவலைப்படாம இருக்கமுடியும்? நான் நிம்மியைக் குத்தம் சொல்லறேன்னு நினைக்காதே. அவ பழக்கவழக்கமெல்லாம் அவ்வளவு சரியா இல்லே. அப்பா இருந்தப்ப மாதிரி வேறே. இப்போ அவளைக் கேக்கறதுக்கு யாரும் இல்லேன்னா என்னென்ன மாதிரியெல்லாமோ ஆயிடும். இங்கேயாவது மாப்பிள்ளையைக் காட்டிக் கொஞ்சமாவது பயம், மரியாதை இருக்கிற மாதிரி செய்யலாம். நிம்மி நேத்தி சாயங்காலம் என்ன பண்ணிண்டிருக்கா தெரியுமா? பக்கத்துத் தெருவிலே இருக்கிற இரண்டு மூணு பேரோட சேர்ந்து சைக்கிள் விடக் கத்துகறேன்னு போயிருக்கா. வயசுக்கு வர பொண்ணு இப்படி யாரோடயோ சேர்ந்திண்டு பார்க்குக்கும் மைதானத்துக்கும் போனா நல்லதா?"

"அவ அப்பாவே அவளுக்கு இந்த வருஷம் சைக்கிள் வாங்கித் தரேன்னுதான் சொல்லிண்டிருந்தா."

"அப்பா இருந்தா சரிம்மா. அப்பா இல்லாதுனாலே தானே இந்தப் பேச்சே வரது. நீ அவளை வச்சுண்டு தனியா இருக்கிறது சரியில்லைன்னுதான் எனக்குத் தோணறது."

"எவ்வளவு நாளைக்கு? நான் தனியாப் போறது சரியில்லைன்னு எப்பவுமே தோணாம இருக்கும்னு உனக்கு நிச்சயம் இருக்கா?" பங்கஜம் பதில் பேசாமல் இருந்தாள். "வேண்டாம் பங்கஜம். இப்போ அந்த வீட்டிலேயே போய் நாங்க இருக்கிறதினாலே பெரிய கஷ்டம் ஒண்ணும் வந்துடாது. இன்னும் இரண்டு மூணு வருஷம் அங்கே இருந்துட்டா அவ எஸ்.எஸ்.எல்.சி முடிச்சுடுவா. அதுக்கப்புறம் பார்த்துக்கறது"

'உன்பெண் எஸ்.எஸ்.எல்.சி முடிப்பாளா?' என்று பங்கஜத்துக்குக் கேட்கத் தோன்றியது. பிள்ளைகள் தத்தாரியாக இருந்து பிறகு திருந்தித் தலையெடுக்கலாம். ஆனால் ஒரு பெண்ணுக்கு அது சாத்தியமா? "நீ எதுக்கும் அவர் வந்தப்புறம் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போறதுதான் சரின்னு தோணறது." அம்மா இப்போது பேசாமல் இருந்தாள். ஆனால், சாமான்களை எடுத்துக் கட்டுவதை நிறுத்தவில்லை.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 89 04-04-2020 15:04:03

"அம்மா, நான் சொல்றதைக் கேட்க மாட்டியா?"

"வேண்டாம் பங்கஜம். அப்புறம் தாட்சண்யத்துக்கு இடமாயிடும். அவரும் ஏன் போறேள், இருங்கோன்னு சொல்லுவார். நான் இருந்திடுவேன். ஆனா மறுபடியும் ஏதாவது ஆகும். ஒருத்தரையொருத்தர் மூஞ்சியைத் தூக்கிண்டு மூலைக்கு மூலை உட்காந்துண்டிருக்கணும். அவாவா இடத்திலே இருக்கிறதுதான் சரி"

"சரி எப்போ போகப்போறே?"

"மத்தியானமாத்தான்"

"அப்போ நிம்மி? இங்கே வந்தா அவளை அனுப்பறதா?"

"வேண்டாம். அவ ஸ்கூல்லேர்ந்து நேரே அங்கே வந்துடுவா."

"அப்போ அம்மாவும் பொண்ணும் முன்னாலியே பேசி வைச்சிண்டேளா?" அம்மா தலையைக் குனிந்து கொண்டாள். பங்கஜத்துக்கு ஆத்திரம் பொங்கியது. உடனேயே பச்சாதாபமும் ஏற்பட்டது. அம்மாவும் தன்னுடன் விஷயங்களை மூடி மறைத்து வைக்கும்படியல்லவா நேர்ந்துவிட்டது.

அம்மா வீட்டில் இல்லாதது பெரிய சிரமமாக இல்லை. படுக்கையிலேயே கிடக்கும் குழந்தையினால் வீட்டுவேலை செய்வதற்கு யாதொரு தொந்தரவும் கிடையாது. பங்கஜத்துக்கு ஓய்வுநேரம் நிறைய கிடைத்தது. ஓய்வு அதற்குரிய விளைவுகளையும் கொண்டுவந்தது. பங்கஜத்துக்குப் பகலில் என்று மட்டுமில்லை, இரவிலும் தூக்கம் வரவில்லை. கண்களை மூடினால் குளித்து ஈரம்படிந்த முகத்தோடு நிம்மி அவளைக் குரோதத்துடன் அன்று பார்த்த பார்வை அவள்முன் வந்து மிதந்தது.

பங்கஜம் படுக்கையிலிருந்து எழுந்து விளக்கு சுவிட்சை அழுத்தினாள். மணி இன்னும் இரண்டுகூட ஆகவில்லை. குழந்தை நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. சற்றுதள்ளி கட்டிலில் அவளுடைய கணவன் முகமெல்லாம் போர்த்திக் கொண்டு படுத்திருந்தான். அவன் படுக்கையில் அசைந்து கொடுத்தான். தூக்கிவாரிப் போட்டவன்போல் எழுந்து கொண்டான். பங்கஜத்தைப் பார்த்து, "நீயா உள்விளக்கைப் போட்டு வைச்சிருக்கே?" என்று கேட்டான்.

"மறந்துட்டேன். இதோ அணைச்சுடறேன்" என்று எழுந்தாள். "அப்போ தூங்கலியா நீ?" அவன் படுக்கையிலிருந்து எழுந்து இறங்கி வந்தான். அவள் முகத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான். "ஐயையோ, ஏன் உன் மூஞ்சி என்னமோ மாதிரி இருக்கு?"

"என்ன மாதிரி இருக்கு?"

"என்னமோ மாதிரி இருக்கே? என்னாச்சு? அம்மா வந்தாளா இன்னிக்கு?"

"இல்லையே. அம்மா அன்னிக்குப் போனவ அப்புறம் வரவேயில்லை."

"அதுக்காக வருத்தப்பட்டுண்டு இருக்கயா?" பங்கஜம் படுத்துக் கொண்டாள். "நானாக உங்க அம்மாகிட்ட ஒண்ணும் சொல்லலை" என்றான் அவன்.

"நீங்க பேசலை. நான்தான் நிம்மியோட பேசினேன். அது பெரிய சண்டையாகப் போயிடுத்து."

"நினைச்சேன். அன்னிக்குத்தானே நாலு தடிப்பசங்களோட சைக்கிள் கத்துக்கறேன்னு இருட்டற வரைக்கும் வீட்டுக்கு வரலே அவ?" விளக்கை அணைத்து விட்டு அவன் படுக்கையில் படுத்துக் கொண்டான். பங்கஜத்துக்குக் கண்களை மூட முடியவில்லை. மூடினால் பயம் கவ்விக் கொண்டது.

அந்தவீடு அப்பா இருந்தபோது தோற்றமளித்த மாதிரிதான் இப்போதும் இருந்தது. வாசற்படியை நெருங்கும்போது அப்பாவைக் கடைசியாகத் தூக்கிச் சென்ற காட்சிதான் அவள் கண்முன்னே வந்து நின்றது. வீட்டுக்காரர்கள் அப்பாவின் பிணத்தை கீழே ரேழியில் கிடத்த இடம் ஒதுக்கியிருந்தார்கள். அந்தக் குறுகலான ரேழியில் அப்பாவின் பக்கத்திலிருந்து துக்கத்தை அழுது தீர்க்கக்கூட

சரியாக இடம் கிடையாது. அப்பாவும் அம்மாவும் முன்பிருந்த போர்ஷனைக் காலிசெய்யும்போது சாமான்களை வெளியே எடுத்துப் போக சிறிது சிரமப்படத்தான் வேண்டியிருந்தது. அந்தக் குறுகலான ரேழி வழியாக மீண்டும் அந்த வீட்டுக்குள் சென்றடைந்துவிட்டாள். பின்கட்டில் ஒரு சிறிய அறைக்குள் தன்னை அடக்கிக் கொண்டு விட்டாள். பங்கஜம் அங்கு போனபோது அம்மா தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டபடியே நிம்மி வந்தாள். வந்தவள் பங்கஜத்தைப் பார்த்தவுடன் உற்சாகம் குறைந்து அப்படியே நின்றாள். பங்கஜம் அதைக் கவனியாததுபோல நிம்மியுடன் சகஜமாகப் பேசினாள்.

"உன் டிக்சனரியையும் கலரிங் பாக்சையும் வைச்சுட்டு வந்திட்டியே? எடுத்துண்டு வந்திருக்கேன். உன்னுடைய பாவடை தையல் விட்டிருந்ததையும் தைச்சு எடுத்துண்டு வந்துருக்கேன். ஸ்கூல் எல்லாம் சரியா நடக்கிறதோ இல்லையோ? உன்னைத் தேடிண்டு மூணு ஃப்ரண்ட்ஸ் நேத்திக்குக் கூட வந்தா. நீ பழைய வீட்டிலே இருக்கேன்னு சொன்னேன்."

நிம்மி எதற்கும் பதில் சொல்லாமல் அறைமூலையில் அவளுடைய பள்ளிக்கூடப் பையை வைத்தாள். மறுபடியும் "அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே போனாள். பங்கஜம் நிம்மியிடம் "இன்னும் ரொம்பக் கோபமா என்மேலே?" என்று கேட்டாள். "உன்மேலே கோவிச்சுக்க நான் யாரு?"

"ஏன் இப்படிச் சொல்லறே? என்னைத்தான் நன்னாக் கோவிச்சுக்க முடியும்" இதைப் பங்கஜம் அன்புதெரியத்தான் சொன்னாள். ஆனால் நிம்மிக்கு அப்படி ஒலித்ததாகத் தெரியவில்லை.

"அப்பா இருக்கிறவரைக்கும் இங்கேயிருந்து இருக்கிறதையெல்லாம் சுருட்டிண்டு சுருட்டிண்டு போனே? அப்பா செத்துப் போனப்புறம் கூடவா இங்கேயிருந்து தூக்கிண்டு போகணும்?"

"என்ன பேசறே நிம்மி? நான் உன்னுதை ஒண்ணும் எடுத்துண்டு போக வரலை"

"எடுத்துண்டு போக என்ன பாக்கி வைச்சிருக்கே? எல்லாத்தையும் தூக்கிண்டுதான் உன் வீட்டிலே அடைச்சு வச்சிருக்கியே? உன் காரியமெல்லாம் ஆனப்புறம் எங்க ரெண்டு பேரையும் தூக்கி அடிச்சுட்டே."

"இதெல்லாம் சின்னப் பொண்ணு பேசற பேச்சா? யார் இந்த மாதிரியெல்லாம் பேசச் சொல்லித்தரா?"

"இருக்கிறதைத்தானே சொல்றேன். யார் சொல்லித் தரணும்?"

"அம்மா கூட இப்படிச் சொல்றாளா?"

"அம்மாக்கு என்ன தெரியும்? நீ வந்தா உனக்குக் கொட்டிக் கொட்டித் தரத் தெரியும். பங்கஜம் குழந்தையை எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டாள்.

அன்று மீண்டும் பங்கஜத்தின் கணவன் அவள் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான். "உனக்கு என்ன ஆச்சு? உன்னை யார் அம்மா வீட்டுக்குப் போகச் சொன்னா?" என்று கேட்டான். இரவெல்லாம் அவள் தூங்காமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவன் மிகவும் பயந்து போனான்.

அங்கே ஒரே கூட்டம். வைத்தியரிடம் காட்ட அழைத்து வரப்பட்டவர்கள் பாதிக்குமேல் பெண்கள். ஓரிருவரைத் தவிர எல்லோரும் மிகச் சாதாரணமானவர்கள். சாதாரண பொருளாதார வசதி, சாதாரண அழகு, முகத்தில் குழப்பம் அல்லது மந்தத் தனம். புதிய இடத்தில் பலபேர் மத்தியில் இருக்க நேர்வதால் ஒரு செயற்கை அமைதி. அந்த அறையின் பளபளப்புக்கும் அவர்கள் நிலைக்கும் பொருத்தமே கிடையாது. எல்லாம் அறிந்தவர்போல் டாக்டரின் தோற்றம். மேலோட்டமான கேள்விகள். கேள்விகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே என்று கூறப்பட்ட அரைகுறைத் தகவல்கள். கல்யாணமாகி, மிகத் தாமதமாகக் குழந்தை பிறந்தது என்பது என்ன தெரிவிக்க முடியும்? குழந்தைக்கு வழக்கமான வளர்ச்சி



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 91 04-04-2020 15:04:03

இல்லை என்பது எவ்வளவு விஷயங்களைத் தெரிவிக்க முடியும்? அப்புறம் அப்பா செத்தது. கொஞ்சநாட்கள் அம்மா கூட இருந்தது. இப்போது தனியாக இருப்பது...

ஒரு பலனும் இல்லை. மருந்துகளை விழுங்கிப் பகலெல்லாம் தூங்கி வழிந்து கொண்டிருப்பது பலன் என்றால் ரொம்பச் சரி. இப்போது மீண்டும் தற்காலிகமாக அம்மாவும் நிம்மியும் வந்து சேர்ந்துவிட்டார்கள். அம்மா சமையலையும் குழந்தையையும் பார்த்துக் கொள்கிறாள். நிம்மி சுற்றுவேலையில் வீட்டுக்கு உதவியாக இருந்துகொண்டு பள்ளிக்கூடத்துக்கும் போய்வருகிறாள். நாளுக்குநாள் உயரமாகிக் கொண்டு வருகிறாள். அவ்வப்போது தாவணி போட்டுக் கொள்கிறாள். வீட்டைக் குடைகிறாள். நிச்சயம் பணம் திருடிப் போக ஆரம்பித்திருப்பாள். பங்கஜத்துக்கு விட்டுவிட்டுத்தான் தெளிவுநிலை வந்துகொண்டிருந்தது. தெளிவு வரும் நேரங்களில் கூடவே பயமும் கவலையும் கவ்விக்கொள்ளும். எதைப் பார்த்தாலும் ஏதோ பேராபத்தில் இருப்பது போன்ற தோற்றம் ஏற்படும்.

பங்கஜத்துக்குத் தரும் மருந்துகளின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அவள் டாக்டரைப் பார்த்தாள் போதும். டாக்டரின் முகமலர்ச்சியைக் கண்டு பங்கஜத்துக்கு சிரிப்புக்கூட வந்தது. அவருடைய மருந்துகள் பங்கஜத்திடன் அபிவிருத்தி ஏற்படுத்தி வருவதாக அவர் திருப்தியடைந்து, அதை வெளிப்படவே கூறுகிறார். பங்கஜத்திடம் நட்புத் தோன்றப் பேசுகிறார். புன்னகை புரிகிறார். கணவனும் திடம் பெற்று அவர் கையைக் குலுக்குகிறான்.

அன்று வீட்டில் எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள். அம்மா மாப்பிள்ளைக்கு இரண்டாம் டோஸ் காப்பி கலந்து தருகிறார். அவன் நிம்மி எங்கே என்று கேட்கிறான். நிம்மி ஓடிவருகிறாள். அவன் நிம்மியை லாண்டரியிலிருந்து சலவை செய்யப்பட்ட துணிகளை வாங்கிவரச் சொல்கிறான். அவனுடைய மேஜை டிராயரிலிருந்து பணம் எடுத்து அவளிடம் தருகிறான். அவள் அதை எடுத்துக் கொண்டு வெளியே விரைகிறாள். பத்துநிமிடத்தில் கட்டுத் துணிகளுடன் திரும்பி வருகிறாள். அவன் நிம்மியிடம் ஏதோ வேடிக்கையாகச் சொல்கிறான். அவள் தாங்கமாட்டாத சிரிப்பு பொங்கிப் பொங்கி வருவதுபோல் சிரிக்கிறாள். நடுவில் குழந்தை ஈனக்குரலில் அழுகிறது. பங்கஜத்தின் கணவன், நிம்மி இருவரும் குழந்தை அருகே போகிறார்கள். அந்த அறை மூலையில்தான் உட்கார்ந்திருக்கிறாள் பங்கஜம். குழந்தையை அவர்கள் இருவரும் பார்த்து சந்தோஷமடைகிறார்கள். ஒரு வயதுக் குழந்தை தானாகக் குப்புறப்படுத்துக்கொண்டு விட்டது.

"இன்னிக்குநானேசமைச்சுடறேன்" என்று பங்கஜம் அம்மாவிடம் சொன்னாள். அம்மா கீரை நறுக்கித்தர பங்கஜம் குளித்துவிட்டு வந்து குக்கரை அடுப்பின்மேல் வைத்தாள். குழம்புக்குத் தாளித்துக் கொட்டும்போது மட்டும் கை சிறிது தடுமாறியது. மற்றபடி பெரிய சம்பவங்கள் ஏதும் நேராமல் சமையல் முடிந்துவிட்டது.

அம்மா குழந்தைக்குச் சிறிதளவு சாதம் பிசைந்து ஊட்டிக் கொண்டிருந்தாள். புதுத் தாவணி அணிந்து கொண்டு ஸ்கூலுக்குக் கிளம்பிய நிம்மி, குழந்தையின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி ஒரு முத்தம் கொடுத்துவிட்டுக் கிளம்பினாள். குழந்தை நன்றாக விளையாட ஆரம்பித்திருந்தது. தானாகவே நகர முயன்று கொண்டிருந்தது. பங்கஜத்தைப் பார்த்து சிரித்தது.

அம்மா சில சாமான்களைத்தான் திரும்ப எடுத்து வந்திருந்தாள். எல்லாமே சுவரோரமாகவும் கட்டில் மற்றும் பெஞ்சுக்கடியிலும் சீராக வைக்கப்பட்டிருந்தன. சமையலறை மிகவும் துப்புரவாக இருந்தது. பங்கஜம் கணவன் மேஜையருகே சென்றாள். இப்போதெல்லாம் நிம்மியும் அங்கேதான் உட்கார்ந்து அவளுடைய பாடங்களை எழுதிப் படிக்க வேண்டியிருக்கிறது. பங்கஜம் மேஜை டிராயரைத் திறந்து பார்த்தாள். பேனா, கத்தரிக்கோல், பாங்க் பாஸ்புக், டைரி, பெரிய



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 92 04-04-2020 15:04:03

பர்ஸ், ஐந்தாறு பெரிய காகித உறைகள், கடிதங்கள் எல்லாமே மிக நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தன. வட்டமான கருநிற எனாமல் பெட்டி. அது மூடியது மூடியபடி இருந்தது. அதில்தான் அவன் சில்லறையாக அவனிடம் சேரும் நாணயங்களைப் போட்டு வைப்பான். இன்றைக்கு யாரும் அதைத் திறந்திருக்க முடியாது. திறந்திருந்தாலும் ஒழுங்காகத் திரும்ப மூடிவைத்திருக்கிறார்கள்.


எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு, பங்கஜத்துக்கு எப்போதோ கற்றுக் கொண்ட பாட்டின் முதலடி நினைவுக்கு வந்தது. அவளுக்குச் சிரிப்புக்கூட வந்தது. அந்தச் சிறு வீட்டில் இப்போது எங்கு திரும்பினாலும் ஒருவித ஒழுங்கு பார்க்கக் கிடைத்தது. அவளாகக் குடித்தனம் நடத்திய நாட்களில்கூட அந்த அளவுக்கு இருந்ததில்லை. அவளுக்குப் பைத்தியம் பிடித்தபோது வீட்டுக்கு நல்லகாலம் வந்துவிட்டது. கணவன் சிரித்துப் பேசுகிறான். அப்பாபோய் இன்னும் ஓராண்டு முடியவில்லை. அம்மா நிம்மதியாக மாப்பிள்ளை வீட்டில் பகலில் தூங்குகிறாள். நிம்மி சந்தோஷமாகவே பள்ளிக்குப் போய்வருகிறாள் போலிருக்கிறது. இப்போதெல்லாம் தினம் ஒரு ரூபாய் அவரிடம் கேட்டு வாங்கிப் போகிறாள். அவனும் சுணக்கமே இல்லாமல் தருகிறான். அவன்தான் ஒருசமயம் நிம்மியால் வீட்டு அமைதியும் உறவும் கெட்டுவிடப்போகிறது என்று பங்கஜத்துக்கு எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தான். மனிதர்கள்தான் எவ்வளவு சீக்கிரம் மாறிவிடுகிறார்கள்!

பங்கஜத்துக்கு அந்தப் பாட்டு முழுக்க நினைவுக்கு வந்துவிட்டது. அந்தப் பாட்டுக் கற்றுக்கொண்ட நாட்களில் அவளுக்கு இப்போது நிம்மியின் வயதுதான் இருக்கும். அவள் ஸ்கூலுக்குப் போகும்போது முழு ரூபாயாகக் கண்டது கிடையாது. அவளுக்கு சைக்கிள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது கிடையாது. உரிமையுடன் பிறர் பொருளை எடுத்துச் செல்லும் தைரியம் கிடையாது. காலத்துடன் மனிதர்கள் மாறுகிறார்கள். அவளுக்குத்தான் அந்த மாறுதலைச் சகித்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது.

தனக்கு உடல் நலமில்லாமல் போனதும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று பங்கஜத்துக்குத் தோன்றியது. அவளுக்கு அந்த வேளையில் எங்காவது போய் நன்றாக வாய் விட்டுப் பாட வேண்டும் போலிருந்தது.

(மாறுதல் குறும்புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்)

**படைப்பு முகம்**



அசோகமித்திரன் (1931 – 2017): இயற்பெயர் ஜ.தியாகராஜன். கணையாழி இலக்கிய மாத இதழில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றியவர். சிறுகதை, குறும்புதினம், புதினம், கட்டுரை, விமர்சனம், சுய அனுபவம் போன்ற பிரிவுகளில் 60 நூல்களுக்குமேல் எழுதியுள்ளார். இந்திய, ஐரோப்பிய மொழிகளில் இவரது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது அப்பாவின் சிநேகிதர் சிறுகதைத் தொகுப்பிற்கு 1996 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது. நகரத்தின் எளிய நடுத்தர வாழ்க்கையின் ஊடாக அமைந்ததே அசோகமித்திரனின் படைப்புகள்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 93 04-04-2020 15:04:03

புதினம் (பகுதி)

# புத்தம் வீடு

– ஹெப்சிபா ஜேசுதாசன்

**கதை முகம்**

எளிய மொழியில் சொல்லப்பட்ட வெறும் அன்பின் கதையாக மட்டுமல்லாது, யுகமாற்றத்தின் குறியீடாகத் தோற்றம்கொள்ளும் நாவல். லிஸியும் தங்கராஜும் இளம்பருவத்தில் கொண்ட ஈர்ப்பு, காதலாக முதிர்ந்து திருமணத்தில் கனிய நீண்ட காலம் காத்திருக்கிறார்கள். தடைகளைக் கண்டு அஞ்சுகிறார்கள். இறுதியில் இணைகிறார்கள். முதல் சந்திப்புக்கும் முதல் நெருக்கத்துக்கும் இடையில் வருடங்கள் கடந்து போகின்றன. இடங்கள் மாறுகின்றன. மனிதர்கள் கடந்து போகிறார்கள். அவர்கள் உறவாடுகிறார்கள். குலப்பெருமை பேசும் பண்பற்றவர்களாக இருக்கிறார்கள். புதிய தலைமுறையோடு பிணங்குகிறார்கள். காலத்துக்கேற்ப மாறுகிறார்கள்.

இது லிஸியின் கதை. மூன்று தலைமுறைகளை இணைக்கும் கண்ணி அவள். அவளை மையமாகக் கொண்டு விரியும் கிராம உறவுகளின் கதை. படைப்பு இயல்பால் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட இலக்கிய ஆக்கங்களில் ஒன்று. புத்தம் வீடு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்பட்டது. எனினும் இன்னும் வாசிப்பில் சுவை குன்றாமல் துலங்குகிறது.

## 'புத்தம் வீடு' – அத்தியாயம் 5

வருஷங்கள் எப்படித்தான் ஓடி விடுகின்றன! வாழ்க்கை முறைதான் எப்படி எப்படி மாறி விடுகின்றது! சுயேச்சையாக ஓடியாடித் திரிந்து, நெல்லி மரத்தில் கல்லெறிந்து, குளத்தில் குதித்து நீச்சலடித்து, கூச்சலிட்டுச் சண்டை போட்டு, கலகலவென்று சிரித்து மகிழ்ந்து, எப்படி எப்படியெல்லாமோ இருந்த ஒரு குழந்தை பாவாடைக்குமேல் ஒற்றைத்தாவணி அணிந்து கொண்டு, அது தோளிலிருந்து நழுவிவிடாதபடி இடுப்பில் இழுத்துக் கட்டிக்கொண்டு, கதவு மறைவில் பாதி முகம் வெளியில் தெரியும்படி குற்றவாளிபோல் எட்டிப் பார்க்கிற பரிதாபத்துக்கு இத்தனை சடுதியில் வந்து விடுகிறதே, இந்த வாழ்க்கைத் திருவிளையாடலை என்னவென்று சொல்வது!

அதோ அந்த அடிச்சுக் கூட்டிலிருந்து அப்படிப் பாதிமுகமாக வெளியில் தெரிகிறதே, அந்த முகத்துக்கு உரியவள் லிஸிதான். அந்தக் கண்கள் வேறு யாருடைய கண்களாகவும் இருக்க முடியாது. அவை அவளைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன. ஆனால், அந்தக் கண்களில் குறுகுறுப்போ மகிழ்ச்சியோ துள்ளி விளையாடவில்லை. அவற்றில் படிந்திருப்பது சோகமா, கனவுலகத்தின் நிழலா சும்மா வெறும் சோர்வா என்பதுதான் தெரியவில்லை. தலையில் நன்றாய் எண்ணெய் தேய்த்து வாரியிருக்கிறாள். அவள் முகத்திலும் எண்ணெய்தான் வழிகிறது. மாநிறமான அந்த முகத்துக்கு ஒளி தந்து அழகு செய்வதற்குப் புன்னகை ஒன்றும் அதில் தவழவில்லை. லிஸியா அது? நம் லிஸியா? ஏன் இப்படிக் குன்றிக் கூசிப் போய் நிற்கிறாள்? ஏன்? ஏன்?

முதலாவது, லிஸி பெரிய வீட்டுப் பிள்ளை என்பதை நீங்கள் அறிய வேண்டும். அதை மறந்திருந்தீர்களானால் இதுதான் அதை மறுபடியும் ஞாபகத்தில் கொள்ள வேண்டிய தருணம். லிஸியும் ஒருபோதும் அதை மறந்துவிடக் கூடாது. அவள் பெரிய வீட்டுப்பெண். பனைவிளை புத்தம் வீட்டுக் குலவிளக்கு. ஆகையால் அவள் பலர் காண வெளியில் வருவது கொஞ்சங்கூடத் தகாது. அது அவள் விலையைக் குறைப்பதாகும்.

இரண்டாவது, 'இற்செறிப்பு' ஒரு பழந்தமிழ் வழக்கம். சங்க காலத்திலேயே உள்ள வழக்கம். நல்லவேளையாக இது இன்னும் வெளிவராத இரகசியமாகவே இருந்து வருகிறது. பனைவிளை புத்தம் வீட்டார்க்குச் சங்ககால வழக்கங்கள் ஒன்றும் தெரியாது. அதற்குள்ள தமிழ் ஞானமும்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 94 04-04-2020 15:04:03



அவர்களுக்குக் கிடையாது. ஆனால் தலைமுறை தலைமுறையாக வரும் வழக்கம் மட்டும் நன்றாகத் தெரியும்.

லிஸிக்குப் பதினான்கு வயது ஆகிறது. "பெரிய பிள்ளை" ஆகி விட்டாள். ஒற்றைத் தாவணி அணிந்துவிட்டாள். ஆகையால் இற்செறிப்பு மிகவும் அவசியமாகி விட்டது. நீங்கள் லிஸியின் முகத்தைப் பார்த்தால், அந்தக் கண்கள் மட்டும் உங்களிடம் "ஏன்? ஏன்?" என்று கேட்பது போலிருக்கும். ஆனால் இதற்கெல்லாம் போய்த் துயரப்படாதேயுங்கள். துயரப்பட்டால் தமிழ்நாட்டின் மற்ற பெண்மணிகளின் துயரங்களுக்கெல்லாம் எப்படிக் கணக்கெடுக்கப் போகிறீர்கள்?

அவள் என்னென்ன ஆசைகளை உள்ளத்தில் போற்றி வளர்த்து வந்தாள் என்று யாரும் கவலைப்படவில்லை. லிஸி வெறும் அப்பாவிப்பெண் ஒன்றும் அல்ல. முதலில் ரகளை நடத்தித்தான் பார்த்தாள். அழுது அடம் பிடித்தாள். அவளுக்குத் தெரிந்த முறையில் சத்தியாக்கிரகம் பண்ணினாள். ஆனால் இத்தனை பேரின் எதிர்ப்புக்கு இடையில் ஒரு குழந்தையின் பலம் எத்தனை தூரந்தான் போக முடியும்? அப்பனும் அம்மையுந்தான் போகட்டும். இந்தக் கண்ணப்பச்சியுங்கூட அல்லவா அவர்களுடன் சேர்ந்து கொண்டார்? கண்ணம்மையின் காரியம் கேட்கவே வேண்டாம். சித்தியாவது ஒருவாக்குச் சொல்லக் கூடாதோ? சித்திக்கு வழக்கம்போல வாய்ப்பூட்டு போட்டிருந்தது. மேரியக்கா இந்தத் தருணம் பார்த்துக் கிராமத்தில் இல்லை. மேரியக்கா பாளையங்கோட்டையில் இருக்கிறாள். காலேஜில் படிக்கிறாள். மேரியக்காவைப் படிக்க வைக்க அவளுக்குச் சித்தப்பாவோ மாமாவோ யார் யார் எல்லோமோ இருக்கிறார்கள். லிஸிக்கு யார் இருக்கிறார்கள்?

பள்ளிக்கூடத்துக்குத்தான் விட்டபாடில்லை. கோயிலுக்காவது விடக்கூடாதோ? நாலு தோழிகளை அங்கு சந்திக்கும் பாக்கியமாவது கிடைக்கும். கண்ணப்பச்சி கண்டிப்பாகச் சொல்லி விட்டார். "இப்ப எதுக்கு? மொதல்ல ரெண்டு பேராப் போவட்டும். நம்ம குடும்பத்திலே இல்லாத பழக்கம் நமக்கு என்னத்துக்கு?"

"ரெண்டு பேர்" என்று யாரை கண்ணப்பச்சி குறிப்பிடுகிறார் என லிஸிக்கு ஓரளவு தெரியும். ஆனால் அவள் வருங்காலத்தைவிட நிகழ்காலத்திலேயே அக்கறை உடையவள். இரண்டு பேராகக் கோயிலுக்குப் போகலாம் என்ற நம்பிக்கை அப்போதைக்கு அவளுக்குத் திருப்தி



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 95 04-04-2020 15:04:04

தருவதாயில்லை. என்றாலும் இளம் உள்ளங்கள் எப்போதும் அழுதுகொண்டிருக்க முடியாது. எது முதலில் எட்டிக்காயாகக் கசக்கிறதோ அதுவும் நாளடைவில் பழக்கப்பட்டுவிடுகிறது. வாழ்க்கையே உலக ஞானத்தைப் போதிக்கிறது.

லிஸிக்குப் பள்ளிக்கூடம் இல்லாவிட்டால் என்ன? வீடு இல்லையா? தோழர், தோழியர் இல்லாவிட்டால் போகிறார்கள். மேரியக்கா தந்த மைனா இருக்கிறது. லில்லி, செல்ல லில்லி இருக்கிறாள். லில்லியோடு கொஞ்சிக் குலவுவதில் பொழுதில் பெரும்பகுதியும் கழிந்து விடுகிறது. அந்தச் சின்னத் தலையை மடியில் இட்டுக் கொள்வதில்தான் எத்தனை இன்பம்! வீட்டு வேலைகளும் அப்படி ஒன்றும் பாரமானவை அல்ல. தானாகச் செய்தால் செய்வாள். இல்லாவிட்டால் அம்மையும் சித்தியும் இல்லையா? லிஸி பெரிய வீட்டுச் செல்லப்பிள்ளை தானே? இப்படியாகத் தன்னை நாளடைவில் சமாதானம் செய்து கொள்ளுகிறாள் அந்தப் பேதைப் பெண். மேலும், பதவிக்காகப் போய் ஏங்கிக் கிடந்தாளே, வீட்டிலேயே அவளுக்கு மகத்தான பதவி காத்துக் கிடக்கிறது.

கண்ணப்பச்சிக்குக் கண் மங்கிக் கொண்டிருக்கிறது. கண்ணம்மை போன பிறகு, அதுவும் இரண்டு வருஷம் ஆகி விட்டது. கண்ணப்பச்சிக்குத் தனிமைத் துயரம் அதிகம். லிஸியின் துணையை இன்னும் கூடுதலாக நாடினார். இந்த ஒரு காரணத்தால்தான் லிஸிக்கு அடிச்சுக் கூட்டுக்கு வரும் உரிமை கிடைத்தது. ஆபத்துக்குப் பாவம் இல்லை அல்லவா? கண்ணப்பச்சிக்கு நினைத்த நேரம் பைபிளும், தினப்பத்திரிக்கையும் வாசித்துக் கொடுக்க வேறு யார் இருக்கிறார்கள்? ஆகையால் லிஸிக்கு அடிச்சுக்கூட்டில் பெருமையுடன் நடமாடும் பதவி கிடைத்தது.

அம்மைக்கும் சித்திக்கும் கிடைக்காத பதவி; அவர்கள் மாமனாருடன் பேசக் கூடாது. அவர்கள் கணவன்மார்களும் – சித்தப்பாவும் இப்படி ஆகிவிட்டாரே என தங்கள் தந்தையுடன் பேசுவதில்லை. லிஸிதான் அந்த வீட்டில் கண்ணப்பச்சிக்கு ஊன்றுகோல். அவளுக்கு அது புரியவும் செய்தது. அதனால் கண்ணப்பச்சியிடம் அவளுடைய பாசம் இன்னமும் அதிகமாயிற்று.

வீட்டிலுந்தான் என்னென்ன மாற்றங்கள்? 'ஆடு குழை தின்கிற' மாதிரி வெற்றிலை போட்டு வந்த கண்ணம்மை போய் விட்டார்களே! லிஸி வெற்றிலை இடித்துக் கொடுப்பாள் என்று அவள் கையைப் பார்ப்பதற்கு இப்போது யார் இருக்கிறார்கள்? ஆனாலும் அவள் வீட்டார் பல காரியங்களுக்காக அவள் கையை இன்னும் எதிர்பார்த்துத்தான் இருந்தார்கள். அதற்குக் காரணம் லிஸியேதான்.

லிஸி மேரியக்காவின் வீட்டிலிருந்து சில பாடங்களைக் கற்றறிந்தாள். கிராமத்து வீடானாலும் அதைச் சுத்தமாக வைக்கலாம் என்றறிந்திருந்தாள். ஏராளமாகக் குவிந்து கிடக்கும் பழ வகையறாக்களுக்கென்று ஓரிடம், கண்ணப்பச்சி மாட்டுக்கென்று சீவிப்போடும் பனம் பழக்கொட்டைகளுக்கென்று ஓரிடம், இப்படியெல்லாம் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தாள். ஈக்களின் தொல்லை இப்போது குறைந்துவிட்டது. அடிச்சுக்கூட்டுக்கு நேராகத் திறக்கும் ஜன்னலுக்கு ஒரு 'கர்ட்டன்' கூடத் தைத்துப் போட்டிருந்தாள். அது லிஸிக்கு மிகவும் சௌகரியமாயிருந்தது.

யாராவது கண்ணப்பச்சியிடம் எப்போதாவது பேசுவதற்கென்று வருவார்கள். அப்போது வீட்டினுள் இருந்து கொண்டே எல்லாவற்றையும் பார்க்கலாம். வீட்டை இப்போது பார்த்தால் ஏதோ பெண்மணிகள் வாழும் இல்லமாகத் தோற்றமளித்தது. முன்பெல்லாம்... லிஸிக்கு இப்போது சித்தியிடம் மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. சித்தியாவது வீட்டை கவனித்துக் கொள்ளக் கூடாதா? சித்திக்கு அழகாக ஸாரி கட்டத் தெரியும். பவுடரை நாசுக்காகப் பூசத் தெரியும். ஆனால் இந்த அம்மையிடம் ஒத்துப் போகக் கூடத் தெரியவில்லையே; கண்ணம்மை மரித்த பிறகு!

சித்தியின் முகம் இப்போதெல்லாம் கவலை படர்ந்த இருள் சூழ்ந்திருக்கிறது. சித்தப்பா அடிக்கடி 'பிஸினஸ்' என்று சொல்லிக் கொண்டு, திருவனந்தபுரம் போய் வருகிறார். அங்கிருந்து யாராவது உறவினரைக் கூட அழைத்து வருவார், போவார். ஆமாம், அதற்காகவாவது வீட்டை நன்றாக வைத்திருக்க வேண்டாமா? உள் முற்றத்தில் பூத்துக்குலுங்குகின்ற ரோஜாச்

செடிதான் எத்தனை அழகாயிருக்கிறது! லில்லியின் பட்டுக் கன்னங்களைப் போல் லிஸியின் பழைய நினைவுகளைப் போல். ஆனால் அதைப் பேண வேண்டுமானால் லிஸி மட்டுந்தான் உண்டு வீட்டில். வேறு யார் இருக்கிறார்கள்?

லிஸிக்கு சாமர்த்தியம் இல்லாவிட்டால் அப்பனை இப்படி வீட்டில் பிடித்து வைத்திருக்க முடியுமா? காப்பிக் கடைக்குப் போகிறதை நிறுத்தி விட்டாள். ஓட்டல் பலகாரம் வீட்டில் கிடைக்கும்போது அவர் எதற்காக ஓட்டலுக்குப் போகிறார்? அவரும் கண்ணப்பச்சியைப் போல லிஸியின் கையை எதிர்பார்த்துத் தானே இருக்கிறார்! இப்படியாக அவளுக்குப் பெருமையும் திருப்தியும் தரக்கூடிய விஷயங்கள் அறவே இல்லாமல் போகவில்லை. இல்லையானால் எப்படித்தான் வாழ்கிறதாம்?

இன்றைய வாழ்க்கையில் மிகமிகப் பிடித்த சமயம் பனையேற்றக் காலந்தான். அக்கானி அவள் விரும்பிக் குடிக்கும் பானம். அதில் விழுந்து செத்துக்கிடக்கும் ஈ, எறும்புகளை அவள் ஒருபோதும் அசிங்கமாகக் கருதினதில்லை. அவற்றை அகப்பையால் நீக்கி விட்டுக் கோப்பையைபானையில்இட்டுமுகந்துகுடிப்பாள். ஆனால், அதுவல்ல விஷயம். அக்கானிக் காலத்தில் அதைக் காய்ச்சுவதற்கென்று ஒரு கிழவி வீட்டுக்கு வருவாள். அவளுடன் பேசிக் கொண்டிருப்பது லிஸிக்கு நல்ல பொழுதுபோக்கு. அவள் எரிப்பதற்கென்று உலர்ந்த சருகுகளை விளக்குமாறு கொண்டு 'அரிக்கும்'போது லிஸியும் கூட நடப்பாள்; அவர்கள் வீட்டடிதான்; ஆகையால் அதில் ஒன்றும் கட்டுப்பாடில்லை.

இந்தக் கிழவியின் மகன்தான் இவர்களுக்குப் பனையேறிக் கொடுப்பது. அவன் பெயர் தங்கையன். பனையேற்ற ஒழுங்குப்படி ஒருநாள் அக்கானி தங்கையனைச் சேரும். தங்கையன் முறை வரும்போது அவனுடைய இளமனைவி அக்கானியை எடுத்துப் போக வருவாள். இவர்கள் குழந்தைகள் இரண்டு பேர். பிறந்த மேனியாகக் கூட ஓடி வருவார்கள். வாழ்க்கை வெறும் சப்பென்று ஆகி விடாதபடி இவர்கள் எல்லோரும் லிஸிக்கு உதவினார்கள்.

லிஸிக்கு வெளியுலகந்தானே அடைத்துக் கொண்டது? ஆனால் உள்ளே இவளுக்கென்று ஒரு தனி உலகம் உருவாகிக் கொண்டிருந்தது. பனையேறுபவர்கள் சடக் சடக்கென்று குடுவையைத் தட்டிக் கொண்டு வருவதும் பனையோலைகளின் இடையே வானத்தை எட்டிப் பிடிப்பதைப் போல் இருந்து கொண்டு 'அலுங்குகளை' அதாவது பனம் பாளைகளைச் சீவிக் கீழே தள்ளுவதும் ஒருவரையொருவர் கூவியழைத்து வேடிக்கை பேசிக் கொள்வதும் எல்லாம் சுவாரஸ்யமான காரியங்களே.

பனையுச்சியிலிருந்து எந்தெந்த விஷயங்களெல்லாம் அலசி ஆராயப்படும் தெரியுமா? மன்னர் அரண்மனை இரகசியங்கள் தொட்டு ஹிட்லரின் ராணுவ காரியங்கள் வரையுள்ள விஷயங்கள் அடிபடும். லிஸி இப்போதுபள்ளிக்கூடத்தில்படிக்கிறமாதிரிதான். தன் வீட்டு வாசலில் இருந்து கொண்டே பல புதிய பாடங்களைப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

(புத்தம் வீடு புதினத்திலிருந்து ஒரு பகுதி)

### படைப்பு முகம்



ஹெப்சிபா ஜேசுதாசன் (1925–2012): 'புத்தம் வீடு' புதினத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் ஹெப்சிபா ஜேசுதாசன். திருவனந்தபுரம் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ் இலக்கிய வரலாற்றை நான்கு பாகங்களாக ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழில் 4 புதினங்களும் ஆங்கிலத்தில் பாரதியாரின் குயில்பாட்டை மொழிபெயர்த்ததுடன் கவிதைகள், கட்டுரைகள், சிறுவர் இலக்கியங்களையும் படைத்துள்ளார். 2002 இல் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் இவருக்கு 'விளக்கு விருது' வழங்கியுள்ளது.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 97 04-04-2020 15:04:05

புதினம் (பகுதி)

# சாயாவனம்

– சா. கந்தசாமி

**கதை முகம்**

*சுற்றுச்சூழல் பற்றி அதிகமும் பேசப்படாத காலத்தில், காடுகளின்மீது மனிதன் நடத்திய அழிவை மையமாக வைத்து, தஞ்சை மாவட்டக் கிராமமான சாயாவனத்தின் பின்னணியில் எழுதப்பட்டது இந்தப் புதினம். சுருக்கமான நேரடி மொழியில் எழுதப்பட்டுள்ள இது, தமிழின் மிக முக்கியமான ஒன்று. இன்றைய சூழலுக்கும் பொருத்தமான வாசிப்பனுபவத்தைத் தருகிறது.*

ஒளி வீச்சில் அழகிய இனிமை வாய்ந்த பொழுது மெல்ல மெல்ல உருவாகிக் கொண்டிருந்தது. சிதம்பரம் வனத்திற்குத் தன்னந்தனியே சென்றான். அவன் வெட்டிச் சாய்த்த செடிகள் வாடிச் சோர்ந்து கிடந்தன. காரைகூட வதங்கிக் கொண்டு வந்தது. எதிர்பார்த்தற்கு மாறாகக் காரியங்கள் நடந்ததால் அவன் மகிழ்ச்சியுற்றான். இயற்கை பல விதங்களில் தனக்கு மிகுந்த அனுசரணையாக இருப்பது போல தோன்றியது.

சிதம்பரம், கொடிகள் காலில் பின்ன நடந்து சென்று பக்கத்திற்கொன்றாய்ச் சிதறிக்கிடந்த அலக்கு, தொரட்டி, அரிவாள், மண்வெட்டி – எல்லாவற்றையும் கொண்டு வந்து ஓரிடத்தில் வைத்துவிட்டு மீண்டும் வேலையைத் துவக்கினான்.

காட்டாமணக்கைவிட, ஆடாதொடையை விட, குத்துக்குத்தாகத் தாழ்ந்தும் உயர்ந்தும் வளரும் கள்ளியையும் சப்பாத்தியையும்விட, காரைதான் வனம் முழுவதும் வியாபித்திருந்தது. ஒவ்வொரு மரத்தின் கீழும் காரை பெருகி வளர்ந்து தழைத்துப் படர்ந்திருந்தது. கொடிமாதிரி ஒரு முடிவின்றி வனம் முழுவதையும் தன்னுடைய ஆதிக்கத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவந்து விட்டது. இயற்கையின் அதிசயப் போக்கு அது. வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிவாகை சூடிய காரையைச் சற்றே வளைத்துச் சின்ன முட்கள் கீறிக் கிழிக்க வெட்டிச் சாய்த்துக் கொண்டு போனான் சிதம்பரம். வரவர செடிகொடிகளோடு போராடுவது அவனுக்கு எளிமையாகிக் கொண்டு வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவைகளின் நெளிவு சுளிவுகளையெல்லாம் அவன் தெரிந்து கொண்டு விட்டான். எப்படி வளைத்துப் பிடித்தால் ஒரே வெட்டில் காரை சாயும் என்பது அத்துபடியாகி விட்டது. ஆடாதொடையை வெட்டுவது மாதிரி ஒருவித முயற்சியுமின்றிக் காரையை வெட்டிச்சாய்த்தான். அவனுடைய சக்தியைப் பலவீனப்படுத்திக் கொண்டிருந்த காரை, படிப்படியாக அதே கர்வத்தோடும் பெருமிதத்தோடும் சரணடையத் தொடங்கியது.

காரைக்கு இடையே ஈச்சம் பரப்பு; ஈச்சனின் வீச்சு வீச்சாய் மட்டைகள்; ஒவ்வொரு சிறு இலையின் முனையிலும் கரும்சிவப்பு முட்கள். ஒரு புதுமையான பரப்பு; தொடர்ந்து வெகுதூரம் வரையில் சென்று கொண்டிருந்தது. ஒரு வண்ண மாற்றம்; பூமாதேவி தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறாள்; எவ்வளவு கவர்ச்சிகரமான மாற்றம்!

ஈச்சனைத் தாழ வளைத்து வெட்டும்போது அரிவாள் அவன் இடது கையில் பாய்ந்தது. வலுவான, ஆழமான வெட்டு. ரத்தம் குபுகுபுவென்று வந்தது. முகத்தைச் சுளித்து, வலியை மிகுந்த பிரயாசைப்பட்டு அடக்கிக் கொண்டு – வாயில் கையை வைத்து ரத்தத்தை

உறிஞ்சினான். உறிஞ்ச உறிஞ்ச ரத்தம் வந்துகொண்டே இருந்தது.அவன் சோர்வுற்றான். எரிச்சலோடு தலையை உசுப்பிக்கொண்டு வேட்டியை அவிழ்த்து, தலைப்பைக் கிழித்து காயத்தில் சுற்றிக்கொண்டு, இலுப்பை மரத்தடியில் வந்தமர்ந்தான்.

ஒரு நரி அவனைத் தாண்டிக்கொண்டு வேகமாக ஓடியது. நரியைத் துரத்திக் கொண்டு வந்த கலியபெருமாளும் பழனியாண்டியும் பெரிய கட்டோடு படுத்திருக்கும் சிதம்பரத்தைப் பார்த்துத் துணுக்குற்றுப் போனார்கள். பழனியாண்டி அவனருகே வந்து தாழ்ந்த குரலில், "என்னங்க காயம்?" என்று வினவினான்.

"சின்னக் காயம். அருவா பட்டுப்போச்சு!"

"ரத்தம் ரொம்ப வருதுங்களே!"

அவன் தலையசைத்தான்.

"ஒருவாட்டி எங்கப்பாவுக்கு ஒருகாயம்; பெரிய அருவா பட்டுடுச்சி. எங்கம்மா, நாயுருவியும் பூண்டும் வச்சு ஒட்டஒட்ட அரைச்சுப் போட்டாங்க. ரெண்டே நாளிலே காயம் ஆறிப்போயிடுச்சு."

கலியபெருமாளை நோக்கித் தலையசைத்தான்சிதம்பரம்.அப்புறம்துணியைப் பிரித்துச் சரியாகக் கட்டிக்கொண்டான்.

"நானும் அதையே போடுவேன்."

"ஒருவாட்டி மரத்திலே இருந்து உளுந்துட்டேன். முட்டியிலே நல்லா அடி. எலும்பு வெளியே தெரிஞ்சுச்சு. அப்பக்கூட அதான் போட்டாங்க. பத்து நாளிலே சரியாப் போயிடுச்சு."

"அப்படியா?"

"நிஜங்க!"

அவனைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, "சாப்பாடு ஆச்சா?" என்று கேட்டான் சிதம்பரம்.

"ஆச்சுங்க"

"இன்னைக்கு வெட்டினது இவ்வளவுதான். வாரி ஒண்ணாக் குமிச்சிடலாம் வாங்க!" என்று சொல்லிக்கொண்டு, முன்னே சென்றான் அவன்.

ஓய்விலிருந்தும் களைப்பிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. நில்லாது இயங்கும் சக்தி அது. தன்போக்கில் காரியங்கள் துரிதமாகவும் தீவிரமாகவும் திகழவேண்டும். வேலை ஆரம்ப நாட்களைவிட இப்போது உற்சாகம் தருவதாக இருந்தது. அடைபட்டுக் கிடந்த தோட்டத்தின் நெடுங்கதவுகள் அவர்களின் சின்னஞ் சிறிய கரத்திற்கு அசைய ஆரம்பித்துவிட்டன. இன்னும் பலத்தோடு இடைவிடாது அசைத்துக்கொண்டே போனால், மாயமிகுந்த கானகத்தின் ரகசியமெல்லாம் வெளிப்பட்டுவிடும்.

ஒன்று ஒன்றாய் மூன்று தழைப் போர்களை ஏற்படுத்தினார்கள்; ஒன்றைவிட மற்றொன்று பெரிதாகக் காட்சியளித்தது. பின்னோக்கிச் செல்லச் செல்லத் தூரம் கூடிக்கொண்டு வந்தது. இது முற்றிலும் புதியபாதை. அநேகமாக இப்போதுதான் புல்லிதழ்களின்மீது மனிதர்களின் பாதங்கள் படுகின்றன. சௌந்தர்யம் கொழிக்கும் பூமியின்மீது மெல்ல நடந்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அகண்டு பரந்திருக்கும் இந்தக் கோளம் மனிதனுக்குத்தான். அவனுடைய வாழ்விற்கும் நலத்திற்கும்தான் படைக்கப்பட்டிருக்கிறது. அறிவும் வல்லமையும் மிகுந்த மனிதன் வெல்வதற்கே இயலாது என்று எண்ணப்பட்ட மண்ணைத்தன்னுடையசுவாதீனத்திற்குமெல்ல மெல்லக் கொண்டுவந்து விட்டான். மனித சந்ததி பெருகும் போதெல்லாம் எழில்பூக்கும் பூமியின் ஒரு பகுதி தவிர்க்கவொண்ணாத விதத்தில் மாற்றியமைக்கப்படுகிறது. அதனுடைய இயற்கையான அம்சம் – மரமும் செடிகொடிகளும் புல்லிதழ்களும் அகற்றப்படுகின்றன.

மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் வலிமையும் உக்ரமும் நிறைந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் இயற்கை அவனுக்கு அறைகூவல் விடுத்துக் கொண்டே இருக்கிறது. ஒரு தடயத்தில் இருந்து இன்னொரு தடயத்திற்கு உற்சாகத்தோடு அழைத்துக் கொண்டுபோய் மீளமுடியாத சிக்கலில் பிணைத்து விட்டுவிட்டு ஏளனமாக



நகைக்கிறது. அவன் தன் தோல்வியில் – பலங்குன்றி நிற்பதில் – அதற்கோர் ஆனந்தம். மனிதன் இடறி வீழ்வதைக்கண்டு நகைத்தாலும் அதில் வெற்றியின் பெருமிதம் இல்லை; மாறாகத் தோல்வியின் பலவீனம் தெரிகிறது.

நெடிதுயர்ந்து நின்ற மரங்களின் அடியில் செடிகொடிகளைக் கொண்டுவந்து குவித்தார்கள். சிதம்பரம் பெரிய கிளைகளையும் முள்நிறைந்த கருவேலம் மரக் கிளைகளையும் இழுத்துவரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். ஆனால், நேரம் செல்லச்செல்ல அவன் சலிப்புற்றான். வேலைப்பளு அவனை அழுத்தியது. கிளையை இழுக்க முடியாமல் ஒரோர் சமயம், பலமனைத்தையும் இழந்தவன் மாதிரி காட்சியளிப்பான். கண்களை இறுக மூடிக்கொண்டு மரத்தடியில் உட்கார்வான். மென்காற்று அவனைத் தழுவிக் கொண்டோடும். அவன் முகத்தில் சோர்வு நீங்கும். கைகளை உதறிக்கொண்டு திடீரென்று எழுவான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தரையில் கிடக்கும் முள்ளை அழுத்தி மிதிப்பான். செருப்புக்கால் பட்டு முள் உள்ளே செல்லும். முள் பூமியில் புதையப் புதைய அவன் மனம் துள்ளிக் குதிக்கும். இப்படி முள்ளை மிதித்துக் கொண்டேதான், அதன் பெருமையைப் பற்றி கலிய பெருமாளுக்கும் பழனியாண்டிக்கும் எடுத்துரைத்தான். இன்னும் இரண்டு நாள்களில் அவர்களுக்குப் புத்தம் புதிய செருப்புகள் வந்துவிடும்.

கலியபெருமாளும் பழனியாண்டியும் வரப்போகும் செருப்பைப் பற்றிய இனிய நினைவுகளோடு, உற்சாகமாகக்கிளைகளையும் கொடிகளையும் இழுத்துக் கொண்டுவந்து போட்டார்கள். பெரிய கிளைகளை இருவரும் சேர்ந்து இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு வரும்போது சிதம்பரம் கைகொடுத்து உதவுவான்.

"நீங்களும் என்னெ மாதிரி வளந்துட்டா, இதையெல்லாம் சுலபமா இழுத்தாந்துடலாம்!" கலியபெருமாள் தலைசைத்தான்.

"நீங்க ரொம்ப சுருக்கா மரம் வெட்டுறீங்க; உங்க மாதிரி இஞ்ச யாரும் வெட்ட மாட்டாங்க!" என்று வியந்துரைத்தபோது, சிதம்பரம் அவன் கரத்தை மெல்ல ஆதரவோடு பற்றிக் கொண்டு புன்முறுவலிட்டான்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 100 04-04-2020 15:04:07

மூன்று பேர்களும் கிளைகளை இழுத்து வந்து குவித்த பிறகும் இங்குமங்குமாக ஏராளமான செடிகளும் கொடிகளும் கிளைகளும் கிடந்தன. எல்லாவற்றையும் ஒன்று திரட்டிக் குவித்தால், இன்னும் இரண்டு போர்கள் போடலாம்.

"இது எல்லாத்தையும் என்ன பண்ணப் போறீங்க?" என்று ஒரு பெரிய குறிஞ்சாக் கொடியை இழுத்துக் கொண்டு வந்து சிதம்பரத்தின் அருகே போட்டுவிட்டு பழனி கேட்டான்.

"என்ன பண்ணலாம். நீதான் சொல்லேன்".

"யாரையாச்சும் வாரிக்கிட்டுப் போகச் சொல்லலாம்".

"எதுக்கு?"

"எருவுக்குத்தான்"

"காரைய ஆரும் எருவுக்குப் போட மாட்டாங்க!" என்றான் கலியபெருமாள்.

"நொச்சி, நுணா, ஆடாதொடை..."

"அதையெல்லாம் போடுவாங்க".

"அப்படீன்னா, பாதி எருவுக்குப் போயிடும். சரி, ஒருவேல முடிஞ்சுபோன மாதிரிதான். நீங்கபோய் சுருக்கா ஆரையாச்சும் கூட்டியாக" என்று எழுந்தான் சிதம்பரம்.

ஐந்தாறு நரிகள், விட்டுவிட்டு, ஊளையிடும் சப்தம் வெகுஅருகில் கேட்டது. கலியபெருமாளும் பழனியாண்டியும் கட்டுக்கடங்காத சந்தோஷத்தால் முகம் மலர சிதம்பரத்தைப் பார்த்தார்கள். அவன் முகம் லேசாக வெளிறிக் காணப்பட்டது.

"இஞ்ச நரிங்க... ஜாஸ்திங்க; நாங்க வரச்சே நாலு நரிங்க ஓடிச்சு."

"உம்.."

"ஒரு நாளைக்கு ஐம்பது அறுபது நரிங்க கூட்டமா நின்னுக்கிட்டு கத்தும் பாருங்க; அடே அப்பா, என்ன கத்து! ஆத்தங்கரை வரைக்கும்கூட கேக்குங்க! நாங்களெல்லாம் பயந்துகூடப் போயிடுவோம்; சின்னப் பசங்களெல்லாம் மரத்துமேலே ஏறிக்குங்க."

"அப்புறம்..."

"நாங்களெல்லாம் ஒண்ணா சேந்துக்கிட்டு ஒய்யின்னு கத்துவோம்; நரியும் கத்தும்; நாங்களும் கத்துவோம். ஒரு ஒருநா நரிங்க ஓடிடும்; ஒரு ஒருநா நாங்க ஓடிடுவோம்..."

அந்தி மயங்கியது. வெட்டுண்ட மரங்களுக்குப் பின்னால் வனம் கறுத்துக் கொண்டு வந்தது. அநேகமாக இனிவேலை செய்ய முடியாது; இரவு வந்துவிட்டது.

"அப்ப ரொம்ப இருட்டுறதுக்கு முந்திப்போய், எருவுக்குத் தழை எடுக்க, ஆரையாச்சும் கூட்டிக்கிட்டு காத்தாலே வாங்க."

"சரிங்க" இருவரும் கோவணமாகக் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்த புல்லிதழ்களையும் சருகுகளையும் தட்டிக் கொண்டு நடக்கலானார்கள்.

"பழனி!" உரத்த குரல் கேட்டு இருவரும் சிதம்பரத்திடம் திரும்பி வந்தார்கள். 'இந்தாங்க' என்று ஆளுக்கு மூன்று தம்பிடி காசு கொடுத்தான் சிதம்பரம். தயக்கத்தோடும் ஆசையோடும் அதனை வாங்கிக் கொண்டார்கள். மாமாவுக்கு அப்புறம் சிதம்பரந்தான் அவர்களுக்குக் காசு கொடுக்கிறான். ஊரிலிருந்து வரும் போதெல்லாம் மாமா ஆளுக்கொரு தம்பிடி தருவார். கொஞ்ச நேரம்தான் காசு அவர்கள் கையிலிருக்கும். அப்புறம் எப்படியும் அம்மா கைக்குப் போய்விடும். ஒருசமயம் அன்பாகப் பேசி வாங்குவாள். இன்னொரு சமயம் அதட்டி, அது பயன்படா விட்டால் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளிக் காசை வாங்குவாள். அவர்கள் கையிலிருந்து காசைப் பறித்துக் கொள்வதில் அவளுக்கு ஒரு திருப்தி. ஆனால், இந்தக் காசு அவளிடம் போகாது; காட்ட மாட்டார்கள்; அம்மாவுக்குத் தெரியாமல் கிடைத்த காசை அவர்கள் விருப்பப்படியே செலவு செய்வார்கள்.

துண்டு முனையில் காசை முடிந்து கொண்டு, வரப்பு மேலே செல்கிறவர்களைச்

சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றான் சிதம்பரம். அப்புறம் எவ்விதக் குறிப்புமின்றிப் பிரப்பங்காட்டை நோக்கிச் சென்றான். பெரிய காடு – அந்தியில் பார்க்கையில் இன்னும் பெரிதாகவும் எல்லையற்றது மாதிரியும் தோன்றியது. புன்னை மரமொன்றில் நன்றாகச் சாய்ந்து கொண்டு இருள் சூழ்ந்த வனத்தையே ஆழ்ந்து நோக்கினான். தன்னுள்ளேயும் தனக்கு வெளியேயும் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது அவனுக்குச் சரியாகப் புலனாகவில்லை. ஆனால், ஒவ்வொரு செயலும் நிகழ்ச்சியும் ஒரு பாடத்தை உணர்த்துவது போல தோன்றியது.

பழனியாண்டி செடியின் மறைவிலிருந்து வெளிப்பட்டு இரைக்கும் குரலில், "கலியன், தலையாரியைக் கூட்டியாராங்க" என்றான்.

"எங்க?"

"அந்தால வந்துகிட்டிருக்காங்க."

இருவரும் கொன்றை மரங்கள் நிறைந்த இடத்திற்கு வந்தார்கள். தூரத்தில் கலியனின் பேச்சுக்குரல் கேட்டது.

"என்ன சொல்றாங்க?"

"தழை போட்டா குச்சி குத்துமின்னு, நடவுக்கு ஆரும் இறங்க மாட்டாங்களாம்."

"அப்படியா?"

"தோ அவுங்க வந்துட்டாங்களே!"

மார்பில் புலிப்பல் அசைந்தாட முறுக்கிய பெரிய மீசையோடு வந்த தலையாரி, "அடே எங்கப்பா! காட்டையே அழிச்சிட்டீங்களே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

சிதம்பரம் தலையாரியின் பேச்சுக்குப் பதிலொன்றும் அளிக்கவில்லை. நிமிர்ந்து வானில் எழும் நிலவைப் பார்த்தான். அப்புறம் மெல்லக் குனிந்து தரையில் கிடந்த மணிப்புறாவின் சிறகை எடுத்தான். தன்னுடைய வேலையில் திருப்தி இருந்தாலும் வேகம் காணாது என்று தோன்றியது.

நாளை வேலை தொடங்குவதற்கு முன்னே, வெட்டிக் குவித்தவைகளை இழுத்து வந்து, ஒன்றாகப் போட்டுவிட்டால் நன்றாக இருக்கும். தழையை எருவாகப் போட யாராவது முன்வந்தால், ஒரு காரியம் அநேகமாக முடிவடைந்தது போல. ஆனால், இப்போது காலம் கடந்து விட்டது. குறுவை நடவு போட்டுவிட்டார்கள். தாளடிக்கும் சம்பாவுக்கும் இன்னும் நாட்கள் இருக்கின்றன.

இருந்தாலும் சம்பா நடவு போடுகிறவர்கள் எருவுக்குத் தழையை எடுத்துக் கொண்டு போகலாம். ஆனால், எவ்வளவு பேர் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஒருவேளை இதுபற்றி தலையாரி சரியான பதிலைத் தரலாம். அவன் நம்பிக்கையற்ற நிலையில் பேசினான்: காலம் கடந்து விட்டதைப்பற்றி ரொம்ப விஸ்தாரமாகப் பேசினான். கடைசியில், "இங்க ரொம்பப் பேருங்க, தழை போடுறது இல்லை. ஆனா நீங்க கவலைப்பட வேணாம். நான் ஒரு வழி பண்ணிடறேன்!" என்று திடமான குரலில் சொன்னான்.

"நீங்க பண்ணமாட்டீங்களா?" என்றான் சிதம்பரம்.

தலையாரி அவன் பக்கம் நெருங்கி,"ஆல வைக்கப்போறீங்களாமே?" என்று கேட்டான்.

"ஒரு கரும்பு ஆல வைக்கலாம்னு இருக்கேன்"

"கரும்பு ஆலங்களா? இஞ்ச சுத்துப்பட்டிலே கரும்பு ஒண்ணும் வராதுங்களே"

"அப்பிடியா?"

"ஆமாங்க. ஒருவாட்டி சுப்பிரமணியமும் பாவாடை என்பவரும் கரும்பு போட்டாங்க. போட்டது போட்டதுதான். நெரங்கிப் போச்சு."

"அப்படியா?" என்று தன் தலையை விரலால் கோதிவிட்டுக் கொண்டு, "வில்லியனூரில் கரும்பு விளையுதே!" என்றான்.

"அங்க கரும்பு ரொம்ப நல்லா விளையுதுங்க"

"சடைசடையா, என்ன மாதிரி கரும்பு!"

"நீங்க அங்க இருந்து கொண்டாரப் போறீங்களா?"

"அப்படியொரு உத்தேசம் இருக்கு"

"குறுக்கால ஆறு இருக்குதுங்களே..."

"ஆமாம். அதுக்கென்ன?"

சிதம்பரத்தின் பேச்சைக் கேட்டு தலையாரி திடுக்கிட்டுப் போனான். ஆற்றைப் பற்றி – காவிரியைப் பற்றி அவனுக்குத் தெரியும்; தண்ணீர் ஓட்டத்தைப் பற்றியும் தெரியும். எட்டு வயதிலிருந்து ஆற்றுக்குக் குறுக்காக வண்டி ஓட்டுகிறவன் அவன். ராமசுப்ரமணியத்துக்கு இன்றைக்கும் அவன்தான் வண்டி ஓட்ட வேண்டும்; அவன் ஓட்டும் வண்டியில் போனால்தான் அவருக்குத் திருப்தி.

காவிரிப்பட்டினத்திலிருந்து மாயவரத்திற்கு திங்கட்கிழமை சந்தைக்கு அஞ்சலைக்காகக் கருவாடு வண்டி ஓட்டுகிறவனும் அவன்தான். வஞ்சனை, நெத்திலி, சென்னகுன்னி, சுறா – ஒரு வண்டி கருவாட்டைத் தன் மதி நுட்பத்தால் வெள்ளத்திலிருந்து அவன் காப்பாற்றினான். அன்று முதல், ஏழு வருடங்களாக அவன் அஞ்சலையின் நம்பிக்கையான ஆள். கணக்கு வழக்கின்றிப் பணம் தருவாள். செம்படவத் தெருவில், அவனுக்குத் தனி மதிப்பு; கௌரவம் உண்டு. பத்து நாட்களுக்கு முன்னே கப்பக்கார ராமுவின் அரிசி வண்டி நடு ஆற்றில் சிக்கி அச்சு முறிந்தது அவனுக்குத் தெரியும். அவன் அப்போது அக்கரையில் நின்று கொண்டிருந்தான். ஒரு நிமிடத்திற்குள் அது நடந்தது. யார்யாரோ தண்ணீரில் குதித்து ஐந்து மூட்டைகளைக் கரையேற்றினார்கள். பத்து மூட்டையை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது.

"அப்ப, நான் உத்தரவு வாங்கிக்கிறேன்." என்றான் தலையாரி.

"இதுக்கொரு ஏற்பாடு பண்ணனும்."

"அதுக்கு நான் இருக்கிறேங்க"

"அப்ப சரி"

"வரங்க"

"வாங்க" தலையாரிகூட பழனியாண்டியும் கலியபெருமாளும் சென்றார்கள்.

தனிமையில் நிலவுபொலியும் வனத்தில் உட்கார்ந்து அவன் யோசித்துப் பார்த்தான். எருவுக்குத் தழையெடுத்துப் போவார்கள் என்ற நம்பிக்கையும் சிதைந்து போயிற்று. ஆனால், தலையாரியின் முயற்சியில் ஏதாவது நடந்தால், தன் காரியங்கள் கொஞ்சம் சுலபமாகும். இப்போது அதற்கு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

அவனது தேவையெல்லாம் மனிதர்கள்தான். ஆரண்யம் போன்ற தோட்டத்தை அழிக்க வானரப்படை போன்ற ஒரு கூட்டம் வேண்டும். கூலி கொடுக்கவும் வைத்து வேலைவாங்கவும் அவன் தயாராக இருந்தான். ஆனால், ஆட்கள் கிடைக்கவில்லை. மத்தியானம் மாங்குடி குமாரசாமியை இது பற்றிக் கேட்டதும், "ஆளுங்களா?" என்று கேட்டுவிட்டு மௌனம் சாதித்தார்.

ஒற்றைக் காக்கை பயங்கரமாக அலறியது. அவன் திடுக்கிட்டெழுந்தான். தலைக்கு மேலே பறந்த காக்கையைத் திட்டிக் கொண்டே முன்னோக்கி நடந்தான். அவன் பார்வை வெட்டிப் போட்டிருந்த செடிகளின்மீது விழுந்தது. அப்புறம் இலுப்பை மரங்கள் பக்கம் சென்றது.

ஐம்பத்திரண்டு இலுப்பை மரங்களையும் வெட்டவேண்டும். அதை விட்டு வைப்பதென்பது எவ்விதத்திலும் முடியாத காரியம். ஆலை நிர்மாணிக்கும் இடமே இலுப்பை இருக்கும் பகுதிதான். அங்கிருந்து துவங்கினால்தான், பலகாரியங்களுக்கு வசதியாக இருக்கும். அதோடுகூட வீடுகட்ட, ஆலை அமைக்க, காளவாய் போட மரம் வேண்டும். எல்லாவற்றிற்கும் இலுப்பைதான்! அதைத்தான் வெட்டிச் சாய்க்க வேண்டும்.

சிதம்பரம் மௌனமாக ஒரு தீர்மானத்தோடு வந்து கோடரியைக் கையில் எடுத்தான். கருக்கைத் தடவிப் பார்த்தான். மனம் குறுகுறுத்தது. வலியை மீறிக்கொண்டு செயலாற்ற வேண்டும் என்ற தாபம் உடல் முழுவதும் பெருகியது. செடியும் கொடியும் தழுவிக் கொண்டிருக்கும் வானளாவிய நெட்டிலிங்க மரத்தில் கோடரியை வீசினான்.

ஒவ்வொரு வெட்டும் ஆங்காரத்தோடும் வலிமையோடும் தப்பாமல் மரத்தில் போய்ப் பாய்ந்தது. பூவரசு மாதிரி, எவ்வளவு நாளானாலும் நெட்டிலிங்கங்களில் வைரம் பாயாது. அதன் வளர்ச்சியெல்லாம் உயரந்தான். அது சாது மாதிரி. அம்மரம் சகல விதத்திலும் அவனுக்குப் பணிந்து கொடுத்தது.

காயம்பட்ட கை கடுக்கும் போதெல்லாம் சற்றுநேரம் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளுவான். தான் வெட்டிச் சாய்க்கப் போகும் பெரிய மரத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பான். எத்தனையோ விதங்களில் அவனுக்கும் அதற்கும் சிறப்புண்டு. பெரிய நீண்ட நெட்டிலிங்கம் தெற்குப் புறமாகச் சாய்ந்தால், பிரப்பங்காட்டில் போய் விழும். அதன் முனை தாழங்குத்தை எட்டினாலும் எட்டலாம். மரம் மெல்ல மெல்லச் சாயும் போக்கிலிருந்து தெற்காகத்தான் போய் விழும் போலப்பட்டது. இது அவன் வெட்டும் முதல் பெரிய மரம். இதுபோல எத்தனையோ பெரும் மரங்களைப் பின்னால் வெட்ட வேண்டியிருக்கிறது. ஆனால், ஒரு துணையின்றி, நிலவு பொழியும் இரவில் தன்னந்தனியே மரம் வெட்டும் சந்தர்ப்பம் ஒருவேளை வராமலேயே போகலாம்.

சற்றே பின்னுக்கு வந்து, எந்த திசையில் மரம் விழுமென்று கவனித்துப் பார்த்தான். பழைய தீர்மானம் உறுதிப்பட்டது. ஆனால், ஒற்றை தென்னை தடுத்தால், தென்கிழக்காக இலுப்பை மரத்தின்மேல் விழக்கூடும். அப்படி விழுந்தால், கொஞ்சம் கஷ்டம்; வேலைப்பளு கூடும். இலுப்பையை வெட்டித்தள்ளி, பிறகு நெட்டிலிங்க மரத்தை அப்புறப்படுத்த வேண்டியிருக்கும்.

வடக்குப் பக்கமாக நின்று ஒரே நிதானத்தோடும் முன்னெச்சரிக்கையோடும் கோடரியை வீசினான். மரம் பெரும் இரைச்சலோடு தரையில் சாய்ந்தது. தூரத்தில் ஓடி நின்று பார்த்தான். வனம் முழுவதும் வெறிச்சோடியது மாதிரி காட்சியளித்தது.

(சாயாவனம் புதினத்திலிருந்து ஒரு பகுதி)

## படைப்பு முகம்

சா. கந்தசாமி (1940): சாயாவனம் புதினத்தின்மூலம் தமிழில் அறிமுகமானவர் சா.கந்தசாமி. இவரது படைப்புகளாக 7 புதினங்கள், 11 சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கசடதபற இதழின் மூலம் புகழ்பெற்றவர்களுள் இவரும் ஒருவர். 'சுடுமண் சிலைகள்' என்ற தமிழகப் பாரம்பரியக் கலைகள் பற்றிய குறும்படம் சர்வதேச விருது பெற்றது. சிற்பி தனபால், ஜெயகாந்தன், அசோகமித்திரன் ஆகியோரின் வாழ்வும் பணியும் பற்றிய குறும்படங்கள் எடுத்துள்ளார். 1998 –இல் இவரது 'விசாரணைக் கமிஷன்' புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

## அறிவோம் தெளிவோம்

### புக்கர் பரிசு

| புக்கர் பரிசு அல்லது புனைவுகளுக்கான மான் புக்கர் பரிசு (Man Booker Prize for Fiction) | மான் புக்கர் பன்னாட்டுப் பரிசு (Man Booker International Prize) |
|---|---|
| புக்கர் பரிசு (Booker Prize) அல்லது புனைவுகளுக்கான மான் புக்கர் பரிசு (Man Booker Prize for Fiction), ஆங்கில மொழியில் எழுதப்படும் சிறந்த முழுநீள புதினங்களுக்கு வழங்கப்படும் பரிசாகும்.<br><br>காமன்வெல்த் நாடுகள் அல்லது அயர்லாந்துக் குடியரசைச் சேர்ந்தவர்களால் எழுதப்படும் புதினங்களுக்கே இப்பரிசு வழங்கப்படுகின்றது. இது 1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இலக்கியத்துக்காக வழங்கப்படும் பரிசுகளில் புனைவு இலக்கிய எழுத்தாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த பெருமைகளில் இதுவும் ஒன்றாக கருதப்படுகின்றது. | மான் புக்கர் பன்னாட்டுப் பரிசு (Man Booker International Prize) இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பன்னாட்டளவில் வழங்கப்படும் இலக்கிய விருதுகளில் ஒன்றாகும். எந்த நாட்டினராக இருப்பினும் ஆங்கிலத்தில் பதிப்பிக்கப்பட்ட அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஆக்கத்திற்காக வாழும் எழுத்தாளர் ஒருவருக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.<br><br>மான் குழுமத்தினரால் 2005ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. ஓர் எழுத்தாளரின் தொடர்ந்த புத்தாக்கம், புனைகதைக்குப் பங்காற்றல் மற்றும் வளர்ச்சிக்காக இப்பரிசு அளிக்கப்படுகிறது. எனவே இது ஓர் எழுத்தாளரின் ஆக்கத்தொகுதிக்கான பரிசாகும். |



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 104 04-04-2020 15:04:07

இந்திய மொழிப் புதினம் (பகுதி)

# செம்மீன்

மலையாள மூலம் – தகழி சிவசங்கரன்
தமிழில் – சுந்தரராமசாமி

**கதை முகம்**

*கேரள மாநிலத்தின் கடலோர மீனவ சமுதாய மக்களின் நம்பிக்கைகள், வாழ்க்கைப் பாடுகள் ஆகியவற்றின் ஊடாக கறுத்தம்மா, பரீக்குட்டி இருவரின் அன்பின்மீது கட்டப்பட்ட கதை. நம்பிக்கைகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான உளவியல் சிக்கல்களை நுட்பமாகப் பேசிச் செல்லும் இப்புதினம், 1957 இல் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது. செம்மீன் என்ற பெயரிலேயே திரைப்படமாகவும் வெளிவந்து மிகுந்த வெற்றியைப் பெற்றது.*

"எங்கப்பா தோணியும் வலையும் வாங்கப்போறாரே!"

"உன் அதிர்ஷ்டம்"

கறுத்தம்மாவுக்கு வாயடைத்துப் போய் விட்டது. தனது நிலைமையைச் சமாளித்துக் கொண்டு பேசினாள்;

"ஆனா பணம் கொஞ்சம் குறையிது. எங்களுக்குக் கொஞ்சம் பணம் கொடுப்பியா?"

"என் கையில் ஏது பணம்?" என்று தன் கைகளை விரித்துக் காட்டினான் பரீக்குட்டி. கறுத்தம்மா சிரித்தாள்.

"பின்ன எதுக்காகப் பெரிய முதலாளீன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறயாம்?"

"நீ ஏன் என்னைச் சின்ன முதலாளீன்னு கூப்பிடுறே?"

"பின்னே எப்படிக் கூப்பிடணும்?"

"பரீக்குட்டின்னு கூப்பிடணும்"

கறுத்தம்மா "பரீ" என்பது வரையிலும் சொல்லிவிட்டுச் சிரித்தாள். தனது முழுப்பெயரையே சொல்லும்படி பரீக்குட்டி அவளிடம் கேட்டுக் கொண்டான். கறுத்தம்மா சிரிப்பை அடக்கி முகத்தில் கௌரவ பாவத்தை வரவழைத்துக் கொண்டு, "மாட்டேன்" என்று தலையசைத்துவிட்டுச் சொன்னாள்;

"நான் கூப்பிட மாட்டேன்"

"அப்படியானா நானும் கறுத்தம்மான்னு கூப்பிட மாட்டேன்"

"பின்னே எப்படிக் கூப்பிடப் போறே?"

"நான் உன்னே பெரிய மரக்காத்தீன்னு கூப்பிடுவேன்" குபீரென்று சிரித்தாள் கறுத்தம்மா. பரீக்குட்டியும் வாய்விட்டுச் சிரித்தான். நெடுநேரம் சிரித்தார்கள். அப்படி எதற்குத்தான் சிரித்தார்களோ? ஏனோ அடக்க முடியாமல் சிரித்தார்கள்!

"அது சரி, தோணியும் வலையும் வாங்கினா, தோணி மீனை எனக்கு விலைக்குப் போடணும்னு உன் அப்பாக்கிட்டே சொல்லுவியா?"

"நல்ல விலை கொடுத்தால் மீன் கொடுப்போம்" மீண்டும் குபீரென்று! இத்தனை தூரம் சிரித்து மகிழ இந்தப் பேச்சில் என்ன இருக்கிறது! இது என்ன ஒரு பிரமாதமான ஹாஸ்யமா? பேச்சுக்குப் பேச்சு ஒருவரால் வாய்விட்டுச் சிரிக்க முடியுமா? சிரிசிரியென்று சிரித்ததில் கறுத்தம்மாவின் கண்களில் நீர் முட்டிவிட்டது. மூச்சுத் திணற அவள்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 105 04-04-2020 15:04:07

சொன்னாள்: 'சிரிப்பு மூட்டாதே சின்ன முதலாளி!'

அதைப்போல், தன்னையும் சிரிப்பூட்ட வேண்டாமென்று பரீக்குட்டி அவளிடம் கேட்டுக் கொண்டான்.

'அடேயப்பா! என்னா சின்ன முதலாளி நீ!'

ஒருவரையொருவர் கிச்சுக் கிச்சு மூட்டிவிட்டுக் கொண்டதுபோல் இருவரும் சிரித்தார்கள்.

நாலைந்து வயதான ஒரு சிறுமி; அந்தக் கடற்கரையில் கிளிஞ்சல் பொறுக்கியும் தோணிக்குள் வலையை உதறுகையில் வெளிச்சிதறி விழும் குஞ்சு மீன்களைப் பொறுக்கியும் திரிந்த காலத்தில், அந்தச் சிறுமிக்கு ஒரு தோழன் கிடைத்தான். அவன் தான் பரீக்குட்டி. நிஜாரும் மஞ்சள் சொக்காயும் அணிந்து, கழுத்தில் பட்டு உருமாலும் சுற்றி, குஞ்சம்தொங்கும்தொப்பியும்அணிந்துகொண்டு, தன் 'அப்பா'வின் கையில் தொங்கியவாறு பரீக்குட்டி முதன்முதலில் கடற்கரைக்கு வந்தது. கறுத்தம்மாவுக்கு நல்ல ஞாபகம்தான். தங்கள் வீட்டின் தெற்குப் பக்கத்தில்தான் அவர்கள் மணலில் கிட்டங்கி கட்டி விளையாடினார்கள். இன்றும்அந்தக்கிட்டங்கிஅங்கேதான்இருக்கிறது. வாலிபனாகிவிட்ட பரீக்குட்டி இப்போது அங்கே வியாபாரியாகக் காட்சியளிக்கிறான்.

இப்படி அவர்கள் இருவரும் அண்டை வீட்டுக்காரர்களாக அந்தக் கடற்கரையில் வளர்ந்து வந்தனர்.

அடுப்பில் தீ மூட்டியபடி அடுக்களையில் உட்கார்ந்திருந்த கறுத்தம்மா ஏதோதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். நெருப்பு அடுப்புக்கு வெளியே படர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அப்போது அடுக்களையினுள் நுழைந்த அவளுடைய தாய் தன் பெண் உட்கார்ந்திருந்த லட்சணத்தையும் அடுப்பு எரியுங் கோலத்தையும் சிறிது நேரம் பார்த்தபடி நின்றாள்.

சக்கி கறுத்தம்மாவைக் காலால் ஒரு தட்டுத் தட்டினாள். அவள் கனவிலிருந்து விடுபட்டு, திடுக்கிட்டு விழித்தாள். சக்கி கோபமாகக் கேட்டாள்.

'யாரை நெனச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கே?'

கறுத்தம்மா அப்போது இருந்த நிலையைப் பார்த்தால் யாருமே அப்படிக் கேட்கத்தான் செய்வார்கள். சக்கியின்மேல் பிசகு இல்லை. கறுத்தம்மா இந்த உலகிலேயே இருக்கவில்லை.

'அம்மா! அங்கே கரையிலெ ஏத்தி வெச்சிருக்கே தோணி, அதுக்குப் பின்னாலே நின்னுக்கிட்டு சின்ன முதலாளிக்கிட்டே அக்கா சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தா அம்மா.'

இப்படிச் சொன்னவள் கறுத்தம்மாவின் தங்கை பஞ்சமி. கறுத்தம்மா பதறிப் போனாள். அவள்மீது பழிசேர்க்கும் ரகசியம் அல்லவா அது? யாரும் அறியாத ரகசியத்தை அவள் வெட்ட வெளிச்சமாக்கி விட்டாளே. அதோடு விடவில்லை பஞ்சமி.

"என்னா சிரிப்புச் சிரிச்சிக்கிட்டிருந்தா தெரியுமா அம்மா!"

இதைச் சொல்லிவிட்டு, 'என்னை ஏய்த்தால் இப்படித்தான் வரும்!' என்ற பாவத்தில் விரலைச் சுட்டிக்காட்டிவிட்டு ஓடிவிட்டாள் பஞ்சமி.

ஒருதாய் அசட்டை செய்யக்கூடிய காரியமா இது? சக்கி கறுத்தம்மாவிடம் கேட்டாள். "என்னடீ சொல்றா இவ?" கறுத்தம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை. "என்ன நெனச்சிக்கிட்டிருக்கே நீ?" இந்தக் கேள்விக்குக் கறுத்தம்மா பதில் சொல்லித் தானே தீரவேண்டும். ஆமாம், சொல்லக் கடமைப்பட்டவள் அவள். தட்டுத் தடுமாறி ஒரு பதிலைக் கண்டுபிடித்தாள்.

"நான் கடற்கரைப் பக்கம் சும்மா போய்க்கிட்டிருந்தேன்."

"கடற்கரைப் பக்கம் போய்க்கிட்டிருந்தபோது...?"

"சின்ன முதலாளி தோணியிலே உட்கார்ந்திருந்தான்."

"அதுக்கு நீ ஏன் இளிக்கணுமாம்?"

கறுத்தம்மாவுக்கு ஒரு சாக்கு சொல்லக் கிடைத்தது. "தோணியும் வலையும்

வாங்குறதுக்குப் பணம் குறையிதேன்னு, கேட்டுக்கிட்டிருந்தேன்."

"நீ எதுக்குடி பணம் கேக்கணும்?"

கறுத்தம்மா முதலில் சொன்ன பதிலையே விடாமல் பிடித்துக் கொண்டு பேசினாள். "சின்ன முதலாளிக்கிட்டே பணம் கேட்கணும்னு அண்ணைக்கி நீயும் அப்பாவும் பேசிக்கிட்டிருக்கலியா?"

நம்பும்படியான பேச்சாக இல்லை அது. அவள் ஒரு பதிலை ஜோடித்துச் சொல்லிப் பார்த்தாள். சக்கி கறுத்தம்மாவை ஏற இறங்கக் கூர்மையாகக் கவனித்தாள்.

சக்கி அந்தப் பருவத்தைக் கடந்து வந்தவள்தான். சக்கி, கறுத்தம்மாவின் பிராயத்தில் இருந்த காலத்திலும் அந்தக் கடற்கரையில் கிட்டங்கிகளும் கிட்டங்கிகளில் சின்ன முதலாளிகளும் இருந்திருக்கலாம். கரையேற்றிப் போட்டிருக்கும் தோணியின் மறைவில் நின்றவாறு சின்ன முதலாளிகள் சக்கியையும் கலகலவென்று வாய்விட்டுச் சிரிக்கும்படி செய்திருக்கலாம். சக்கியும் கடற்கரையில் பிறந்து வளர்ந்த ஒரு செம்படவப் பெண்தான். அவளுடைய பரம்பரை பரம்பரையாக ஒப்புக்கொள்ளப்பட்டு வரும் ஒரு தத்துவப் பேருண்மைக்குக் கட்டப்பட்டவள்தான்!

அலைகளுக்கும் நீரோட்டத்துக்கும் எதிராகப் போர்தொடுத்து, ஒரு மரத்துண்டில் அடிவானத்தைத் தாண்டி சென்ற முதல் செம்படவனின் மனைவி, நோன்பெடுத்து கடற்கரையில் மேற்குநோக்கி நின்றவாறு தவம் செய்து கொண்டிருந்தாள். கடலில் சூறை கிளம்பிவிட்டது. வாயைப் பிளந்தபடி திமிங்கலங்கள் நெருங்கின. சுறாமீன்கள் வாலால் தோணியைத் தாக்கின. நீரோட்டம் தோணியை ஓர் அகண்டமான சுழியினுள் இழுத்துச் சிக்கவைத்தது. சகல விபத்துகளினின்றும் வியக்கும்படி தப்பித்துவிட்டான் அந்தச் செம்படவன். அதுமட்டுமல்ல; ஒரு பெரிய மீனோடு அவன் கரைவந்து சேரவும் சேர்ந்தான். அந்தப் புயலிலிருந்து எவ்வாறு மீண்டுவந்தான் அவன்? அவனைத் திமிங்கலங்கள் ஏன் விழுங்கவில்லை? சுறாமீனால் தாக்குண்டும் தோணிக்குக் கேடு எதுவும் சம்பவிக்கவில்லையே? நீரோட்டம் வழிவிட தோணி மிதந்து வந்தது. இவ்வாறெல்லாம் நிகழக் காரணம் என்ன? அந்தக் கற்புடையாள் கடற்கரையில் தவம் செய்து கொண்டிருந்தாள்.

கடற்கரைப் பெண்டிர் அந்தத் தவபலத்தை உணர்ந்து கொண்டனர். அந்தத் தவபலத்தை, வாழ்க்கைத் தத்துவத்தை, சக்கியும் தனதாக்கிக் கொண்டாள்.அன்று சக்கியின் தாய் சக்கியிடமும் கடற்கரைப் பெண்களின் தவபலத்தையும் தத்துவத்தையும் அறிவுறுத்தியிருக்கலாம்.

கறுத்தம்மாவின் தவறைப் புரிந்து கொண்டோ, புரிந்து கொள்ளாமலோ சக்கி சொன்னாள்: "இன்னைக்கி நீ சின்னப் பொண்ணில்லே; பெரிய மரக்காத்தி ஆயுப்புட்டே ஆமா"

'பெரிய மரக்காத்தி' என்று பரீக்குட்டி அழைத்தது கறுத்தம்மாவின் செவிகளில் முழங்கிற்று. சக்கி தொடர்ந்து சொன்னாள்: "பரந்து கிடக்கிற இந்தக் கடல்லே எல்லாம் இருக்குது பொண்ணே; எல்லாம் இருக்குது. கடலுக்குப் போகிற ஆம்புளை திரும்பி வாரது எப்படீன்னு நெனச்சிக்கிட்டிருக்கே? கரையிலே இருக்கிற பொம்புள்ளைகள் மானம் மரியாதையோடு இருக்கிறதனாலேதான். தோணியைச் சுழி அப்படியே தூக்கி முழுங்கிப்புடும். கடலுக்குப் போகிற ஆம்புள்ளையின் உசிரு கரையிலே இருக்கிற பொம்புள்ளை கையிலதான் இருக்கு."

கறுத்தம்மா அங்கு மட்டுமல்ல, அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல, இவ்வார்த்தைகள் கேட்கிறாள். நாலு மரக்காத்திகள் கூடுகின்ற இடத்திலெல்லாம் இதே பேச்சு அடிபடுவதைக் கேட்டிருக்கிறாள்.

இருந்தாலும் பரீக்குட்டியோடு சற்று சிரித்து விளையாடிப் பேசியதில் என்னதான் தவறு நேர்ந்துவிட்டதாம்? கடலுக்குப் போகிற புருஷன் ஒருவனின் உயிர் இன்னும் அவள் கைகளிலே ஒப்படைக்கப்படவில்லையே.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 107 04-04-2020 15:04:08



ஒப்படைக்கப்பட்டால் அவளும் அந்த உயிரை மிக ஜாக்கிரதையாக, பத்திரமாகக் காப்பாற்றுவாள். எப்படிக் காக்கவேண்டும் என்பதையும் அவள் அறிவாள். ஓர் அரயப் பெண்ணுக்கு யாரும் இதைக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

சக்கி தொடர்ந்து சொன்னாள்: "சிலசமயம் இந்தக் கடல் வறண்டு ஒண்ணுமில்லாமப் போகுதே, அது ஏன் தெரியுமா? கடல்தாய்க்குக் கோபம் வந்திடுத்துன்னா எல்லாத்தையும் அளுச்சுப்போடுவா. அப்படி இல்லைன்னா தன் குழந்தைகளுக்கு வாரிவாரிக் கொடுப்பா. தங்கக்கட்டி கெடக்குது பொண்ணே, கடல்லே தங்கக்கட்டி கெடக்குது"

அத்துடன் ஒரு பேருண்மையையும் தன் மகளுக்கு உபதேசித்தாள் சக்கி:

"ஒழுக்கம் இருக்குதே, அதுதான் பொண்ணே பெரிசு, மரக்காத்தி ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து"

மிகுந்த கௌரவ பாவத்துடன் முக்கியமான எச்சரிக்கை ஒன்றை சக்கி அறிவித்தாள்:

"இதோப்பாரு, நீ வயசுவந்த பொண்ணு. சின்ன முதலாளிகளும் கண்தலை தெரியாமல் திரிகிற இந்தக் காலத்து இளவட்டப்பிள்ளைகளும் கண் போடுவாங்க"

சகல விஷயங்களையும் தெரிந்து கொண்டு விட்டது போலத்தான் சக்கி பேசினாள். அன்றிரவு கறுத்தம்மா உறங்கவில்லை. அந்த ரகசியத்தை வெளியாக்கிய பஞ்சமியிடம் அவளுக்குக் கோபமில்லை. இப்படிச் சொல்லிவிட்டாளே என்றும் அவள் எண்ணவில்லை. தவறு செய்து விட்டோம் என்ற உணர்வு அவளுக்கே இருந்ததால்தான் அவள் அவ்வாறு எண்ணவில்லையோ என்னவோ? ஒரு ஜன சமூகத்தில், நூற்றாண்டுகளாக, நிரந்தரமாக நிலைநின்றுவரும் வாழ்க்கைத் தத்துவம் அவளிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. இப்போதுதான் அது தெளிவான உருவம் பெறுகிறதோ என்னவோ? வழிபிசகி சின்னாபின்னமாய்ப் போய்விடுவோமோ என்ற பீதியும் அவளுக்கு ஏற்பட்டிருக்கலாம். அந்தப் பீதி இருக்கும் வரையிலும் அவள் பஞ்சமியிடம் கோபம் கொள்ளக் காரணம் இல்லை. கறுத்தம்மா அப்போது எந்த மனநிலையில் இருந்தாளோ அதிலிருந்து அவளைக் கிள்ளி எறியக் கிளம்பியது போல் ஒருபாட்டு, கடற்கரையிலிருந்து மிதந்துவந்து அவள் காதை அடைந்தது.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 108 04-04-2020 15:04:08

கறுத்தம்மா கவனித்தாள். பாடுவது பரீக்குட்டிதான். அவன் ஒன்றும் பாடகன் அல்ல. ஆனாலும் தோணியின் விளிம்பில் அமர்ந்தவாறு அவன் பாடிக்கொண்டிருக்கிறான். தான் அங்கிருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியவளுக்கு பின் அதை எப்படித்தான் தெரிவிப்பது.

தெரிந்து கொள்ள வேண்டியவள் தெரிந்து கொண்டுவிட்டாள். எட்டவேண்டிய இடத்தை எட்டிவிட்டது. கறுத்தம்மாவுக்கு இருக்கை கொள்ளவில்லை. யாரும் அறியாமல் இறங்கிச் சென்று விட்டால்? போகவேண்டிய இடமோ தோணிமறைவு. ஆபத்தான இடம். அவன் பாடிய பாடல் கடல்மேல் செல்லுகிற செம்படவர்கள் பாடுகிற பாட்டுத்தான். சிறிதுநேரம் செவிசாய்த்து இருந்துவிட்டோமென்றால் தானாகவே எழுந்து இறங்கிச் சென்று விடுவோமோ என்றுகூடக் கறுத்தம்மா பயந்தாள். விரல்களைக் காதினுள் திணித்துக் கொண்டாள். அதன்பின்பும் அப்பாடல் அவளுள்ளே ஊடுருவிச் செல்லத்தான் செய்தது.

(செம்மீன் புதினத்திலிருந்து ஒரு பகுதி)




## படைப்பு முகம்



தகழி சிவசங்கரன் (1912 –1999): மலையாள மொழியின் யதார்த்தவாத முற்போக்கு எழுத்தாளர்களில் முக்கியமானவர் தகழி சிவசங்கரன். இவர் மலையாள மொழியில் 36 நாவல்களையும் 500க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் ஒரு நாடகத்தையும் எழுதியுள்ளார். கேரளத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நிறுவி நிலைநாட்டியவர் தகழி. அத்துடன் கேரள சாகித்திய அகாதெமி என்ற அமைப்பை தலைமை ஏற்று திறம்பட நடத்தியிருக்கிறார். 'ஏணிப்படி' என்ற புதினத்திற்கு கேந்திர சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு இவருக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டது.

## படிப்போம் சுவைப்போம் — ஞானபீட விருது




ஞானபீட விருது (Jnanpith Award ) என்பது இந்தியாவில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயரிய விருதாகும். இவ்விருது, பாரதிய ஞானபீடம் என்ற பண்பாட்டு இலக்கியக் கழகத்தால் வழங்கப்படுகிறது. இது 1961இல் சாகு சாந்தி பிரசாத் ஜெயின் குடும்பத்தினரால் நிறுவப்பட்டது. 1965இல் முதன் முதலாக மலையாள எழுத்தாளர் ஜீ. சங்கர குருப்பிற்கு இவ்விருது வழங்கப்பட்டது. 'முதல் சத்தியம்' என்ற புதினத்திற்காக இந்த விருதைப் பெற்ற முதல் பெண் எழுத்தாளர் ஆஷா பூர்ணாதேவி.

ஓர் எழுத்தாளரின் சிறந்த படைப்பிற்காக 1982ஆம் ஆண்டு வரை ஞானபீட விருது வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஓர் எழுத்தாளரின் வாழ்நாளில் அவர் இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மொழிகளுள் சிறந்த எழுத்தாளருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. தமிழில் 1975இல் சித்திரப்பாவை புதினத்திற்காக அகிலனும், 2002இல் இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பிற்காக ஜெயகாந்தனும் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

# தாய்

**ரஷ்ய மூலம் – மார்க்ஸிம் கார்க்கி**
**தமிழில் – தொ.மு.சி. ரகுநாதன்**

**கதை முகம்**

*உலகம் முழுவதும் பதிப்பிக்கப்பட்டு, கோடிக்கணக்கானவர்களால் வாசிக்கப்பட்ட புதினம் கார்க்கியின் தாய். சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கமும் நிர்கதியான விவசாயிகளும் இளைஞர்களும் கொஞ்சம் கொஞ்சமாக நெஞ்சில் கனல் மூண்டு, ஒரு மகத்தான புரட்சியை நோக்கி எப்படி எழுச்சி பெறுகிறார்கள் என்பதை சிறந்த கதையம்சத்தோடு கார்க்கி இதில் தீட்டியிருக்கிறார். ஒரு மாபெரும் புரட்சியில் பெண்கள் செய்யும் தியாகங்கள் அவர்களின் பங்கினைப் பற்றி நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது இந்தப் புதினம்.*

*தாய் புதினம் மனிதனை மானுடப்படுத்தி ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் இலக்கியம் வகிக்கின்ற மகத்தான பங்கினை நமக்கு உணர்த்துகிறது. கலைநயம் மிக்க மிக நுட்பமான கருத்துப்பதிவு இந்தப் புதினம். இது உழைக்கும் மக்களின், வெகுஜனங்களின் மத்தியில் வாசிக்கும் அனைவரது மனதிலும் தனது ஆழமான வேர்களைப் பதித்துள்ளது. கார்க்கி அதையும் ஒரு தாயின் குரலாகப் பதிவு செய்திருப்பதுதான் இப்புதின வெற்றியின் ரகசியமாகும். அதனால்தான் இது காலங்களைக் கடந்து நிலைத்து நிற்கிறது.*

## தாய் – அத்தியாயம் – 6

தேநீர் தயாராகிவிட்டது. அதை எடுத்துக் கொண்டு தாய் அந்த அறைக்குள் நுழைந்தாள். விருந்தாளிகள் அனைவரும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்தார்கள். நதாஷா ஒரு மூலையில் விளக்கடியில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருக்கிறாள்.

"மனிதர்கள் ஏன் இப்படி மோசமாக வாழ்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால்..." என்று ஆரம்பித்தாள்.

"ஏன், அவர்களே மோசமானவர்களாக இருக்கிறார்கள்..." என்று குறுக்கிட்டான் ஹஹோல்.

"... அதற்கு, வாழ்க்கையை அவர்கள் எப்படித் தொடங்குகிறார்கள் என்று பார்க்க வேண்டும்..."

"நன்றாய்ப் பாருங்கள், கண்மணிகளே, நன்றாய்ப் பாருங்கள்" என்று தேநீர் தயாரித்தபடி சொன்னாள் தாய்.

எல்லோரும் மௌனமானார்கள்.

"நீ என்ன சொல்கிறாய், அம்மா!" என்று முகத்தைச் சுழித்துக்கொண்டே கேட்டான் பாவெல்.

"என்னவா?" அவள் ஒரு பார்வை பார்த்தாள்; எல்லோரும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். "என்னவோ நான் எனக்குள் பேசிக்கொண்டேன்" என்று குழறினாள் அவள்; "நீங்கள் நன்றாகப் பாருங்கள் என்று சொன்னேன்."

நதாஷா சிரித்தாள். பாவெல் உள்ளுக்குள் கிளுகிளுத்தான். "தேநீருக்கு நன்றி, அம்மா" என்றான் ஹஹோல்.

"தேநீரைக் குடித்துவிட்டு நன்றி சொல்லுங்கள்" என்றாள் அவள். பிறகு, தன் மகனை லேசாகப் பார்த்துவிட்டு "நான் உங்களுக்கு இடைஞ்சலாக நிற்கிறேனா?" என்று கேட்டாள்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 110 04-04-2020 15:04:09

"விருந்து கொடுக்கிற நீங்கள் விருந்தாளிகளான எங்களுக்கு எப்படி இடைஞ்சலாக இருக்க முடியும்?" என்று பதிலளித்தாள் நதாஷா. "எனக்குக் கொஞ்சம் தேநீர் கொடுங்கள். உடலெல்லாம் ஒரேயடியாய் நடுக்குகிறது கால்கள் ஐஸைப் போலவே குளிர்ந்து விட்டன" என்று ஒரு குழந்தையைப்போல பரிதாபமாகக் கேட்டாள் அவள்.

"இதோ, இதோ" என்று அவசர அவசரமாகக் கத்தினாள் தாய்.

நதாஷா தேநீரைப் பருகிய பின்னர், உரக்கப் பெருமூச்சு விட்டாள். அவளது சடையைத் தோள்மீது இழுத்துப் போட்டுக் கொண்டு, தன் கையிலிருந்த மஞ்சள் அட்டைபோட்ட படங்கள் நிறைந்த புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தாள். தேநீரை ஊற்றும்போதும், பாத்திரங்களை அகற்றும்போதும் சத்தமே உண்டாகாதபடி பதனமாகப் பரிமாறிக்கொண்டிருந்த தாய், நதாஷா வாசிப்பதையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளது மணிக்குரல், கொதிக்கும் தேநீர்ப் பாத்திரத்தின் ஆவி இரைச்சலின் மங்கிய ரீங்காரத்தோடு இணைந்து முயங்கி ஒலித்தது. ஒரு காலத்தில் குகைகளில் வாழ்ந்து, கற்களைக் கொண்டு வேட்டையாடிய காட்டு மனிதர்களைப் பற்றிய அழகான கதைகள் சங்கிலித் தொடர் போலப் பிறந்து, கட்டுலைந்து விரிந்து, அந்த அறை முழுதும் நிரம்பி ஒலி செய்ய ஆரம்பித்தன. இந்தக் கதைகளெல்லாம் தாய்க்குப் பாட்டிக் கதையைப்போல் இருந்தன.அவள் தன் மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தமாதிரி விஷயங்களைத் தெரிந்து கொள்வதை அவர்கள் ஏன் தடைசெய்யவேண்டும் என்பதைக் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. ஆனால், நதாஷா வாசிப்பதைக் கேட்பதில் தாய்க்கு விரைவில் அலுப்புத் தட்டிவிட்டது. எனவே, வந்திருந்த விருந்தாளிகளை, அவர்களோ அல்லது தன் மகனோ அறிந்து கொள்ள முடியாதபடி, கூர்ந்து நோக்கி ஒவ்வொருவரையும் அளந்து பார்த்துத் தனக்குத் தானே மதிப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

பாவெல் நதாஷாவுக்கு அருகில் அமர்ந்திருந்தான். அங்கிருந்தவர்களுக்குள் அவனே அழகானவன். நதாஷா குனிந்து வாசித்துக் கொண்டிருந்ததால், அடிக்கடி முன்புறமாக வந்துவிழும் தலைமயிரை ஒதுக்கிவிட்டுக் கொண்டிருந்தாள். படிப்பதை நிறுத்திவிட்டு, தலையை ஆட்டி, குரலைத் தாழ்த்தி படித்த விஷயத்தைப் பற்றிய தனது அபிப்ராயத்தையோ விமர்சனத்தையோ தனக்கு எதிராக இருப்பவர்களை அன்புடன் நோக்கி அவள் சொன்னாள். ஹஹோல் தனது மார்பை மேஜை விளிம்பின்மீது சாய்த்துக் கொண்டு, ஓரக்கண்ணால் தான் திருகிவிட்டுக் கொள்ளும் மீசை முனைகளைப் பார்க்க முயன்று கொண்டிருந்தான். நிகலாய் விஸோவ்ஷிகோவ் நாற்காலியில் கம்பு மாதிரி விறைப்பாக நிமிர்ந்து, கைகளால் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்; மெலிந்த உதடுகள் கொண்ட அவனது அம்மைத் தழும்பு முகம், புருவமின்றி எந்தவித உணர்ச்சி பாவமும் இல்லாமல் ஒரு பொம்மையின் முகத்தைப் போலவே இருந்தது. பித்தளைத் தேநீர்ப் பாத்திரத்தில் தெரியும் தனது முகத்தின் பிரதிபிம்பத்தையே அவன் தன் குறுகிய கண்கள் இமைக்காமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மூச்சு விடுகிறானா இல்லையா என்பதே சந்தேகமாயிருந்தது. சின்னவனான பியோதர், படிப்பதைக் கேட்கும்போது தன் உதடுகளைச் சப்தமற்று அசைத்துக் கொண்டிருந்தான்; புத்தகத்தின் வார்த்தைகளைத் தனக்குத் தானே திரும்பச் சொல்லிக் கொள்வது போலிருந்தது அந்த உதடுகளின் அசைவு. அவனது அடுத்த நண்பன் ஒரேயடியாய்க் குனிந்து குறுகி, முழங்காலின்மீது முழங்கையை ஊன்றி, முகத்தை உள்ளங்கைகளில் தாங்கி சிந்தனை வயப்பட்டசிறுபுன்னகையோடுஅமர்ந்திருந்தான். பாவெலுடன் வந்த இளைஞர்களில் ஒருவனுக்கு சுருள் சுருளான செம்பட்டை மயிரும், களி துள்ளும் பசிய கண்களும் இருந்தன. நிலைகொள்ளாமல் அமைதியற்று நெளிந்து கொடுத்துக் கொண்டிருந்த அவன் எதையோ சொல்ல விரும்புவதுபோல தோன்றியது. இன்னொருவனுக்கு வெளுத்த தலைமயிர்; நன்றாக ஒட்ட வெட்டி விடப்பட்ட கிராப். அவன் தன் தலையைக் கையினால் தடவிக் கொடுத்துக் கொண்டு தரையையே பார்த்துக்



கொண்டிருந்தான்; எனவே, அவனது முகம் சரியாகத் தெரியவில்லை. அந்த அறையில் ஏதோ ஒரு புதிய மங்களகரமான சூழ்நிலை குடிபுகுந்த மாதிரி இருந்தது. தாயின் உள்ளத்தில் இதுவரை தோன்றாத ஏதோ ஓர் அசாதாரண உணர்ச்சி மேலோங்கியது.

தாய் தன் கண்களை மூடி, நெடுமூச்செறிந்தாள்.

"மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நான் அறிய விரும்பவில்லை; மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதையே அறிய விரும்புகிறேன்" என்று எதிர்வாதம் பேசும் குரலில் சொன்னான் நிகலாய்.

"அதுதான் சரி" என்று கூறிக்கொண்டே எழுந்தான் அந்தச் செம்பட்டைத் தலையன்.

"நீ சொல்வதை நான் ஒப்புக் கொள்ளவில்லை" என்று கத்தினான் பியோதர். வாக்குவாதம் பலத்தது, வார்த்தைகள் தீப்பிழம்புகள் போல சுழலத் தொடங்கின. அவர்கள் எதைப்பற்றி இப்படி சத்தம் போட்டுக் கொள்கிறார்கள் என்று தாய்க்குத் தெரியவில்லை. எல்லோருடைய முகங்களும் உத்வேக உணர்ச்சியினால் ரத்தம் பாய்ந்து சிவந்து போயிருந்தன. எனினும், எவரும் நிதானம் இழக்கவில்லை. அவளுக்குக் கேட்டுப் பழக்கப்பட்டுப் போயிருந்த எந்த ஆபாச ஏச்சுப்பேச்சுகளையும் அவர்கள் பிரயோகிக்கவில்லை.

"இந்தப் பெண்ணின் முன்னிலையில் அப்படிப் பேசுவதற்கு அவர்கள் வெட்கப் படுகிறார்கள்" என்று தீர்மானித்துக் கொண்டாள் தாய்.

நதாஷாவின் முகத்தில் தோன்றிய உக்கிரபாவத்தை காண்பது தாய்க்குப் பிடித்திருந்தது. நதாஷாவோ அவர்கள் அனைவரையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். இவர்கள் அனைவருமே இன்னும் குழந்தைகள்தான் என்று கருதிப் பார்ப்பது போலிருந்தது அந்தப் பார்வை.

"ஒரு நிமிஷம் பொறுங்கள், தோழர்களே!" என்றவள் திடீரென்று கத்தினாள். உடனே, எல்லோரும் வாய்மூடி மௌனமாகி அவளையே பார்த்தனர். "நாம் சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை யார் ஒப்புக் கொள்கிறார்களோ, அவர்கள் சொல்வதே சரியானது. நம்மிடமுள்ள பகுத்தறிவின் ஒளியை நன்றாகத் தூண்டிவிட்டுக் கொள்ளவேண்டும். கீழ்ப்பட்டவர்கள் நம்மை நன்றாகப் பார்க்கட்டும்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 112 04-04-2020 15:04:10

ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நம்மிடத்தில் நேர்மையான, உண்மையான தீர்ப்பும் தீர்மானமும் இருந்தேயாகவேண்டும். நாம் உண்மையை, பொய்யை முழுமையாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஹஹோல் அவள் கூறியதைக் கேட்டு, அவளது பேச்சுக்குத் தக்கபடி தலையை ஆட்டிக் கொண்டிருந்தான். நிகலாயும் செம்பட்டைத் தலையனும் பாவெலுடன் வந்த இன்னொரு பையனும் ஒரு தனி கோஷ்டியாகப் பிரிந்து நின்றார்கள். என்ன காரணத்தாலோ தாய்க்கு அந்தக் கோஷ்டியினரைப் பிடிக்கவில்லை. நதாஷா பேசி முடிந்தபிறகு, பாவெல் எழுந்து நின்றான்.

"நமக்கு வயிறுமட்டும் நிரம்பினால் போதுமா? இல்லை, அதுமட்டும் இல்லை!" என்று அந்த மூவரையும் நோக்கி அமைதியாகச் சொன்னான். "நமது முதுகிலே குதிரையேறிக் கொண்டிருப்பவர்களுக்கு, நமது கண்களைத் திரையிட்டு மூடிக் கட்டி விட்டவர்களுக்கு, நாம் எல்லாவற்றையும் பார்க்கவே செய்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் வேண்டும். நாம் முட்டாள்கள் அல்ல; நாம் மிருகங்கள் அல்ல – வயிற்றை நிரப்புவதோடு திருப்தி அடைந்துவிடுவதற்காக மட்டுமல்லாமல், கௌரவமுள்ள மனிதர்களாக வாழ விரும்புகிறோம். நம்மை நரக வாழ்வுக்கு உட்படுத்தி, நம்மை ஏய்த்து வாழ்ந்து கொண்டிருக்கும், நம்மைவிடச் சிறந்த அறிவாளிகள் என்று தம்மைக் காட்டிக் கொள்ளும் நமது எதிரிகளுக்கு, நாம் அவர்களுக்குச் சமதையான அறிவாளிகள், ஏன், அவர்களைவிடச் சிறந்த அறிவாளிகள் என்பதைக் காட்டித்தான் ஆகவேண்டும்!"

அவன் பேச்சைக் கேட்டுத் தாயின் உள்ளத்தில் ஒரு பெருமை உணர்ச்சி உள்ளோட்டமாக ஓடிச் சிலிர்த்தது. "அவன் எவ்வளவு அழகாகப் பேசினான்!"

"போதுமான அளவுக்குச் சாப்பிடுபவர்கள் எவ்வளவோபேர் இருக்கிறார்கள். ஆனால், சிலர்தான் நேர்மையானவர்கள்!" என்றான் அந்த ஹஹோல். "முடைநாற்றமெடுத்து நாறும் இன்றைய கேவல வாழ்வுக்கும் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் மனிதகுலத்தின் சகோதரத்துவ சாம்ராஜ்யத்துக்கும் இடையே நாம் ஒரு பாலம் கட்டியாகவேண்டும். தோழர்களே! அதுதான் இன்று நம்முன் நிற்கும் வேலை!"

"போராடுவதற்குரிய காலம் வந்துவிட்டதென்றால், ஏன் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கரகரத்த குரலில் ஆட்சேபித்தான் நிகலாய்.

நடு இரவுக்குப் பிறகுதான் அந்தக்கூட்டம் கலைந்தது. கலையும்போது நிகலாயும் செம்பட்டைத் தலையனும்தான் முதலில் வெளியேறினர். இதைக் கண்டதும் தாய்க்கு அவர்களைப் பிடிக்கவில்லை.

அவர்களை அவள் வணங்கி வழியனுப்பும்போது "உங்களுக்கு ஏன் இத்தனை அவசரமோ?" என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டாள்.

"நஹோத்கா! என்னை வீடுவரை கொண்டுவந்து விடுகிறீர்களா என்று கேட்டாள் நதாஷா. "கண்டிப்பாய்" என்று பதிலளித்தான் ஹஹோல்.

நதாஷா தனது மேலுடையணிகளைச் சமையலையில் அணிந்து கொள்ளும் போது தாய் அவளைப்பார்த்து கேட்டாள்: "உங்கள் காலுறைகள் இந்தக் குளிருக்கு மிகவும் மெல்லியவை. நான் வேண்டுமானால் உங்களுக்கு ஒரு கம்பளி உறைகள் தரட்டுமா?"

"நன்றி, பெலகேயா நீலவ்னா. ஆனால், கம்பளி உறை காலெல்லாம் குத்துமே!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் நதாஷா.

"காலில் குத்தாத கம்பளி உறை நான் தருகிறேன்" என்றாள் தாய். நதாஷா ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தாள். அந்தப்பார்வை அந்த வயதான தாயை என்னவோ செய்தது: துன்புறுத்தியது. "என் அசட்டுத்தனத்தை மன்னித்து விடுங்கள். நான்இதயப்பூர்வமாகச் சொன்னேன்" என்று மெதுவாகச் சொன்னாள் தாய்.

"நீங்கள் எவ்வளவு அன்பாய் இருக்கிறீர்கள்!" என்று அமைதியுடன் கூறிவிட்டு, தாயின் கரத்தைப் பற்றிக் கனிவோடு இறுகப் பிடித்து, விடைபெற முனைந்தாள் நதாஷா. "போய்வருகிறேன் அம்மா!" என்று அவளது கண்களையே பார்த்தான் ஹஹோல்: பிறகு அவன் நதாஷாவுக்குப் பின்னால், வாசல்நடையில் குனிந்து சென்றான். தாய் தன் மகனை நோக்கினாள்: அவன் வாசல் நடையருகே புன்னகை புரிந்தவாறே நின்று கொண்டிருந்தான். "நீ எதைப் பார்த்துச் சிரிக்கிறாய்?" என்று அவள் குழப்பத்துடன் கேட்டாள்.

"சும்மாதான், குஷிபிறந்தது, சிரித்தேன்." "நான் கிழவியாய் இருக்கலாம்; முட்டாளாய் இருக்கலாம். இருந்தாலும் எனக்கும் நல்லதைப் புரிந்துகொள்ள முடியும்" என்று லேசான மனத்தாங்கலுடன் சொன்னாள் அவள்.

"ரொம்ப நல்லது! நேரமாகிவிட்டது, படுத்துக் கொள்ளுங்களேன்!" என்றான் அவன். "படுக்கத்தான் போகிறேன்" அவள் மேஜையிலுள்ள பாத்திர பண்டங்களை அகற்றுவதில் பெரும் பரபரப்புக் காட்டிக் கொண்டாள். அதில் அவளுக்கு ஒரு ஆனந்தம். அந்தப்பரபரப்பில் மேலெல்லாம் வியர்த்துக்கூட கொட்டிவிட்டது. அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிமையோடு நடந்தேறி, அமைதியோடு முற்றுப் பெற்றதை எண்ணி அவள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

"பாஷா, நல்லா யோசனை பண்ணித்தான் எல்லாம் செய்திருக்கிறாய்!" என்று சொன்னாள் அவள். "அந்த ஹஹோல் ரொம்ப நல்லவன். அந்தப் பெண் – அம்மாடி! அவள் எவ்வளவு கெட்டிக்காரியாய் இருக்கிறாள்! அவள் யார்?"

"ஓர் ஆசிரியை!" என்று சுருக்கமாகப் பதில் கூறிவிட்டு மேலும் கீழும் நடந்தான் பாவெல். "அவள் மிகவும் ஏழையாகத்தான் இருக்கவேண்டும். மோசமாகத்தான் உடை உடுத்தியிருந்தாள். அவளுக்கு லகுவில் சளிபிடித்துவிடும். அவளது பெற்றோர்கள் எங்கே?"

"மாஸ்கோவில்" என்று பதில் கூறிவிட்டு, அவன் தன் தாயருகே வந்து நின்று மென்மையாக, உறுதி தோய்ந்த குரலில் சொன்னான்: "அவளது தந்தை ஒரு பணக்காரர். அவர் இரும்பு வியாபாரி. அவருக்குச் சொந்தத்தில் நிறைய கட்டடங்கள் உண்டு. ஆனால், அவள் தன் வாழ்க்கையில் இந்த வழியைத் தேர்ந்தெடுத்ததால், அவளை வெளியேற்றிவிட்டார் அவர். அவள் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவள்; விரும்பியதெல்லாம் கிட்டக்கூடிய வாழ்க்கைதான் வாழ்ந்தாள்; ஆனால் இன்றோ அவள் இந்த இரவில், ஏழு கிலோமீட்டர் நடந்து செல்கிறாள் ..."

"இந்தச் செய்தியைக் கேட்டுத் தாய் திக்பிரமை அடைந்தாள்; அறையின் மத்தியில் நின்றுகொண்டு புருவத்தை உயர்த்தித் தன் மகனைப் பார்த்தாள்; பிறகு அமைதியாகக் கேட்டாள்: "அவள் நகருக்கா போகிறாள்?"

"ஆமாம்"

"ச்சூ! ச்சூ! பயமில்லையா அவளுக்கு?"

"ஊஹூம். அதெல்லாம் பயப்படமாட்டாள்" என்று கூறிச் சிரித்தான் பாவெல்.

"ஆனால்... ஏன் போகணும்? இன்றிரவு இங்கு தங்கியிருக்கலாமே, என்னோடு படுத்துக் கொண்டிருக்கலாமே!"

"அது சரியல்ல. காலையில் இங்கு அவளை யாரும் பார்த்துவிடக்கூடாது. அதனால் சிக்கல் வரும்."

அவனது தாய் ஜன்னலுக்கு வெளியே ஒரு சிந்தனையுடன் பார்த்துவிட்டுக் கேட்டாள். "இதிலெல்லாம் என்ன ஆபத்து இருக்கிறது, என்ன சட்ட விரோதம் இருக்கிறது என்பது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. பாவெல்! நீங்கள் தப்பாக ஒன்றும் செய்யவில்லை, இல்லை... செய்கிறீர்களா?" என்று அமைதி நிறைந்த குரலில் கேட்டாள். அதைப்பற்றி அவ்வளவு தீர்மானமாக அவளால் சொல்ல முடியவில்லை. எனவே, தன் மகனின் தீர்ப்பை எதிர்பார்த்தாள். "நாங்கள் தப்பாக எதுவுமே செய்ய மாட்டோம்" என்று அவளது கண்களை அசையாமல் பார்த்தவாறு உறுதியாகச் சொன்னான் பாவெல்.

"ஆனால், நாங்கள் அனைவரும் என்றோ ஒருநாள் சிறைக்குத்தான் போவோம். நீயும் இதைத் தெரிந்து வைத்துக்கொள்." அவளது கைகள் நடுங்க ஆரம்பித்தன. "ஆண்டவன் அருளிருந்தால் நீங்கள் எப்படியாவது தப்பித்து விடுவீர்கள் இல்லையா?" என்று அமுங்கிப்போன குரலில் கேட்டாள்.

"முடியாது" என்று மெதுவாகச் சொன்னான் அவன். "நானுன்னை ஏமாற்ற விரும்பவில்லை. தப்பிக்கவே முடியாது!" அவன் புன்னகை செய்தான். "சரி, நீ மிகவும் களைத்திருக்கிறாய். போ, படுக்கப்போ. நல்லிரவு!".

பாவெல் சென்ற பிறகு, தன்னந்தனியாக நின்ற தாய் ஜன்னலருகே வெளியே பார்த்தவாறே நின்று கொண்டிருந்தாள். ஜன்னலுக்கு வெளியே மூட்டமாய் குளிராய் இருந்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த வீட்டுக் கூரைகளின்மீது படர்ந்துள்ள பனித்துகள்களைக் காற்று விசிறியடித்து வீசியது: அந்த ஊதைக்காற்று சுவர்களில் மோதி அறைந்து, தரையை நோக்கி வீசும்போது கோபாவேசமாய் ஊளையிட்டது; சிதறிக் கிடக்கும் பனிப்படலங்களை தெருவழியே விரட்டியடித்துக் கொண்டு பின்தொடர்ந்தது.

(தாய் புதினத்திலிருந்து ஒரு பகுதி)

### படைப்பு முகம்






மார்க்ஸிம் கார்க்கி (1868 – 1936): உலகப்புகழ் பெற்ற இலக்கியப் படைப்பாளர்கள் வரிசையில் முன்நிற்பவர் மாக்சிம் கார்க்கி. இவர் ரஷ்யாவிலுள்ள நிழ்னி நோவோகார்டு என்னும் இடத்தில் பிறந்தார். இயற்பெயர் அலெக்ஸி மாக்சிகொவிச் பெஸ்கோவ். இவர் எழுதிய தாய் என்னும் புதினம் உலகப்புகழ் பெற்றது. இவர் செருப்புத் தைப்பது, மூட்டை தூக்குவது, மண்பாண்டம் செய்வது, வேட்டையாடுவது, ரயில் பாதை காவலன், மீன்பிடித்தொழில் செய்வது, இடுகாட்டுக் காவலன், பிணம் சுமத்தல், நாடக நடிகன், பழ வியாபாரி என பலதரப்பட்ட வேலைகளையும் செய்தவர். வாழ்க்கையின் வறுமையான பக்கங்களைத் தாம் அனுபவித்ததால்தான் உலகச் சிறப்புமிக்க உன்னத காவியத்தை அவரால் படைக்க முடிந்தது.

ரஷ்யப் புரட்சியாளர் லெனினுடன் ஏற்பட்ட தொடர்பால் இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர். ஒரு மகனை நேசிப்பதைப்போல் லெனின் கார்க்கியை நேசித்தார். லெனின் புரட்சி நிதிவேண்டி கார்க்கியை அமெரிக்காவுக்கு அனுப்பினார். அங்கு அகிரோந்தாக் மலைப்பகுதியில் அமர்ந்து அவரால் எழுதப்பட்டதுதான் 'தாய்' புதினம். கார்க்கி ஏராளமான நூல்களை எழுதியிருந்தாலும் உலகத்தை ரஷ்யாவின் பக்கம் திரும்பச் செய்தது இந்தப்புதினம்தான்.

### படிப்போம் சுவைப்போம்

### நோபல் பரிசு

ஆல்பிரட் நோபலின் பெயரில் 1895ஆம் ஆண்டு நோபல் அறக்கட்டளை நிறுவப்பட்டது. இது சுவீடிய அரசு கல்விக்கழகத்தாலும் கரோலின்கா நிறுவனத்தாலும் நார்வே நோபல் குழுவாலும் தனியொருவருக்கோ நிறுவனங்களுக்கோ வழங்கப்படுகிறது. 1901ஆம் ஆண்டு முதல் வேதியியல், இயற்பியல், இலக்கியம், அமைதி, மருத்துவம் ஆகிய துறைகளில் பெரும்பங்களிப்பு நல்கியவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. 1968ஆம் ஆண்டிலிருந்து பொருளியலுக்கான நோபல் நினைவு பரிசும் வழங்கப்பட்டு வருகின்றது.



இரவீந்திர நாத் தாகூர் 1913ஆம் ஆண்டு தமது 'கீதாஞ்சலி' என்ற நூலுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார்.



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 115 04-04-2020 15:04:11

# கண்ணாடி

## 1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

*1 சா. கந்தசாமியின் சாயாவனம் புதினத்தின்படி கீழ்க்காண்பவை எதனோடு பொருந்தும்?*

| | | |
|---|---|---|
| *1. ஆரண்யம்* | – | *அ. குமாரசாமி* |
| *2. மாங்குடி* | – | *ஆ. தலையாரி* |
| *3. கப்பக்காரர்* | – | *இ. வானரப்படை* |
| *4. புலிப்பல்* | – | *ஈ. ராமு* |

*அ) 1 – ஆ, 2 – இ, 3 – அ, 4 – ஈ*

*ஆ) 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 – ஆ*

*இ) 1 – ஈ, 2 – ஆ, 3 – இ, 4 – அ*

*ஈ) 1 – அ, 2 – ஈ, 3 – இ, 4 – ஆ*

*2. நீங்க ரொம்ப சுருக்கா மரம் வெட்டுறீங்க. உங்க மாதிரி இஞ்ச யாரும் வெட்ட மாட்டாங்க – யார் யாரிடம் கூறியது?*

*அ) பழனியாண்டி சிதம்பரத்திடம்* *ஆ) கலியபெருமாள் பழனியாண்டியிடம்*

*இ. தலையாரி கலியபெருமாளிடம்* *ஈ. சிதம்பரம் சுப்ரமணியிடம்*

*3. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள புதினங்களில் அதே பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்ட புதினம்.*

*அ) சாயாவனம்* *ஆ) மாறுதல்* *இ. செம்மீன்* *ஈ. தாய்*

*4. அக்கா நான் இங்கு வந்தது ஒருவேளை சாப்பாட்டுக்கு இல்லக்கா. ஒரு வேலை போட்டுக் கொடுங்க – யார் யாரிடம் கூறியது.*

*அ) காவேரி சுசீலாவிடம்* *ஆ) ஆதிலெட்சுமி சின்னத்தாயிடம்*

*இ. கம்சலை ராகினியிடம்* *ஈ. அஞ்சலை காவேரியிடம்*

*5. "கோடிக்கால் பூதமடா தொழிலாளி கோபத்தின் ரூபமடா. இது சாவில்லாத வார்த்தை" – யார் கூற்று*

*அ) சங்கரன்* *ஆ) ராகினி* *இ. காவேரி* *ஈ. சுசீலா*

*6. பொருந்தும் இணையைக் கண்டறிக*

*அ) சாயாவனம் – திலகவதி* *ஆ) மாறுதல் – அசோகமித்திரன்*

*இ. கல்மரம் – ஹெப்சிபா ஜேசுதாசன்* *ஈ. புத்தம்வீடு – சா. கந்தசாமி*



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 116 04-04-2020 15:04:11

7. விளக்கம் கண்டு விடை எழுதுக

ஒரு பதிப்பாளராகவும் இயங்கி, சிறந்த உலக இலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் -----------------

8. புத்தம் வீடு கதையில் வரும் அக்கானி என்பது

அ) வீட்டின் ஒரு பகுதி ஆ) பனையேற உதவும் ஒரு கருவி

இ. கதாபாத்திரத்தின் பெயர் ஈ. குடிக்கும் பானம்

9. விளக்கம் கண்டு விடை எழுதுக.

'சுடுமண் சிலைகள்' என்ற இவரது தமிழகப் பாரம்பரியக் கலைகள் பற்றிய குறும்படம் சர்வதேச விருது பெற்றது---------------------

10. ஒழுக்கம் இருக்குதே அதுதான் பொண்ணே பெரிசு. மரக்காத்தி ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து. – யார் கூற்று.

அ) பரீக்குட்டி ஆ) பஞ்சமி இ. சக்கி ஈ. கறுத்தம்மா

11. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) சின்னத்தாயி – இட்லிக்காரம்மா ஆ) வெள்ளையன் – கிளீனர்

இ. மாரிமுத்து – ஆட்டோக்காரர் ஈ. வீராச்சாமி – மேஸ்திரி

12. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) கருவேலமரம் – முள் ஆ) நெட்டிலிங்கம் – சாது

இ. ஈச்சமரம் – போர் ஈ. பூவரசு – வைரம்

13. கூற்று – யாரோ செய்த தவறுக்கு தன் அப்பாவிக் கணவன் பழியும் தண்டனையும் சுமக்கும்படி ஆனது, ராகினிக்குத் தாங்க முடியாத வேதனையை ஏற்படுத்தியது.

காரணம் – ஒரு தளம் கட்டி முடித்த பின்னும், அங்கு நடக்கிற மோசடியைக் கண்டு பிடிக்காததற்காக ஆர்.ஆர்.எம் காசியை வேலையை விட்டு அனுப்பினான்.

அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

ஆ) கூற்று சரி. காரணம் தவறு.

இ. கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமன்று.

ஈ. கூற்று காரணம் இரண்டும் தவறு.

14. நீங்க அவளுக்குச் சொந்த அக்காவா? – இங்கு அவளுக்கு என்பது யாரைக் குறிக்கும்?

அ) பங்கஜம் ஆ) அம்மா இ. நிர்மலா ஈ. ஆசிரியர்

15. இதில் சாகித்ய அகாதமி விருது பெறாத, பொருந்தாத இணையைக் கண்டறிக

அ) கல்மரம் – ஜி. திலகவதி ஆ) அப்பாவின் சிநேகிதர் – அசோகமித்திரன்

இ. தாய் – மார்க்ஸிம் கார்க்கி ஈ. விசாரணைக் கமிஷன் – சா. கந்தசாமி



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 117 04-04-2020 15:04:11

16. கூற்று – பங்கஜத்துக்குத் தன் தங்கையின் பழக்கத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

காரணம் – உரிமையுடன் பிறர் பொருளை எடுத்துச் செல்லும் தைரியம் அவளுக்குக் கிடையாது.

அ) கூற்று சரி. காரணம் தவறு

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமன்று.

இ. கூற்று காரணம் இரண்டும் சரி.

ஈ. கூற்று காரணம் இரண்டும் தவறு.

17. "நன்றி. பெலகேயா நீலவ்னா. ஆனால் கம்பளி காலெல்லாம் குத்துமே" – இதில் பெலகேயா நீலவ்னா யார்?

அ) தாய் ஆ) இளம்பெண் இ. அழகியஇளைஞன் ஈ. கிராப் தலையன்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

18. கணையாழி இலக்கிய மாத இதழில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றியவர்…………………….

19. பாரதியாரின் குயில்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ……………………

20. மார்க்ஸிம் கார்க்கி பிறந்த ஊரான நிழ்னி நோவோகார்டு உள்ள நாடு………………

## குறுவினா

1. விபத்துக்குப்பின் கம்சலையின் நிலை என்ன?
2. திருமணத்தன்று ராகினி காசியிடம் கேட்ட கேள்வி என்ன? அப்பொழுது காசியின் மனநிலை என்ன?
3. ராகினியைக் கணக்குப்பிள்ளை வேலைக்கு அமர்த்தியதற்கு ஆர்.ஆர்.எம் மேனேஜரிடம் கூறிய காரணங்கள் எவை?
4. எழுத்தாளர் அசோகமித்திரன் என்னென்ன பிரிவுகளில் நூல்கள் எழுதியுள்ளார்?
5. பள்ளியாசிரியர் நிம்மியைப் பற்றி பங்கஜத்திடம் கூறிய புகார் என்ன?
6. பங்கஜத்தை வைத்தியத்திற்கு அழைத்துச் சென்ற மருத்துவமனையின் சூழலை அசோகமித்திரன் எவ்வாறு விவரிக்கிறார்?
7. இற்செறிப்பு – விளக்கம் தருக.
8. அக்கானி, அலுங்கு என்பன யாவை?
9. சாயாவனம் புதினத்தில் இடம்பெறும் செடி, கொடிகளின் பெயர்களை எழுதுக.
10. அருவாக் காயம்பட்ட சிதம்பரத்திடம் தன் அம்மாவின் கை வைத்தியமாகக் கலியபெருமாள் கூறியது யாது?
11. பரீக்குட்டியின் சிறுவயதுத் தோற்றத்தைத் தகழி எங்ஙனம் விவரிக்கிறார்?
12. பரீக்குட்டியிடம் பேசிக் கொண்டிருந்ததை தன் அம்மாவிடம் தெரிவித்த பஞ்சமியைக் கறுத்தம்மா ஏன் கோபிக்கவில்லை?
13. வாசிக்கும் நதாஷா குறித்துத் தாய் தனக்குத்தானே எவ்வாறு மதிப்பிட்டாள்?
14. காலில் குத்தாத கம்பளி உறை நான் தருகிறேன் – யார் யாரிடம் கூறினார்?



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 118 04-04-2020 15:04:11

### சிறுவினா

1. *சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளாகச் சுசீலா கூறியவை யாவை?*
2. *தனக்கே கொத்தனார் ஆகணும்னு ஆசை உண்டாவதாகக் காவேரி கூறியது ஏன்?*
3. *பங்கஜத்தின் அம்மா மீண்டும் பழைய வீட்டிற்கே திரும்பிச் செல்வதற்குரிய காரணங்கள் யாவை?*
4. *வாழ்க்கைத் திருவிளையாடல் என்று ஹெப்சிபா ஜேசுதாசன் விளக்குவது யாது?*
5. *மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் எத்தகையது என சா.கந்தசாமி விவரிக்கிறார்?*
6. *காவேரி ஆற்றுடன் தலையாரியின் அனுபவத்தை விவரி.*
7. *செம்மீன் புதினத்தில் சக்கி கூறும் கற்புடையாள் கதையை எழுதுக.*
8. *அவன் எவ்வளவு அழகாகப் பேசினான் என்று தாயைப் பெருமை கொள்ளச் செய்த பாவெலின் பேச்சு குறித்து எழுதுக.*

### நெடுவினா

1. *கல்மரம் புதினத்தில் சுசீலா கட்டடத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து எழுதுக.*
2. *முதலாளிக்கு ஆதரவாக இருந்த ராகினி, தொழிலாளர்களுக்கு ஆதரவாக மாறிய விதத்தினை விளக்குக.*
3. *வாழ்வின் சிறுசிறு பிரச்னைகளை நேர்மறையாக எதிர்கொள்ளும் மனப்பாங்கே சிறந்தது – இக்கூற்றைப் பங்கஜம் கதாபாத்திரத்தின்வழி ஆராய்க.*
4. *சாயாவனம் புதினத்தில் சிதம்பரம் கரும்பு ஆலை நிறுவ, வனத்தை அழித்து மேற்கொண்ட முயற்சிகளை உன்பார்வையில் மதிப்பிடுக.*
5. *வந்திருந்த விருந்தாளிகளை அவர்கள் அறியாதபடி கூர்ந்து நோக்கி, தாய் தனக்குத் தானே எவ்வாறு மதிப்பிட்டாள்?*

## படிப்போம் பயன்படுத்துவோம்

1. *கீழ்க்காணும் காட்சிக்கேற்ப, உங்கள் கற்பனையில் கதை ஒன்றை எழுதுக.*





12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 119 04-04-2020 15:04:11

2. நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கல்மரம் என்னும் கதையைக் கீழ்க்காணும் தலைப்புகளில் அட்டவணைப்படுத்தி எழுதுக.

| | | |
|---|---|---|
| 1 | கதைக்கருவைத் தேர்ந்தெடுத்த முறை | |
| 2 | கதையை நடத்திச்செல்லும் அணுகுமுறை | |
| 3 | கையாளும் மொழிநடை | |
| 4 | கதையின் வடிவ அளவு | |
| 5 | கதைவழி உணர்த்தப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் | |

3. கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, பத்துப் பக்கத்திற்குமிகாமல் நும் கற்பனை கலந்து கதை எழுதுக. மறவாமல் கதைக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

படிப்படியாக முன்னேறுகிறான் ஒருவன் – கடின உழைப்பை முன்னிறுத்திச் சொந்தமாக ஆடை ஏற்றுமதி நிறுவனம் நடத்துகிறான் – நாளுக்குநாள் நண்பர்கள் எண்ணிக்கை கூடுகிறது – உழைத்த பணமெல்லாம் வீணாகப் போகிறது – அறிவுறுத்தும் மனைவியையும் அன்புகொண்ட பிள்ளைகளையும் இழக்கிறான் – எல்லாவற்றையும் இழந்தபின்னரே தன்னிலை உணர்கிறான்– திருந்தினானா? மனம் வருந்தினானா? கதையின் முடிவு உங்கள் கையில்! – இனிக் கதையைத் தொடர்க.

## செயல்திட்டம்

1. நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கதைகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அக்கதையின் கரு, கதைப்போக்கு, கதை மாந்தர், கதை உணர்த்தும் செய்தி, அந்தக் கதை உங்களை எவ்வாறு கவர்ந்தது முதலியவற்றைத் தொகுத்து ஒப்படைப்பாக தருக.

2. உங்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்திய ஏதேனும் ஒரு நிகழ்வைப் பதினைந்து பக்கங்களுக்கு மிகாமல் கதைவடிவில் உருவாக்குக.

3. கீழ்க்காணும் தலைப்புகளைக் கதையின் கருவாகக்கொண்டு, பத்துப் பக்கங்களுக்குமிகாமல் கதை எழுதி ஒப்படைக்க.

   1. மனிதநேயம், 2. உழைப்பின் மேன்மை, 3. நாட்டைக் காப்போம்



12th ADVNCEl Tamil - Chap 1&2.indd 120 04-04-2020 15:04:11